# ஞானச்சுடர்

ஆனி 2019




258 ஆவது மலர்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



பற்றற்றே மென்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்
றேதம் பலவுந் தரும்.

**பொருள்:** எமக்கு ஆசை இல்லை என்று சொல்லுவோரது பொய் யான ஒழுக்கம் அப்பொழுது இனிது போலத் தோன்றினும் பின்பு பல துன்பங்களைத் தரும். (275)

நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா(ர்) இல்.


**பொருள்:** மனத்தில் ஆசையை விடாதவராய் ஆசையை விட்டவர் களைப்போலக் கபடஞ் செய்து வாழ்கின்றவரினும் கொடி யவர் யாரும் இல்லை. (276)

# நற்சிந்தனை

மறப்பேனோ குருநாதன் தன்னை

**முத்தி நல்குமே**

**நாடு மிழத்து நற்றமிழ் நாடனே**



ஊனா யுயிரா யுடலா யுறுப்பாய்க்
கோனாய்க் குருவாய்ச் சீடனாய் நீநின்றாய்
யானா ரறிவே னம்பலத் தரசே
தேனா ரிலங்கைத் திருநக ரானே 06


ஐயா றகலாத வானந்தக் கூத்தனே
தையலாள் தன்னைப் பிரியாத தாணுவே
மையல்சேர் மாரனை நீறுசெய் வள்ளலே
தெய்வமே யீழச் செழுநக ரானே 07

ஒப்பற்ற தெய்வமே உயிருக்கு ளுயிரே
தப்பற்ற மாதவர் தாந்தொழுங் கோவே
துப்பிதழ் மடந்தை சேவிக்குஞ் செல்வமே
இப்புவி யீழத் தெழில்நக ரானே 08

ஓதுவார் தீவினை உடன்தீர்க்குந் தெய்வமே
மாதுமை பாகனே மான்மழுக் கையனே
பாதுகாப் பதுகடன் பாரேழு முன்னிடம்
மீதுநீ கிருபைவை வேலையிலங் கையானே 09

ஔவிய மில்லா மனந்தா வடியாரைத்
திவ்விய மாய்ப்பாடுஞ் சித்தமும் நீதா
நவ்வியை யேந்தும் நம்பா நடராஜா
கௌரிதன் பாகனே கடியிலங்கை நகரானே 10

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 258

2019 ஆனி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கல்வியே கருந்தனம் | கு. சோமசுந்தரம் | 01 -04 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 05 -07 |
| குருவின் மகிமையும்... | திருமதி ந. பரமேஸ்வரி | 08 -10 |
| ஆனந்தக் கிருஷ்ணனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 11 -13 |
| ஆடலரசனின் ஆனித்... | ஆர்.வீ. கந்தசாமி | 14 -15 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 16 -20 |
| ஒழுக்கம் விழுப்பம் தரும் | முருகவே. பரமநாதன் | 21 -23 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 24 -25 |
| உருத்திராட்சம் | ப. பத்மநிருபன் | 26 -30 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 31 -32 |
| பீமனின் பக்தி | செல்வி ச. வர்ணி | -33 |
| ஔவையாரின் பாடற் சிறப்பு | மூ. சிவலிங்கம் | 34 -39 |
| நான் பார்த்து வியந்த... | செல்வி கு. தயாளினி | 40 -41 |
| இறைவனும் இறைவியும் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 42 -43 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 44 -45 |
| எண்ணத்தில் உயர்ந்து... | மு. செல்லத்தம்பி | -46 |
| அமாவாசையில் அருள்... | கே.எஸ். சிவஞானராஜா | 47 -48 |
| இறை அருள் பெற்ற சமயமே... | பு. கதிரித்தம்பி | 49 -50 |
| திருமந்திரம் காட்டும்... | கு. சிவபாலராஜா | 51 -55 |
| குருபக்தியின் மகத்துவம் | எம்.பி. அருளானந்தன் | -56 |


**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

**தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406**

**அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்**

# ஞானச்சுடர்

# வைகாசிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

ஞானச்சுடர் வைகாசி மாத மலருக்குரிய வெளியீட்டுரையினை சந்நிதியான் ஆச்சிரமத்தோடு ஆரம்பகாலம் முதல் ஈடுபாடு கொண்டிருப்பவரும், இளைப்பாறிய கிராம சேவையாளருமான திரு சி. சிவபாலசிங்கம் அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள்.

திரு சி. சிவபாலசிங்கம் அவர்கள் ஒரு ஆன்மீகவாதியாக விளங்குவதால் அவரது கருத்துக்கள் தற்கால சமுதாயச் சூழலுக்கு ஏற்றவகையில் சமூக விழுமியங்களை அடக்கியதாக இருந்தது. தற்கால இளைஞர் சமுதாயத்தின் வளர்ச்சிநிலை வெற்றிடமாகக் காணப்படுவதை எடுத்துக்கூறியதோடு, சமூகம் சார்ந்த நாம் இவ்வகையான ஒழுக்கக் கட்டுப்பாடுகளுக்குள் உள்வாங்கப்பட வேண்டுமானால் ஞானச்சுடர் போன்ற ஆன்மீக நூல்கள் வெளிவர வேண்டும். அதில் இடம்பெறும் கருத்துக்கள் எம்மை எழுச்சிபெற வைக்கும்.

256 மாத காலமாக இம்மலர் தொடராக வெளிவருவதனால் பலவித அறக்கருத்துக் களை நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. தொடர்ந்து இம்மலர் வெளிவர கந்தவனக் கடவை முருகனை வேண்டுதல் செய்து நிறைவு செய்கின்றேன் என்று கூறி வெளியீட்டுரையை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

வைகாசி மாத மலருக்காகிய மதிப்பீட்டுரையை பேரவை ஆற்றும் சகல பணிகளுக் கும் தானும் ஒருவராக நின்று பணிபுரிபவரும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள் மேற்கொண்டார்கள்.

கிறீஸ்தவக் கல்லூரியில் கல்வி கற்பித்தாலும் ஆசிரியர் அவர்கள் தான் சார்ந்த சைவ சமயக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கும் திறன் வாய்ந்தவர்.

கடந்த பல வருடங்களாக வைகாசி மாத மலருக்கு மதிப்புரை ஆற்றிவரும் யான் இம்முறையும் செயலாற்றுவதற்கு சந்நிதி வேலவன் அருள் புரிந்துள்ளான் என்று கூறியதுடன் மலரில் இடம்பெற்ற கட்டுரைகளை தரம்பிரித்து சபையில் உள்ளவர்களுக்கு விளக்கிக் கூறினார்.

இறுதியாக சிறப்புப்பிரதி பெற வந்தவர்களில் திரு ஐ.கோ. சந்திரசேகரமும், திரு இ. சரவணபவனும் மலர் பற்றிய தமது கருத்துக்களைச் சபையில் இருந்த அடியார் களுக்கு எடுத்துக்கூறியதன்பின் வைகாசி மாத வெளியீட்டுரை மதிப்பீட்டுரை இனிதே நிறைவெய்தியது.

# சுடர் தரும் தகவல்

யாழ்
பல்கலைக்கழகத்தில்
"இந்து கற்கைகள் பீடம்" ஆரம்பிக்கப்பட்டிருப்பதையிட்டு இந்து சமூகம் பேருவகையடைகிறது. பன்னெடுங் காலமாக இருந்து வந்த எதிர்பார்ப்பு நிறைவெய்தியமை ஆண்டவன் அனுக்கிரகமே. 06.06.2019இல் யாழ் பல்கலைக்கழகத்தில் 11ஆவது பீடமாக "இந்து கற்கைகள் பீடம்" ஆரம்பமான நன்னாளில் ஆன்மீகப் பெரியார்கள், சைவ அபிமானிகள், சுவாமிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்துள்ளார்கள். இந்து கற்கைகள் பீடமானது இந்து நாகரிகத்துறை, சைவசித்தாந்தத் துறை, சமஸ்கிருதத் துறை ஆகியவற்றை உள்ளடக்கி - அதனதன் மகிமை குன்றாமல் ஆய்ந்து இந்து கற்கைகள் பீடத்தினை பெருமைப்படுத்தும் பணியினை இத்துறையோடு சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

இப்பீடத்தில் கற்கப்போகும் மாணவர்களுக்கும் பெரும் பொறுப்புண்டு. சிவ சிந்தனையுடையோராய் - தூய மனதினராய் - பீடத்தின் மகிமை குன்றாதவாறு நடை உடை பாவனைகளைக் கருத்திற் கொள்ளவேண்டியது மாணவர்களது தலையாய கடனாகும். இவ்வெண்ணம் தோன்றி ஏறக்குறைய அரை நூற்றாண்டு கடந்த நிலையில், இன்று "இந்து கற்கைகள் பீடம்" யாழ். பல்கலையில் கைகூடியிருப்பது ஒரு வரலாற்று அதிசயமே.



# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 15. புய வகுப்பு

மிசைமிசை கறுவி வெளிமுக டளவு நிசாசர
சேனை தேடி விததிபெ றச்சில
கங்க ணங்க றங்க மீதிற் சுழன்றன
வெருவுவ வெருவ எரிசொரி விழியுள பூதபி
சாசு போத மிகுதொனி பற்றிமு
ழங்கு விஞ்சு கண்டை வாசிக் கைக்கொண்டன
விதமிகு பரத சுரவனி தையர்கண மேறொறும்
லீலை யாக விமலச லத்தினை
விண்டி றந்து மொண்டு வீசிப்பொலிந்தன
விதரண தருவின் மலரிடை செருகிய கூதள
நீப மாலை விபுதர்கு லக்குலி
சன்ப யந்த செங்கை யானைக் கிசைந்தன
விகசித தமர பரிபுர முளரி தொழாவபி
ராம வேடர் விமலைதி னைப்புன
மங்கை கொங்கை கண்டு வேளைப் புகுந்தன
விதிர் தரு சமர முகிகர கமல நகாயுத
கோழி வீற விதரண சித்ரவ
லங்க்ரு தம்பு னைந்து பூரித் திலங்கின
விரகுடை யெனது மனதுட னகில்பனி நீர்புழு
கோட ளாவி ம்ருகமத கற்புர
குங்கு மங்க லந்து பூசித் துதைந்தன
வினைபுரி பவனி தொழுதழு துருகிய கோதையர்
தூது போக விடுமது பசஷண
வண்டி னந்தி ரண்டு சூழப் படிந்தன:,

# ஆனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

அ. பரமநாதன்
(அளவெட்டி மத்தி)

**Dr க. சிவநேசன்**
(நல்லூர், யாழ்ப்பாணம்)

**பொ. வியாகேஸ்**
(நிர்வாகி, பீக்கன் கல்வி நிறுவனம், உடுப்பிட்டி)

**ம. ஸ்ரீகாந்தன்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

**செல்வி ஞானசரஸ்வதி சின்னத்தம்பி**
(விதானையார் வளவு, காங்கேசந்துறை)

**கந்தையா ஏகாம்பரம்**
(புறூடிலேன், அரியாலை)

**சி. நடேசமூர்த்தி J.P**
(வங்கி ஊழியர், அச்சுவேலி)

**சி. கதிரவேலு**
(தொண்டைமானாறு)

**ஐ. சிவநாதன்**
(மருதம், நெல்லியடி)

**திருமதி ஐடா**
(புலோலி தெற்கு, புலோலி)

**க. இராசதுரை**
(நீர்வேலி)

**வ.சி. கணபதிப்பிள்ளை**
(ஆவரங்கால், புத்தூர்)

**உரிமையாளர்**
(புதிய நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)

**Dr V. கணேசவேல்**
(சுந்தரவேல் வைத்தியசாலை, உரும்பராய்)

தலைவர் / செயலாளர்

(அளவெட்டி ப.நோ.கூ.சங்கம், ஊழியர் தொழிற்சங்கம்)

ஐ. கணேசலிங்கம்

(யாழ்ப்பாணம்)

ஆ. ஜெயக்குமாரன்

(கப்பூது, கரவெட்டி)

உரிமையாளர்

(அம்பிகா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

கு. சோதிராசா

(தொல்புரம் மேற்கு, சுழிபுரம்)

ஆனந்தராசா மணிமாறன்

(அராலி மத்தி, அராலி)

உரிமையாளர்

(பேபி போட்டோ, கந்தர்மடம்)

T. மணிவண்ணன்

(மிருசுவில்)

மு. வைகுந்தநாதன்

(இலங்கை வங்கி, அச்சுவேலி)

S. விக்னேஸ்வரராசா

(சுப்ராங் தொலைத்தொடர்பு சேவை, கதிரிப்பாய்)

K. சுப்பிரமணியம்

(கல்லூரி வீதி, இளவாலை)

மு. இராசேந்திரா

(தும்பளை, பருத்தித்துறை)

பொ. வெங்கடேஸ்வரன்

(வல்வெட்டித்துறை)

ம. ஸ்ரீஸ்கந்தராசா

(தேசிய சேமிப்பு வங்கி- சிறுப்பிட்டி, நீர்வேலி)

இ. சரவணபவன்

(அராலி மத்தி, வட்டுக்கோட்டை)

சு. சிவனேசன்

(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)

செல்லத்துரை தங்கராசா

(அன்னை இல்லம், உரும்பராய்)

பரமேஸ்வரன் தயாரூபன்

(கல்வியங்காடு)

**ச. வடிவேலு**

(ஊரெழு, சுண்ணாகம்)

**திருமதி அகிலன் அருந்ததி**

(போதராமடம், துன்னாலை)

**க. பூலோகரட்ணம்**

(அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில்)

**சு. கிருபானந்தன்**

(கே.கே.எஸ் றோட், இணுவில்)

**ச.சிவனேசன்**

(கேணியடி, திருநெல்வேலி)

**திருமதி அ. வினிதா**

(நல்லூர், யாழ்ப்பாணம்)

**கு. நித்தியானந்தன்**

(பலாலிவீதி, யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**

(அம்பிகாபதி பான்ஸிகுட்ஸ், யாழ்ப்பாணம்)

**கோ. யோகலிங்கம்**

(கிளை. முகாமையாளர், புத்தூர்)

**சி. நவரெத்தினம்**

(துவாரகை, கரணவாய்)

**திருமதி அ. குணநாயகம்**

(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

ப. சிவராசா

(தூதாவளை, கரணவாய்)

**திருமதி தங்கராசா ஈஸ்வரி**

(கம்பர்மலை, வல்வெட்டித்துறை)

**கு. லோகேந்திரன்**

(மில் ஒழுங்கை, மல்லாகம்)

**சோ. கருணாகரன்**

(சுண்ணாகம்)

உ. செந்தூரன்

(பிரதான வீதி, அச்சுவேலி)

வை. கமலநாதன்

(வர்த்தக முகாமையாளர், மானிப்பாய் கோ.ப.ப.நோ.கூ.சங்கம்)

கு. சிவபாலராஜா

(பொது சுகாதார பரிசோதகர், நல்லூர்)

இ. கதிர்காமநாதன்

(வங்களா ஒழுங்கை, மல்லாகம்)

க. ஆனந்தராசா

(நெல்லியடி, கரவெட்டி)

இரா. அருட்செல்வம்

(A.T.C. ரியூசன் சென்ரர், இணுவில்)

சி. துரைராசா

(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

செ. முருகதாஸ்

(சாந்தை, பண்டத்தரிப்பு)

திருமதி ப. பூமாவதி

(முருகன் கோவில்வீதி, நெல்லியடி)

வசந்தன் சிவஞானம்

(அல்வாய் மேற்கு, திக்கம்)

திருமதி திருத்தேவி ஏகாந்தன்

(வல்வெட்டித்துறை)

T. நாகராசா

(நல்லூர் யாழ்ப்பாணம்)

கா. தெட்சணாமூர்த்தி

(பண்டத்தரிப்பு)

திருமதி ப. இராஜேஸ்வரன்

(கோண்டாவில்)

பா. துவாரகன்

(ஏழாலை தெற்கு, சுன்னாகம்)

ம. பேரின்பநாயகி

(நீர்வேலி)

# கல்வியே கருந்தனம்

**– திரு குமாரசாமி சோமசுந்தரம்** அவர்கள் –

தற்காலத்தில் மனிதர்களிடையே ஒழுக்கம், கட்டுப்பாடு, மனித விழுமியப் பண்புகளைப் பேணுதல் என்பன குன்றிவருவதாகக் கூறப்படுகிறது. குறிப்பாக இளைய தலைமுறையினரிடையே, இத்தகைய அவல நிலைமைகள் பெருகிவருவதாக மூத்த பரம்பரையினர் ஆதங்கம் கொள்கின்றனர். இதில் உண்மை இல்லாமலுமில்லை. "கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லை" என்பர்.

இன்றைய மூத்த பரம்பரையினர்; இளைய பரம்பரையினராக இருந்த காலத்தில்; அப்பொழுது மூத்தபரம்பரையினராக விளங்கியவர்கள் இதே குற்றச்சாட்டுக்களையே அன்றைய இளையோர்மீது சுமத்தினர். அவ்வாறே மனிதவினம் நாகரிகமடைந்த காலத்திலிருந்தே ஒரு தலைமுறையினர்; அடுத்து வரும் தலைமுறையினரின் ஒழுக்கம், நடத்தை, மனித விழுமியப் பண்புகளைப் பேணல் பற்றி, அதிருப்தியும் ஆதங்கமும் தெரிவித்தே வந்துள்ளனர். தற்காலத்திலும் அது தொடருகிறது. குற்றஞ் சாட்டுபவர்கள் அவற்றைத் திருத்தி, நிலைமையைச் சீர் செய்ய, என்ன முயற்சிகள் மேற்கொண்டார்கள், என்ற வினா எல்லோர் மனங்களிலும் எழுவது இயற்கையே! ஆராய்ந்து பார்த்தால், ஆற்றாமையே முக்கிய காரணம் என்பது தெரியவரும். பரம்பரை இடைவெளி, மற்றொரு காரணமாகக் கூறப்படுகிறது. சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுப், பின்பற்றப்பட்டு வருகின்ற சமூகப் பழக்கவழக்கங்கள், வாழ்க்கை விழுமியங்கள், ஒழுக்க நெறிகள், ஆன்மீகப் பண்புகள், நடைமுறைகள் ஆகியவற்றை அனுசரித்து ஒழுகும்போது சமூகப் பிரச்சினைகள் தோன்றமாட்டா. அமைதியும், வாழ்வில் நிம்மதியும் உறுதிசெய்யப்பட்டுவிடும். குடும்பத்திலும், வாழும் சமூகத்திலும் ஒழுங்கு, உறுதிப்பாடு, கட்டுக்கோப்பு, அமைதி என்பன காணப்படும். அச்சம், அவலங்கள், இழப்புக்கள், குழப்பங்கள் என்பன அகன்றுவிடும்.

கீழை நாடுகளில், குறிப்பாக இலங்கை, இந்தியாவில் கல்வி கற்பித்தல் என்பது சமூக மரபுகள், பண்பாடுகள், ஆன்மீக, ஒழுக்க விழுமியங்கள், ஆன்மீக நெறிகள் ஆகியவற்றை இளந்தலைமுறையினருக்குக் கற்பித்து, வாழும் சமுதாயத்துடன் பொருந்தியும் இசைந்தும் வாழச்செய்தல் என்பதை கல்வி இலக்காகக் கொண்டிருந்தது. அண்மைக் காலம் வரை இந்நிலைமையே நீடித்திருந்தது. மாற்றங்களுக்கு நெகிழ்ந்து கொடுத்தால், ஒழுக்கம் கட்டுப்பாடுகளை மீறிய குற்றத்திற்கு ஆளாகவேண்டியிருந்தது.

மாற்றங்கள் அவை நன்மை பயப்பனவாயின், வரவேற்கப்படவேண்டியவை. வளர்ச்சி,

*ஒருவனின் அறிவு ஆற்றல் சிறந்து விளங்குமானால் அவன் வாழ்வு சிறக்கும்.*

அபிவிருத்தி ஏற்பட வேண்டுமாயின்; மாற்றங்களுக்கு நெகிழ்ந்து கொடுக்கப்பட வேண்டியது அவசியம் எனக் கொள்ளப்படுகிறது. நல்ல விளைவைத் தருவனவாய் அம்மாற்றங்கள் அமைய வேண்டும். அப்படிப்பட்ட நன்மாற்றங்கள் வரவேற்கப்படவேண்டியன. இந்த அடிப்படையிலேயே, நன்னூல் ஆசிரியர்,"பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல" எனக் கூறுகிறார். பழையன எல்லாம் நல்லனவுமல்ல; புதியன யாவும்; கூடாதனவுமல்ல என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும், உலகம் இன்று சுருங்கி வருகிறது. விஞ்ஞானம் தொழில்நுட்பம் ஆகிய துறைகள், அபரிமிதமான அபிவிருத்தி அடைந்து வருதலே அதற்குக் காரணம். உலகின் எந்தப் பகுதியில் ஏற்படுகின்ற மாற்றங்களும்; மக்கள் அனைவரையுமே வந்தடைகின்றன. அதனால், மாற்றங்கள் தவிர்க்க முடியாதன என்ற நிலைப்பாடு ஏற்பட்டுவிட்டது. எனினும் மனிதப் பண்பாடு, பண்புகள் என்பவற்றிற்கு முரணான மாற்றங்களையும் ஏற்றுப் பின்பற்றி அழிவுக்குள்ளாக வேண்டுமென்ற நியதியோ, வலுக்கட்டாயமோ இல்லை என்பதையும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மனித ஆக்கத்திற்கு உடன்பாடான மாற்றங்களை ஏற்று; எதிர்மறையானவற்றை விலக்குதல் முறையானதாகும். மனிதர்கள் தம்மிடமுள்ள ஆறாவது அறிவு ஆகிய பகுத்தறிவை அதற்குப் பயன்படுத்துதல் இன்றியமையாதது. நல்லது, கெட்டது என்பதைப் பகுத்தறிதல்; பகுத்துணர்தல் ஆகிய திறன்களை; தற்காலப் பொறுப்புள்ள மனிதர்கள் அலட்சியம் செய்வதினாலேயே; தற்கால அவல நிலைமைகளுக்கும்; தொல்லைகள், குழப்பங்கள், அல்லல்களுக்கும் வழிவகுக்கின்றன. "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே; அது நல்லவன் ஆவதும், தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே" என்பது ஒரு கவிஞனின் தீர்க்க தரிசனமான தீர்ப்பு. "துள்ளித் திரிகின்ற வேளையிலே, என் துடுக்கடக்கிப் பள்ளிக்கு வைத்திலனே, என் தந்தையாகிய பாதகனே" என்பது மற்றொரு பொருள் பொதிந்த பாடலடி.

குழந்தை பிறந்தபின்னர் சந்திக்கும் முதல் சமூகம், அது சார்ந்த குடும்பம். குழந்தை வளர்ப்பிலும்; அதன் குணாதிசயங்கள் விருத்தியிலும்; குடும்ப உறுப்பினர்கள் குறிப்பாகத் தாயும் தந்தையும் பெரும் பங்கு வகிக்கின்றனர். "தாயைப்போலப் பிள்ளை; நூலைப்போல சேலை" என்ற ஆன்றோர் வாக்கு பொய்யாமொழியாகும்.

"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"
"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை"
ஆகிய அமுத வாக்குகள் குழந்தையின் ஆளுமை வளர்ச்சியில்; பெற்றோரின் வகிபங்கு, மற்றும் வழிநடத்தல், என்பனவற்றின் முக்கியத்துவம் பற்றிக் கோடிட்டுக்காட்டுகின்றன. பெற்றோர்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்து வந்தால், ஒரு பொல்லாப்பும் நேர்ந்துவிடாது.

"ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே"

என்னும் புறநானூற்றுப் பாடலடிகள்; தாய், தந்தையரின் இன்றியமையாத கடப்பாடுகள் பற்றிக் கோடிட்டுக் காட்டுகின்றன.

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்"

-திருக்குறள்.

தந்தை, தம் மைந்தர்களுக்குச் செய்யத்தக்க நல்ல உதவி; கற்றவர் சமூகத்தில்; அவர்கள் நன்கு மதிக்கப்படுபவர்களாக விளங்கச் செய்வதற்கு வேண்டிய கல்வி, அறிவு, ஒழுக்கம், நடத்தைப் பண்புகள் ஆகியவற்றில் மேம்படச் செய்தலாகும்.

*தன்னை அடக்கி ஆளப் பழகியவன், தரணியை அடக்கி ஆள்வான்.*

இது மேற்படி குறட்பாவின் தாற்பரியம் ஆகும்.

"குழந்தையைப் பெற்று விட்டால் போதுமா,
அதைப் பேணிவளர்க்க வேண்டும் தெரியுமா?"

என்னும் இப் பாடலடிகள்; குழந்தையின் ஒழுக்க வளர்ச்சியில் பெற்றோர் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

குழந்தைகள் வளர்ந்து, கட்டிளமைப் பராயத்தை அடையும்போது; அவர்களின் நடத்தைகளில் பிறழ்வு ஏற்பட்டுவிட்டதே என்று மனம் பதகளிப்பதாலும், ஆதங்கப்படுவதாலும் பயனில்லை. எனவே முன்யோசனையுடன் சிறுபராயத்திலிருந்தே, பிள்ளைகளுக்கு ஒழுக்க விழுமியப் பண்புகளையும், நன்னடத்தை முறைகளையும் சொல்லிக்கொடுத்தும், அவர்களைக் கண்காணித்தும்; பேணிவளர்த்து வரவேண்டிய பொறுப்புடையவர்கள் பெற்றோர்கள். "சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்ற பழம் பாடலடி இதனையே உணர்த்துகிறது.

பார்த்துச் செய்தல், பின்பற்றுதல், பார்த்துப் பழகல் ஆகியன பிள்ளைப் பருவத்தின் இயல்புகள். குடும்பத்திலும் அதன் சூழலிலும் உள்ளவர்கள், ஒருவரோடு ஒருவர் நடந்துகொள்கின்ற முறைகள், பேசுகின்ற பேச்சுக்கள், மற்றும் அவர்களின் செயல்கள், நடத்தைப் பாங்குகள், பழக்க வழக்கங்கள், சொற்பிரயோகங்கள் ஆகியவற்றைக் கூர்ந்து அவதானித்துத் தாமும் அவ்வாறு நடக்க முயலுகின்ற இயல்பு; அதாவது பார்த்துச் செய்தல்; குழந்தைகளிடம் காணப்படுகின்றது.

நல்லொழுக்கப் பண்புகளைப், பிள்ளைப் பருவத்தினருக்கு, நூல்களிலிருந்து கற்பிப்பதிலும் பார்க்க, நல்லொழுக்கமுள்ளவர்கள் நடந்து கொள்கின்ற முறைகள், மற்றும் வாழும் விதங்களைப் பிள்ளைகள் உற்றுநோக்கிப் பின்பற்றிக் கற்றுக்கொள்வது மிகுந்த பயனைத் தரும். ஆகவே, குடும்பத்தவர்களும் ஏனைய வளர்ந்தவர்களும்; சமூகத் தலைவர்களும், ஒழுக்கத்தில் வாழும் முறைகளில் சிறந்த முன்மாதிரிகளாக வாழ்ந்து காட்டுதல் மூலமே, சிறந்த ஒழுக்கமுள்ளவர்களாகக் குழந்தைகளையும் இளையோர்களையும் வளர்ச்சிபெறச் செய்யமுடியும். அத்துடன் விழுமியக் கல்விக்கும், பாடசாலைக் கலைத்திட்டத்தில் இடமளிக்க வேண்டியதன் தேவையையும், கல்வியியலாளர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

குழந்தை அடுத்துச் சந்திக்கின்ற சமூகம் பாடசாலையாகும். இங்கு மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பன வளம்படுத்தப்படுகின்றன. இங்கு மாணவர்கள் வளர்க்கப்பட வேண்டுமே தவிர, வார்க்கப்படல் ஆகாது. மாணவர்களின் உடல், உள, சமூகத் தேவைகளை ஆசிரியர்கள் ஆராய்ந்து, கண்டறிந்து, அவற்றை நிறைவு செய்து கொள்வதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுதல்; உதவுதல் ஆசிரியர்களின் பணியாகும்.

மாணவர்கள் சமூகமயமாதல், கலாசாரமயமாதல், ஆன்மீகமயமாதல் என்பவற்றிற்குப் பாடசாலைக் கல்வி உதவவேண்டும். அத்துடன் தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்ளவும் மாணவர்கள் வழிப்படுத்தப்பட வேண்டும். மாணவர்களை, ஒழுக்க நெறியில் வளர்ச்சிபெறச் செய்வதற்கு முற்றிலும் தகுதியானவர்கள் ஆசிரியர்கள். அதனாலேயே "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற கூற்று நமது கலாசாரத்தில் இடம் பெற்றுள்ளது.

ஆசிரியத்துவம் புனிதமான பணி. ஆசிரியர்களும் புனிதர்களாக, நல்லொழுக்க வாழ்வு வாழ்ந்து; நல்வழிகாட்டி; முன்மாதிரியாக

*உடல் அமைதிபெற மனதை அமைதியாய் வைத்துக்கொள்.*

விளங்குதல் இன்றியமையாததாகும். சமுதாயத்தில் வாழுகின்ற பெரியவர்களும்; எதிர்காலச் சந்ததியினரைக் கண்காணித்து; அவர்களை நல்வழிப்படுத்தவேண்டிய கடப்பாடு உடையவர்கள் என்பதை நினைவில் கொண்டு; அதற்கேற்றபடி தாமும் முன் மாதிரியாக வாழ்ந்து காட்டவேண்டிய பொறுப்பினை நிறைவேற்ற வேண்டும்.

"எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ; மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ; விரிந்த அறிவைத் தருமோ; ஒருவனைத் தன்னுடைய சுய வலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ, அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை. மனிதனை மெல்ல மெல்ல இயந்திரம் ஆக்கிக்கொண்டு வருவதும் ஒரு கல்வியா?" என்று நெஞ்சம் கொதித்தார் சுவாமி விவேகானந்தர்.

மனித வாழ்க்கை விழுமியங்களைத் தராத கல்வியும்; விழுமியப் பண்புகளை மதித்து அவற்றைப் பேணாத மானுட வாழ்க்கையும்; காலப்போக்கில் பல தீய விளைவுகளுக்கும் துணைபோகும் அவலத்தையும் நாம் இன்று கண்டுகொண்டிருக்கிறோம். "கல்வியே கருந்தனம்" என்ற அமுதவாக்கு, உணர்த்தும் உண்மைப் பொருளைச் சிந்தித்துத் தெளிவோமாக.

வாழ்க வளமுடன்; வாழ்க வையகம்.

## சம்மணங்கால் நல்லது

அவரு எவ்வளவோ பெரிய ஆளு. அவர கீழே உட்காரவெச்சு சாப்பாடு போட முடியுமா? தம்பி எம்புட்டு பெரிய படிப்பு படிச்சுருக்கு. அவரு கீழே எல்லாம் உட்கார்ந்து சாப்பிடுவாரா? போன்ற ஏற்றத்தாழ்வு காணும் கேள்விகள் ஒருபுறம். கீழ சம்மணங்கால் போட்டு சாப்பிடற பழக்கமே இல்லைங்க..., கீழ உட்கார்ந்து சாப்பிடற அளவுக்கு நான் கேவலமா போயிட்டேனா...? என் தன்மானம், கௌரவம் சார்ந்த காரணங்களால் மறுபுறம்.... நாம் சம்மணங்கால் இட்டு சாப்பிடும் பழக்கத்தை விட்டு வெகுதூரம் பயணித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் அறிவியலோ... சம்மணங்கால் இட்டு சாப்பிடுவதுதான் ஆரோக்கியத்திற்கு சிறந்தது என பலமாக நமது தலையில் ஒரு குட்டு வைக்கிறது.

**இரத்த ஓட்டம்:**

நமது உடலை இடுப்பை மையமாக வைத்து கீழ் உடல், மேல் உடல் என இரண்டாகப் பிரிக்கலாம். இதில் முக்கியமான உடல் உறுப்புகள் பல மேல் உடலில்தான் இருக்கிறது. கீழ் உடலில் கால்கள் மட்டுமே இருக்கின்றன. நடக்கும்போது மட்டும்தான் இரத்த ஓட்டம் கால்களுக்கு தேவைப்படுகிறது. மற்ற வேளைகளில் மேல் உடலில் இருக்கும் கண், காது, மூளை, கணையம், நுரையீரல், சிறுநீரகம் போன்றவைக்குத்தான் இரத்த ஓட்டம் அதிகமாகத் தேவைப்படுகிறது.

**சக்தி:**

சாப்பிடும்போது கீழே தரையில் சம்மணங்கால் இட்டு அமர்ந்து உணவு உட்கொள்வதால் உடலுக்குச் சக்தியும், ஆரோக்கியமும் அதிகம் கிடைக்கிறது.

**காலை மடக்கி அமர்தல்:**

காலை மடக்கி அமரும் இந்த நிலையில் உணவு உட்கொள்வதால் சாப்பிடும்போது மேல் உடலுக்குத் தேவையான அளவு இரத்த ஓட்டம் செல்லும். இது மேல் உடல் பாகங்களின் செயற்திறனை ஊக்குவிக்கும்.

**சமிபாடு:**

முக்கியமாக, சம்மணங்கால் இட்டு உணவு உட்கொள்வதால் சமிபாட்டு மண்டலம் வலுப்பெற்று, சமிபாடு சீராகவும் அஜீரண கோளாறுகள், வயிறு பிரச்சினைகள் உண்டாகாமல் இருக்கவும் உதவும்.

*சொன்ன சொல்லையும் எறிந்த கல்லையும் திரும்பிப் பெற முடியாது.*

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 09. ஆனந்த பரவசம்

இறைவன் திருவடி அருளாகிய பேரின்பத்தில் மூழ்கி தன் தன்மை நீங்குதலை அடிகள் விரும்பியது. பரவசம் - தன்வசமிழத்தல்.

**85 விச்சுக் கேடுபொய்க் காகா தென்றிங் கெனைவைத்தாய்**
**இச்சைக் கானார் எல்லாரும் வந்துன் தாள்சேர்ந்தார்**
**அச்சத் தாலே ஆழ்ந்திடு கின்றேன் ஆரூரெம்**
**பிச்சைத் தேவா என்னான் செய்கேன் பேசாயே.**

**ப-ரை:**

ஆரூர் எம் பிச்சை தேவா- திருவாரூரில் எழுந்தருளியிருந்து நின்னை வந்தடைகின்ற மெய்யன்பர்களுக்குத் திருவருளாகிய பிச்சையை ஈந்தருளும் எங்கள் தியாகேச மூர்த்தியே; பொய்க்கு விச்சு கேடு ஆகாது என்று இங்கு என்னை வைத்தாய்- பொய்யாகிய இவ்வுலக வாழ்விற்கு வித்தும் கெட்டொழிதல் பின்னர் ஆக்கத்திற்குக் கூடாது என்று கருதியோ அடியேனை இவ்வுலக வாழ்க்கையில் இருத்தினாய்; இச்சைக்கு ஆனார் எல்லாரும் வந்து உன் தாள் சேர்ந்தார்- நின் திருவருள் விருப்பத்திற்கு உரியராகிய மெய்யடியார்கள் எல்லாரும் நின்பால் வந்து நின் திருவடிகளை அடைந்தனர்; அச்சத்தாலே ஆழ்ந்திடுகின்றேன்- இவ்வுடலுடன் இவ்வுலகில் வாழ்வதால் நின்திருவடியையடைதல் கிடைக்குமோ கிடையாதோ என்னும் அச்சத்தினாலும் கிடையாத வழி மீண்டும் பிறந்திறந்து உழல வேண்டுமே என்னும் அச்சத்தினாலும் துன்பத்தில் மூழ்குகின்றேன். நான் என் செய்கேன்- யான் யாது செய்வேன்; பேசாயே- அஞ்சி வருந்தாது இங்கே வா என்று நின்பால் என்னை அழைத்து அருள வேண்டும்.

ஆரூர் எம் பிச்சைத்தேவா நிலையில்லாத இவ்வுலக வாழ்விற்கு வித்துக் கெட்டொழிதல் கூடாது என்று கருதியோ அடியேனை இவ்வுலக வாழ்க்கையில் இருக்கச் செய்தனை? நின் திருவருள் விருப்பத்திற்கு உரியராகிய மெய்யடியார்கள் எல்லாரும் நின்பால் வந்து நின் திருவடிகளை எய்தினர். யான் அச்சத்தாலே துன்பத்தில் ஆழ்ந்திடு கின்றேன். யான் யாது செய்வேன். என்னை நின்பால் அழைத்து அருள் செய்ய வேண்டும் என்பதாம்.

*சோம்பேறியும் முட்கள் இல்லாத கடிகாரமும் ஒன்றே.*

விச்சு- வித்து "விச்சதின்றியே விளைவு செய்குவாய் (சத 96) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. உலக வாழ்க்கையைப் பொய் என்றது நிலையின்மையாகும். வித்துக் கெட்டுவிட்டாற் பின்னர் தாவரம் தோன்றாதவாறு போல இவ்வுலக வாழ்விற்கு வித்தாகிய உடல் கெட்டுவிட்டால் உலக வாழ்வு கெட்டுவிடும்; ஆதலால் வித்துக்கெட விடக்கூடாது என்று கருதியோ என்னை இவ்வுலக வாழ்வில் இருக்கச் செய்தனை என்பார். "விச்சுக் கேடு பொய்க்காகா தென்றிங் கெனைவைத்தாய்" என்றார். என்றோ என்னும் ஓகாரம் கெட்டது. இச்சைக்கு ஆனார்- நின் திருவருள் விருப்பத்திற்கு உரியராயினார்; இனி விருப்புடன் செய்யும் தொண்டிற்கு உரியராயினர் என்பாருமுளர். தாள் சேர்ந்தார்- முத்தியாகிய திருவடியைச் சேர்ந்தார். "அடியா ரானா ரெல்லாரும் வந்துன் தாள் சேர்ந்தார்" "அறவே நின்னைச் சேர்ந்த அடியார் மற்றொன்றறியாதார், சிறவே செய்து வழி வந்து சிவனே நின் தாள் சேர்ந்தாரே" (சத 83:86) என வருவன காண்க. திருவடியே முத்தியாதல் "முத்தித் தாள் மூவா முதல்வர்" (திருவிடைமும் 7:40) எனப் பதினோராம் திருமுறையில் வருதலானுமறிக.

ஆழ்ந்திடுகின்றேன் என்பதற்கு ஏற்ப அச்சத்தால் வரும் துன்பத்தை வெள்ளமாகக் கொள்க.

ஆரூர்- திருவாரூர் என்னும் தலம். இது நிலமடந்தைக்கு இருதய கமலம் போன்றது. "மேதினிக் காதன் மங்கை யிதய கமலமாம், மாதொர் பாகனார் ஆரூர்" எனப் பெரியபுராணத்து வருதலானும் அறிக. "ஓரூரென்றுலகங்களுக்கெல்லாமு ரைக்கலாம் பொருளாய்" (தே.சுந் 59-11) என்பதனால் இதன் பெருமை அறியப்படும். பிஷா என்பது பிக்கை என்றாகிப் பின்னர் பிச்சை எனத் திரிந்து பிச்சைத் தேவா என்பது பிச்சாடனமூர்த்தியே எனப் பொருள் தருவதாயினும் ஆருரெம் பிச்சைத்தேவா என்றதனால் திருவாரூரில் எழுந்தருளி யிருந்து பக்குவான்மாக்களுக்குத் திருவருட் பிச்சையைக் கொடுத்தருளுகின்ற கொடையர சாகிய தியாகராச மூர்த்தியைக் குறித்தது. "பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில் ஆரூரா என்றே போற்றா நில்லே" (நாவு 244:7) எனத் தேவாரத்து வருதலும் காண்க. அச்சத்தாலே ஆழ்ந்திடுகின்ற நிலையில் யான் யாது செய்வேன். அஞ்சாது இங்கே வா என்றழைத்து அருள் செய்ய வேண்டும் என்பார். "என்னான் செய்கேன் பேசாயே" என்றார்.

இதன்கண், பேசாயே என்பதனால் அஞ்சி வருந்தாது இங்கே வா என்று அழைத் தருளாயோ என்பது பெறப்படுதலின் ஆனந்த பரவசம் என்னும் ஒன்பதாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 81.

**86 பேசப் பட்டேன் நின்னடி யாரில் திருநீறே**
**பூசப் பட்டேன் பூதல ரால்உன் அடியானென்**
**றேசப் பட்டேன் இனிப்படு கின்ற தமையாதால்**
**ஆசைப் பட்டேன் ஆட்பட் டேன்உன் அடியேனே.**

**ப-ரை:**

உன் அடியேன்- உன் அடியவனாகிய யான்; நின் அடியாரில் பேசப்பட்டேன்- உன் மெய்யடியாருள் ஒருவனாக வைத்து மெய்யன்பர்களாற் புகழ்ந்துரைக்கப்பட்டேன்; திருநீறே

*மனிதனுக்கு மரியாதை அவசியம். மலருக்கு நறுமணம் அவசியம்.*

பூசப்பட்டேன்- ஞானாசாரியனாக எழுந்தருளி வந்து நின்னால் பேரின்பப்பேற்றிற்கு அறிகுறியாகிய திருவெண்ணீறு பூசப்பட்டேன்; பூதலரால் உன் அடியான் என்று ஏசப்பட்டேன்- பூமியிலுள்ளவர்களால் இவன் தன் அமைச்சுரிமையை விடுத்து உனக்கு அடியவனானவன் என்று இகழப்பட்டேன்; இனி படுகின்றது அமையாதால்- இனி யான் துன்பப்படுவது நின் திருவருட்டிறத்திற்குப் பொருந்தாது; ஆட்பட்டேன் ஆசைப்பட்டேன்- உனக்கு ஆட்பட்டவனாகிய யான் வீட்டின்பப்பேற்றைப் பெற ஆசைப்பட்டேன். அதனைத் தந்தருள்க.

உன் அடியவனாகிய யான் உன் அடியாருள் ஒருவனாக வைத்து மெய்யன்பர்களாற் புகழ்ந்துரைக்கப்பட்டேன்; ஞானாசாரியனாக எழுந்தருளி வந்த நின்னால் திருநீறு பூசப்பட்டேன்; பூமியிலுள்ளவர்களால் இவன் தன் அமைச்சுரிமையை விடுத்து உனக்கு அடியவனானவன் என்று இகழப்பட்டேன். இனி யான் துன்பப்படுவது நின் திருவருட்டிறத்துக்குப் பொருந்தாது. உனக்கு ஆட்பட்டவனாகிய யான் வீட்டின்பப்பேற்றைப் பெற ஆசைப்பட்டேன். அதனைத் தந்தருளுக என்பதாம்.

பேசப்படுதல்- புகழ்ந்துரைக்கப்படுதல். இறைவன் குருந்தமர நிழலில் ஞானாசாரியனாக எழுந்தருளி வந்து ஆட்கொண்ட காலத்து இறைவனால் அடிகளுக்குத் திருவெண்ணீறு அணியப்பட்டமையின் "திருநீறு பூசப்பட்டேன்" என்றார். என்னையுந் தன் சுண்ண வெண்ணீறணிவித்துத் தூ நெறியே சேரும் வண்ணம். அண்ணலெனக்கருளியவாறார் பெறுவார் அச்சோவே" (அச்சோ 4) என அடிகள் பிறிதோரிடத்து அருளியதும் ஈண்டறியற்பாலது. திருநீறு- வீடுபேற்றிற்கு அறிகுறி. அதனால் அதற்கு "விபூதி" என்னும் பெயருண்மையுமறிக. பூசப்பட்டேன் என்றதன் ஆற்றலால் பூசற்கு வினை முதலாகிய நின்னால் என்பது வருவிக்கப்பட்டது.

பூதலர் என்றது ஈண்டுப் பூவுலகத்துள்ள பொது மக்களைக் குறித்தது. ஏசப்படுதல்- முதன் மந்திரியாகிய பதவியைக் கைவிட்டுச் சிவனுக்கு அடியவனாகி அலைந்து திரியும் அறிவிலி என இகழப்படுதல். "நாடவர் பழித்துரை பூணதுவாக" (போற் 69-70) "பித்தனென் றெனை யுலகவர் பகர்வதோர் காரணமிது கேளீர்" (அதிசய 4) என்பன ஈண்டறியற்பாலன. உன் அடியானென்றேசப்பட்டேன என்றது உன் அடியனாகிய எனக்கு வரும் துன்பத்தை நீக்கிப் பாதுகாத்தல் நின்மேலது என்பன உட்கொண்டு.

படுத்தல்- துன்பப்படுதல். அமையாது என்றது நின்திருவருட்டிறத்திற்குப் பொருந்தாது என்றவாறு. ஆல்- ஆசை. ஆட்பட்டேன்- ஆசைப்பட்டேன் என மாறிக் கூட்டி எழுவாயும் பயனிலையுமாகக் கொள்க. ஆசைப்பட்டேன் என்பதில் ஆசைக்குரிய வீடுபேற்றின்பம் வருவிக்கப்பட்டது.

இதன்கண் வீடுபேற்றின்பத்தினைப் பெற ஆசைப்பட்டேன் என்றதனால் ஆனந்தப் பரவசம் என்னும் ஒன்பதாம் பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 82.

(தொடரும்...

---

**நம் அன்றாட வாழ்க்கையில் கழியும் ஒவ்வொரு கணமும் சாதாரணமானதாய்த் தோன்றினாலும் உண்மையில் அது அத்தகையதல்ல. அதில் பெரிய பொருள் பொதிந்திருக்கிறது. வாழ்க்கை முழுவதும் ஒரு பெரிய வேள்வியாகும். இது ஆண்டவனுடையது என்ற உணர்ச்சியுடன் ஒரு சாதாரண காரியம் செய்தபோதிலும் அது புனிதமாகி விடுகிறது.**

*மனம் நம்பிக்கையை இழப்பது மரம் வேரை இழப்பதைப் போன்றது.*

# குருவின் மகிமையும் ஆட்கொள்ளும் தன்மையும்

– திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் –

குருவின் மகிமை கூறவந்தேன் குணாநிதியே - உந்தன்
திருவருளை அருளிடுவாய் கணபதியே.

இறைவனே பக்தனின் பக்குவம் அறிந்து குருவாக வந்து அருளொளியைப் பாய்ச்சி ஆட்கொள்கின்றார் என்பது சைவ சித்தாந்தக் கோட்பாடு. மாணிக்கவாசகருக்கு சிவபெருமானே குருவாக வந்து ஆட்கொண்டதையும்; அருணகிரிநாதருக்கு முருகனே காட்சி கொடுத்துக் குருவாயிருந்து திருப்புகழிற்கு அடியெடுத்துக் கொடுத்ததையும், யோகர் சுவாமிகளுக்கு செல்லப்பா சுவாமிகள் வடிவில் வந்து ஆட்கொண்டு அருளியதையும் சைவ மக்கள் நன்கறிவர்.

குரு என்பவர் நமக்குள்ளே நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கும் ஆர்வக் கனலைத் தூண்டி உள்ளொளியைப் பெருக்கி ஞானதீபத்தை ஏற்றிவைக்கும் இறைவனின் பிரதிநிதியாக விளங்குபவர். அதாவது இறைவனின் அருட்சக்தி மனித உருவில் வந்து மனிதர்களைத் தன் அன்பால், அருளால் வசப்படுத்தி அவர்களை நன்னெறிப்படுத்தி உலகை உய்யவைப்பதாகும். இறைவனின் பத்து அவதாரங்களில் ஒன்பது அவதாரங்களையும் கதைகள்மூலம் அறிந்து கொண்டாலும் பத்தாவது அவதாரமான கல்கி அவதாரத்தில் பல நாமங்கள் பல ரூபங்கள் போற்றித் துதிக்கப்படுகின்றன. கலியுக அவதாரம் என்று முருகனையும் போற்றித் துதிக்கின்றோம். இறைவனிடம் உண்மையான பக்தியும், உண்மைத் தேடலும் உள்ளவர்க்கு அவரவர் எந்த நாம உருவில் இறைவனைக் கண்டு நம்பிக்கை வைத்துத் தம் உள்ளக் கிடக்கையைக்கூறி அழைக்கின்றனரோ அவரவர்க்கும் அவ்வவ் வடிவில் காட்சி கொடுத்து அருள்பாலித்து அவர்கள் நம்பிக்கையை வலுவடையச் செய்கின்றார்.

குரு என்பவர் எம்மை இருளிலிருந்து ஒளிக்கு அழைத்துச் செல்பவர். அறியாமை இருளிலிருந்து விடுவித்து அறிவொளியை ஊட்டி எம் மனத்தைத் தெளியவைத்து அமைதியைத் தருபவர். எந்த நேரத்தில் எவ்வித பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதினின்றும் விடுவிக்கும் மார்க்கத்தை அருள்பவர். இடர் வருமுன் காப்பவர் விநாயகர். அதனால் எக்கருமம் தொடங்கும்போதும் அவரை வழிபட்டு அவர் அனுமதியோடு தொடங்க வேண்டும். நமக்குக் கஷ்டங்கள் துன்பங்கள் வரும்போது வருந்துகின்றோம், கடவுளை நிந்திக்கின்றோம். ஆனால், "நல்ல குருநாதர் எம்மை வருத்துவது கொல்லவல்ல கொல்ல வல்ல பொல்லாப் பிணிதீர்க்க" என்று குரு சொல்கிறார். இதைத் தெளிவுபடுத்த பகவான் பாபா சொன்ன விளக்கங்கள் சில:-

தங்கத்தைத் தீயிலிட்டு உருக்கித் தட்டி வளைத்து நீட்டி வெட்டி எடுத்தால்த் தான் நகையாகின்றது. பாலை முறுகக் காய்ச்சி ஆறவிட்டு உறையிட்டுத் தயிராக்கி மத்தினால் கடைந்தால்த்தான் வெண்ணெய்

*விரும்பியது நமக்கில்லாவிட்டால் உள்ளதை நாம் விரும்ப வேண்டும்.*

திரண்டு வரும். அதை மீண்டும் காய்ச்சி னால்த்தான் நெய்யுண்டாகும். தங்கத்தைச் சும்மா வைத்திருப்பதால் என்ன பயன். நகை ஆக்கினால்த்தான் அதற்கு மதிப்பும் பயனும் உண்டாகின்றது. பாலை அப்படியே வைத் தால் திரிந்து பாவனைக்கு உதவாமற் போய் விடும். அதை வெண்ணெயாக்கி நெய்யாக எடுக்கும்போதுதான் அதிக நாளைக்கு வைத் துப் பாவிக்க முடிகின்றது. பாலைவிட நெய் யின் மதிப்பு அதிகம். தங்கமும் பாலும் பேசமுடியாத ஜடமாயிருப்பதால் தாம் படும் கஷ்டத்தைக் கூறமுடியாது அனுபவித்து மனிதருக்குப் பயனைத் தருகின்றன.

மனிதன் தன் நிலையிலிருந்து உயர வேண்டுமென்றே விரும்புகின்றான். சாதாரண மாகப் பொருள் சம்பாதிப்பதற்கும் வீடு மற் றும் அத்தியாவசிய அடிப்படைத் தேவை களைப் பூர்த்தி செய்வதற்குமே எவ்வளவோ கஷ்டப்படுகின்றோம். வாழ்க்கையில் நம்மை உயர்த்திக் கொள்வதற்கு அமைதியான ஒற்றுமையான வாழ்வை வாழ்வதற்கு நம்மை வழிநடத்திச் செல்ல ஓர் வழிகாட்டி தேவை. இத்தகைய வழிகாட்டியே குரு எனப்படுவர்.

நாம் இறைவனைத் தியானித்து இறை வனுடன் பேசி எமது குழப்பங்களைப் போக் கினாலும் அதை உலகம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் வாழும் உலக மக்கள் ஏற் றுக் கொண்டால்த்தான் எம்மால் இவ்வுலகில் அமைதியாக வாழமுடியும். மனிதர்கள் எல் லாரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அவரவர் இயல்பு பக்குவநிலைக்கேற்ப வழி நடத்தவே இறைவன் குருவாக இவ்வுலகில் அவதாரம் செய்கின்றார். யோகர் சுவாமிகள், இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவே கானந்தர் மற்றும் புத்தர், யேசு முதலானவர் களின் உபதேசங்களைப் படித்து உணர்ந்து கொள்ள முடிந்தாலும் வாழ்க்கை நடை முறைக்கு அவை கஷ்டமாக இருந்தது. ஆனால் எனை ஆட்கொண்ட குருவான பக வான் பாபாவின் வழிநடத்தல் நடைமுறைக்கு இலகுவாக அமைந்தது. பகவத்கீதையின் ஒவ்வொரு அம்சத்தையும் அப்படியே ஊட்டியதோடு இல்லறத் துறவு என்பதைப் பற்றியும் புரியவைத்துப் பற்றற்ற வாழ்வினை எவ்வாறு வாழலாம் என்பதையும் அறிவித்து வழிநடத்திக் கொண்டிருக்கின்றார். தானே எல்லா உருவமுமாக இருப்பதை உணர்த் தியதோடு "நான்" என்ற வார்த்தையின் பொரு ளையும் உணர்த்தி நான் தேடிய உண் மையை எனக்குத் தெளிவாகக் காட்டியுள் ளார். நமது குழப்பங்கள் சந்தேகங்களைப் போக்கி நம்மை முழுமனிதனாக்கி வாழும் வழியைக் காட்டி அமைதியையும் சாந்தி யையும் அருளும் குருநாதரிடம் நம் மனத்தை முழுமையாக அர்ப்பணித்துவிட்டால் அங்கே வேண்டாத நச்சுக் குணங்களான காமம், குரோதம், பொறாமை முதலிய அழுக்குகள் கசடுகளைப் போக்கி நற்சிந்தனைகள் உரு வாகும் விளை நிலமாகப் பண்படுத்துவார். இதனால் நமக்கு ஏற்படும் துன்பமும் நோவும் தற்காலிகமானதே. இவற்றையெல்லாம் நம் வாழ்க்கைப் பாதையில் அனுபவித்துக் கடந்து சென்றால்த்தான் நிரந்தர சமாதானம், அமைதியான வாழ்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பகவான் பாபா, விபூதி கொட்டுதல், தேன் வடிதல், மற்றும் குங்குமம் கொட்டுதல் போன்ற பல அற்புதங்களைப் பல இடங்களில் நிகழ்த்தியுள்ளதாகப் பக்தர்கள் கூறுவர். இதனால் பல விமர்சனங்கள் எழுந்தன. இப்படி வீபூதியையும் குங்குமத்தையும் கொட்டித் தன்னை விளம்பரப்படுத்துவதை விட ஏழை மக்களுக்காக உணவுப் பொருட் களை வழங்கலாம்தானே எனப் பலர் என் காதுபடக் கூறினர். அவ்வேளையில் பகவா னிடம் இதைக் கேட்க வேண்டுமென்று நான்

*குடி குடியைக் கெடுக்கும். நாட்டையும் கெடுக்கும்.*

யோசித்தேன். அக்காலகட்டம் மிகவும் தீவிர மான போர்க்காலமாகும். அதனால் நான் அவரிடம் விடுத்த கோரிக்கையும் வேண்டு தலும் உலக சமாதானமும் ஒற்றுமையுமே. இதற்கு அவர் அளித்த பதில் உன்னை முழுமையாக என்னிடம் ஒப்படை நான் என் னைத் தருவேன். "நான்" அன்பு, ஆற்றல் சமாதானத்தின் உட்பொருள் ஆவேன் என்ப தாகும்.

இவரது முதல் அவதாரம் சக்தி சொருபமான சீரடி சாயிபாபாவின் அவதாரம் ஆகும். இரண்டாவதான இவர் சிவசக்தி சொருபமான சத்திய சாயிபாபாவின் அவதார மாகும். இதனை அவர் தனது அருளுரை யில் கூறியதை சாயி பக்தர்கள் அறிவர். மூன்றாவதாகச் சிவசொருபமாகப் பிரேமசாயி யாக வரவிருப்பதாகவும் அருளியுள்ளார். சிவபூமியான எமது திருநாட்டில் இந்த அவ தாரம் தன் புனிதத் திருவடியைப் பதிக்க வேண்டும். சிவபூமி சீர்பெற வேண்டும். சீதை யைச் சிறை வைத்ததால் சீரழிந்த சிவபூமி மீண்டும் சீர்பெற்றுச் சிறப்புடன் விளங்க வேண்டும். நிரந்த சமாதானம் உலக மக்கள் யாவர்க்கும் கிடைக்க வேண்டுமென்று பிரார்த் திப்போம். சிவபூமியில் சைவமும் தமிழும் தழைத்தோங்கவும் உண்மை வாழ்வை உணர்ந்து வாழ்வின் பயனை அடையவும் சிவபூமிவாழ் மக்கள் அனைவரும் சேர்ந்து பிரார்த்திப்போம். முழுமையான நம்பிக்கை விசுவாசத்துடன் பிரார்த்தித்தால் இரங்கி வருவார்; எம்மிடம் இறங்கி வருவார் சாயீசன். ஆகவே எல்லாரும் சேர்ந்து பிரார்த்திப்போம். ஆற்றங்கரையானுக்கே இவ்வேண்டுதல் சமர்ப்பணம்.

## பக்தி வெள்ளம் பெருகும்!

**பல்லவி**

உனைப் பாடித் தொழுவதொன்றே பேரின்பம்! முருகா!
உன் புகழ் பாட வருமோ வாழ்வில் துன்பம்? (உனைப்)

**அநுபல்லவி**

நினை எந்தன் நெஞ்சம் நினைக்காத நாளில்லை
நீயின்றி இவ்வுலகில் யார் எனக்குத் தஞ்சம்?
(உனைப்)

**சரணம்**

பண்ணோடு இசைபாட பரிவுகொண்டு அருள்புரிவாய்!
பைந்தமிழில் நினைப்பாட கவிஞானம் நீ தருவாய்!
சண்முகா! நினை நாடி சந்நிதிக்கு நான் வந்தேன்!
சஞ்சலங்கள் தீர்ப்பவனே! சரணம் என்று உனைப் பணிந்தேன்!
(உனைப்)

அன்னதானக் கந்தன் என்று அகிலம் உனைப் போற்றும்
அடியவர் மனங்களெலாம் உன் புகழைச் சாற்றும்!
உன் பதங்கள் நினைந்து, உள்ளங்களெல்லாம் உருகும்!
உயர்வான உன் தலத்தில் பக்தி வெள்ளம் பரவும்!! (உனைப்)

-கி. குலசேகரன்-

*நெருக்கடியின்போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது மிகப் பெரிய பலம்.*

# ஆனந்தக் கிருஷ்ணனின் அற்புத லீலைகள்

(தொடர்ச்சி...

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள் –

## ரிஷி பத்தினிகள்

பகவான், பலராமரோடும், மற்றவர்களோடும் பசுக்களை மேய்த்துக்கொண்டு போனார். கோடை வெப்பம் சுட்டெரித்தது. குடைபோல் விரிந்து நிழல்கள் தரும் மரங்களைக் காட்டி, அதனூடே ஆத்ம ஞானத்தையும் போதித்தார். இந்த மரங்கள் காற்று, வெய்யில், மழை, பனி எல்லாவற்றையும் தான் ஏற்றுக்கொண்டு, அவைகளிடம் இருந்து நம்மைக் காக்கின்றன. எல்லா உயிர்களுக்கும் ஜீவனத்தைக் கொடுக்கின்ற இந்த மரங்களின் ஜன்மம் மிகவும் உயர்ந்தது.



இவ்வுலகில் பிறந்தவர்கள், மற்றவர்களுக்கு பணத்தாலும், அவர்களுடைய நன்மையை சிந்திப்பதாலும், அவர்களுக்கு நல்லதை உபதேசிப்பதாலும் நன்மை செய்ய வேண்டும். உடல் எடுத்ததன் பலன் இதுவேயாகும் என்று சொல்லியபடியே யமுனைக்குச் சென்றார். பசுக்கள் யமுனை நீரைக் குடித்தன. கோபாலர்களும் குடித்தார்கள். பசுக்கள் மேயத் தொடங்கின. கோபாலர்களுக்கு நல்ல பசி. அவர்கள் கிருஷ்ணரிடம் வந்து தங்களுக்குப் பசிக்கிறது. சாப்பிட ஏதாவது வழி இருக்கிறதா எனக் கேட்டனர்.

அருகில் இருக்கும் அந்தணர்களின் மனைவிமார்கள் கிருஷ்ணனிடம் மிகுந்த பக்தி பூண்டவர்கள். அவர்களுக்குக் கிருஷ்ணர் அனுக்கிரகம் செய்ய எண்ணினார். "அருகே ஆங்கிரஸ் என்ற சத்ரயாகத்தை அந்தணர்கள் செய்கிறார்கள். அவர்களுடைய யாகசாலைக்குப் போய் நானும், பலராமனும் சொன்னோம் என்று உணவு கேளுங்கள்" என்றார். அவர்களும் அப்படியே போய்க் கேட்டார்கள். அவர்கள் இல்லையென்றும் சொல்லவில்லை. தருவதாகவும் சொல்லவில்லை. பேசாமலிருந்து விட்டார்கள். கோபாலர்கள் திரும்பிவந்து நடந்ததைக் கூறினார்கள்.

கிருஷ்ணர், "இப்போது அவ்வந்தணர்களின் மனைவியர்களிடம் போய் நான், பலராமரோடு வந்திருப்பதைச் சொல்லுங்கள். அவர்கள் வேண்டிய மட்டும் உணவளிப்பார்கள்" என்றார். கோபர்கள் போய்ச் சொன்னதும், அவர்கள் பரபரப்போடு போஜன பதார்த்தங்களை

*எல்லோருக்கும் நண்பனாயிருப்பவன் யாருக்கும் நண்பனல்லன்.*

எடுத்துக்கொண்டு கிருஷ்ணர் இருக்கும் இடத்துக்குக் கிளம்பினார்கள். அவர்களது கணவன்மார் தடுத்தும், அவர்களைப் பொருட் படுத்தாமல் கிருஷ்ணர் இருக்குமிடத்துக்கு வந்தார்கள்.

கிருஷ்ணர் அவர்களைப் புன்முறுவ லோடு வரவேற்று அமரச் சொன்னார். அவர் களைப் போற்றிப் பேசிய கிருஷ்ணர் அவர் களுக்கு விடைகொடுத்து திரும்பிப்போகச் சொன்னார். அவர்கள் எல்லோரையும் மீறிக் கொண்டு தாங்கள் வந்ததால் இனித் திரும் பிப்போக முடியாது என்றனர். கிருஷ்ணர், "நான் உங்களை என்னுடைய பக்தைகளாக ஏற்றுள்ளேன். அங்குள்ளவர்கள் உங்களை வெறுத்து ஒதுக்கமாட்டார்கள். அவர்களுடன் சேர்ந்து சத்ரயாகத்தை முடியுங்கள். விரை வில் நீங்கள் என்னையே அடைவீர்கள்" என்றார். அங்கிருந்தவர்களும் பகவான் திரு வருளால் மனம் மாறி திரும்பிவந்த பெண் களை இன்முகத்தோடு ஏற்றுக்கொண்டார் கள். அதன்பின் பகவான் அன்னத்தை அனை வரும் சாப்பிடச் செய்து தாமும் சாப்பிட்டார்.

## மலைக்குப் பூஜை


நந்தகோபர் மழையைக் கொடுக்கும் தெய்வேந்திரனுக்கு பரம்பரை பரம்பரையாக யாகம் செய்து பூஜித்து வந்தார். கோகு லத்தில் இம்முறையும் பூஜைக்கான ஏற்பாடு களைச் செய்தார். கிருஷ்ணர், "தந்தையே! அவரவர் கர்மவினைக்கேற்ப பலனை அடை கிறார்கள். இதில் தெய்வேந்திரனுக்கு என்ன இருக்கிறது. யார் எதனால் பிழைக்கிறார் களோ அதுவே அவர்கள் தெய்வம். நாம் பசுக்களைக் காத்து அதனால் பிழைக் கிறோம். இக் கோவர்த்தன மலை நமக்குத் தேவையானவற்றைத் தருகிறது. பிராமணர் களுடைய ஆசீர்வாதங்கள் கிடைக்கின்றன. எனவே பசுக்களுக்கும், பிராமணர்களுக்கும், மலைக்கும் யாகம் செய்யுங்கள். இந்திரனுக் கான யாகத்திற்குச் சேர்த்த பொருட்களைக் கொண்டே இந்த யாகம் நடத்தப்படட்டும். யாகம் செய்த அந்தணர்களுக்கு பசுக் களோடு கூடின தட்சணையைக் கொடுங்கள். போஜனமளியுங்கள். எல்லாருக்கும் அவரவர் களுக்குத் தக்கபடி உணவளித்து, பசுக் களுக்குப் புல்லைக் கொடுத்து, கோவர்த் தன மலைக்கும் பலிகொடுங்கள். நல்ல ஆடை அணிகலன்களைப் பூண்டு, சாப்பிட்ட பிறகு பசுக்களையும், பிராமணர்களையும், அக்னியையும், மலையையும் வலம் வந்து வணங்குங்கள். இப்படித்தான் செய்யவேண்டு மென நினைக்கிறேன். உங்களுக்கும் சரி என்றுபட்டால் செய்யுங்கள்" என்றார். நந்த கோபரும் மற்றவர்களும் இக்கருத்தினை ஏற்றுக்கொண்டார்கள்.

கோவர்த்தனகிரிக்குக் கொடுத்த பலி அன்னங்களையெல்லாம், கிருஷ்ணர் பெரிய உருவத்தை எடுத்துக்கொண்டு, "மலைத் தெய்வம்" நான்தான் என சொல்லிச் சாப்பிட் டார். அதே சமயம் கோபாலர்களோடு கிருஷ் ணராக இருந்து, மலையை வணங்குவோம் என்று கூறி தாமும் எல்லோருடனும் சேர்ந்து வணங்கினார். பின் கோகுலம் திரும்பினார் கள்.

தனக்குச் செய்யவேண்டிய பூஜை கெடுக்கப்பட்டதால் இந்திரருக்குப் பெருங் கோபம் ஏற்பட்டது. பிரளயத்தை ஏற்படுத்தக் கூடிய மிகச் சக்திவாய்ந்த மேகக் கூட்டங் களை, பெரும் சூறாவளிக் காற்றுக் கணங் களோடு கோகுலத்தின்மீது ஏவினார். இடி, மின்னலோடு ஆலங்கட்டி மழை இடைவிடாது பொழிந்து பூமி ஜலப் பிரவாகத்தில் மூழ்கி யது. பேய் மழையைத் தாங்க முடியாது எல்லோரும் கிருஷ்ணரைச் சரணடைந்தார்கள்.

*நிழலின் அருமை வெயிலில் போனால் தெரியும்.*

தேவேந்திரர் செயல் என கிருஷ்ணர், "அவருடைய கர்வத்தை அடக்குகிறேன். கோகுலத்தைக் காப்பாற்றுகிறேன்" எனக் கூறினார். பின்பு அநாயாசமாக கோவர்த்தனகிரியைப் பெயர்த்



தெடுத்து ஒரே கையால் தூக்கிப் பிடித்துக் கொண்டார். பின்பு எல்லோரையும் மலையின் கீழே காற்றைப் பற்றியோ, மழையைப் பற்றியோ பயப்படாமல், அவரவர் பசுக்களோடும், பொருட்களோடும் இங்கே வந்து இருங்கள்" என்றார். எல்லோரும் வந்தார்கள். ஏழு நாட்கள் பகவான் அம் மலையைத் தூக்கிக் கொண்டேயிருந்தார். இதனைப் பார்த்து தேவேந்திரர் கர்வம் அழிந்தது. மேகங்களைத் திரும்பிப் போகச் சொன்னார். மழை நின்றது. அதன்பின், "எல்லோரும் வெளியே போகலாம். பயம் இல்லை" என்றார் கிருஷ்ணர். கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து ஆயர்களையும், ஆநிரைகளையும் காத்த வரலாற்றை ஆழ்வார் கூறி மகிழ்கிறார்.

செப்பாடுடைய திருமாலவன் தன்
　　செந்தாமரைக் கைவிரலைந் தினையும்
கப்பாக மடுத்து மணி நெடுந் தோள்
　　காம்பாகக் கொடுத்துக் கவித்தமலை
எப்பாடும் பரந்திழி தெள்ளருவி
　　இலங்கு மணி முத்துவடம் பிறழ
குப் பாயமென நின்று காட்சி தரும்
　　கோவர்த்தன மென்னுங் கொற்றக் குடையே.

எல்லோரும் வெளியே வந்தபின் கிருஷ்ணர் மலையைப் பழையபடி வைத்தார். எல்லோரும் கிருஷ்ணரை வாழ்த்தி, பெற்றோர்கள் அன்போடு அணைத்து ஆசீர்வதித்தார்கள். விண்ணிலிருந்தும் வாத்தியங்கள் முழங்கின. புஷ்பவர்ஷம் பொழிந்தது. அனைவரும் கோகுலத்துக்கு வந்து சேர்ந்தார்கள். கோபர்களுக்கெல்லாம் பெரும் ஆச்சரியம். ஏழு வயதுதானே ஆகிறது. அவ்வளவு பெரிய மலையை எப்படித் தூக்கினான்? நந்தகோபர் தன் மகன் ஸ்ரீமந் நாராயணரே என்பதை கர்க்கமுனிவர் கூறியதை விளக்கினார். அதைக் கேட்ட கோபர்கள் நந்தகோபரையும், கிருஷ்ணரையும் பூஜித்தார்கள். "கற்பூரம் மணக்கின்ற கால்பிடித்தே உய்வேன்"

(தொடரும்...

*பேசாத பேச்சுக்கு நீ எஜமான். பேசிய வார்த்தை உனக்கு எஜமான்.*

# ஆடலரசனின் ஆனித் திருமஞ்சனம்

– **திரு ஆர்.வீ. கந்தசுவாமி** அவர்கள் –

ஊனில் உளத்தில் உணர்வில் உயிரில் உயிருக்குயிராம்
வானில் மொழியில் கலந்து நின்றாலும் மலர்க்கொடியே!
ஞானிகள் தேடும் பரம் சுடரே! உன்னைநான் பணிந்தேன்
ஆனி மாதத்தில் அருள் புரிவாய்! ஜகதாம்பிகையே!

ஆனிமாதம் உத்தராயணப் புண்ணிய காலத்தின் கடைசிப்பருவமாகும். தை முதல் ஆனி வரையில் சூரியன் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி நகர்வதை "உத்தராயணம்" எனவும் ஆடி முதல் மார்கழிவரை வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நகர்வதை "தட்சிணா யனம்" எனவும் கூறுவர். இதில் சூரியன் மிதுனராசியில் இருக்கும் மாதம் ஆனி எனச் சொல்லப்படுகின்றது. தேவர்கள் மாலை நேரப் பூசைகள் செய்யும் நேரம் ஆனி என்பதால் இம்மாதம் தேவர்களுக்கு மாலைநேரம் என்றும் வழங்கப்படுகின்றது. நாமும் அவ்வேளையில் பூசைகள், திருமஞ்சனம் செய்தால் இறைவன் நல்ல அருள் புரிவார்.

ஆனி மாதத்தில் பல முக்கியமான நிகழ்வுகள் நடந்திருக்கின்றன. பலவிதமான வழிபாடுகள், திருமஞ்சனங்கள் செய்து நாம் இறைவனை வணங்கத் தகுந்த மாதமாக ஆனி சொல்லப்படுகின்றது. அபிஷேகம் என்பதன் தமிழ்ச் சொற்கள் திருமஞ்சனம், திருமுழுக்கு என்பதாகும்.



இறைவனே உருகும் வண்ணம் திருவாசகம் இயற்றிய மாணிக்கவாசகச் சுவாமிகட்கு குருந்த மரத்தடியில் இறைவன் ஞானோ உபதேசம் செய்தது ஆனிமாதத்தின் அனுச நட்சத்திரத்தில் ஆகும். அதேபோன்ற ஓர் ஆனி மாதத்தில்தான் மாணிக்கவாசகர் இறைவனோடு இரண்டறக் கலந்தார். முருகனின் வேண்டுகோளுக் கிணங்க சிவாம்சமே அருணகிரியாராகப் பிறந்தது ஆனிமாதம் ஒன்றில்தான். விஷ்ணு சித்தர் எனப்படும் பெரியாழ்வார் பிறந்தது ஆனிமாத சுவாதி நட்சத்திரத்தில் ஆகும். தொலைந்த நமது பக்திப் பொக்கிஷங்களான திவ்விய பிரபந்தத்தைத் தொகுத்தவரும், பல நூற்றாண்டுகளுக்கு

*தாழ்விலே பெருமையும் வாழ்விலே தாழ்மையும் வேண்டும்.*

முன்பே தமிழ்முறையில் வழிபாடுகள் செய்ய வகை செய்தவருமான நாதமுனிகள் அவதரித்தது ஆனிமாத அனுச நட்சத்திரத்தில் ஆகும்.

ஆனி மாதத்தில் சிவபெருமானுக்கு மட்டுமல்லாமல் பெருமாளுக்கும் திருமஞ்சனம் நடத்தப்படுகின்றது. பெருமாளது அங்கி முதலான ஆடையாபரணங் களைந்து அவருக்குக் களைப்பு நீங்க காவிரி நீரால் அபிஷேகம் செய்வதால் இதனை "ஏகாந்த திருமஞ்சன சேவை" எனச் சொல்வார்கள்.

இந்த அபிஷேகத்தைக் கண்ணாரக் கண்டால் அன்னை லட்சுமி தேவியின் அருட் கடாட்சம் கிடைக்கும் எனப் புராணங்கள் கூறுகின்றன.

சிதம்பரத்தில் வீற்றிருக்கும் நடராசப் பெருமானுக்குச் செய்யப்படுவதுதான் ஆனித் திருமஞ்சனம், அனைவராலும் சிதம்பரத்திற்கு நினைத்தபோது செல்ல முடியாதல்லவா? அதனால் நாம் கவலை கொள்ளத் தேவை இல்லை. நடராசர் சந்நிதி உள்ள எல்லாச் சிவாலயங்களிலும் ஆனித் திருமஞ்சனம், சிறப்பாக நடைபெறும். அதனைக் கண்டாலே நாம் செய்த பாவங்கள் அனைத்தும் அகலும்.

விஷ்ணுவை அலங்காரப் பிரியராகவும் சிவனை அபிஷேகப் பிரியராகவும் சொல்லுவார்கள். ஏன் சிவன் அபிஷேகத்தை விரும்ப வேண்டும்? காரணம் நட்சத்திரங்களில் சிவனுக்கு உரியது திருவாதிரை நட்சத்திரம். இது மிகவும் வெம்மை உடையது. அத்தோடு சிவனது கழுத்தில் ஆலகால விஷம் வேறு தங்கி இருக்க அதன் வெம்மையும் அவரைத் தாக்கும். போதாதென்று மயானத்தில் சுடலைச் சாம்பல் உடல் முழுவதும் பூசி அதன் வெப்பம் வேறு. இந்த நிலையில் சிவன் குளிர்ந்த அபிஷேகத்தை விருமபுவதில வியபபென்ன?

சிதம்பரத்தில் பத்துநாட்கள் விழாவாக ஆனித் திருமஞ்சனம் நடைபெறுகின்றது. இங்கு நடராசருக்கும் சிவகாமி அம்மைக்கும் அபிஷேகங்கள் செய்யப்படுகின்றன. பலவகையான பொருட்களால் இறைவனுக்கு அபிஷேகம் செய்யப்படுவதே ஆனித் திருமஞ்சனம் எனப்படுகின்றது.

அபிஷேகங்களைக் கண்ணாரக் கண்டு மனமாரத் தொழுதாலே நல்ல பலன் கிடைக்கும் என்று ஞான நூல்கள் சொல்கின்றன.

அபிஷேகங்களைக் காணும்போது மனம் இறைவனோடு ஒன்றவேண்டும். மனம் உருகிப் பிரார்த்திக்க வேண்டும். அப்படிச் செய்தால் நற்பலன்கள் கிடைப்பதை நாம் விரைவில் உணரலாம்.

ஆனித் திருமஞ்சன தரிசனம் செய்தால் கிடைக்கக்கூடிய சில பொதுப் பலன்கள்; திருமணம், நல்ல ஆரோக்கியம், மன உறுதி, அறியாமல் செய்த தவறுகளால் ஏற்பட்ட பாவங்கள் அனைத்தும் தொலையும். ஆனித் திருமஞ்சன உற்சவம் நடைபெறும் சிவாலயங்கட்குச் சென்று அபிஷேகங்களைக் கண்டு நாமும் இறைவன் அருளைப் பெறுவோம்.

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| யூலை | 06 | ஆனி 21 | சனி | மாணிக்கவாசகர் |
| ஆகஸ்ட் | 07 | ஆடி 22 | புதன் | சுந்தரமூர்த்தி நாயனார் |
| ஆகஸ்ட் | 13 | ஆடி 28 | செவ்வாய் | பட்டினத்தடிகள் |

*பெண்ணுக்கு மௌனத்தைப் போன்ற அணிகலன் வேறில்லை.*

(தொடர்ச்சி...)

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

[விரிவான பொருளுரையும் தெளிவுரையும்]

முனைவர் ஆ. ஆனந்தராசன்



## 97. உறுந்தொழிலும், வறுந்தொழிலும்

உறுந்தொழிற்குத் தக்க பயன் உலகம்; தத்தம்
வறுந்தொழிற்கு வாய்மை பயன்.

பொருள்:

உலகர் எச்செயலையும் பற்றோடு செய்வர். பற்றோடு கூடிய அச்செயலுக்குப் பயன் உலகமாகும். அணைந்தோர் அருள் வழியில் நின்று, எச்செயலையும் பற்றின்றிச் செய்வர். அவர் செயலுக்குப் பயன் மெய்ப்பொருளாகிய சிவமேயாகும்.

சொற்பொருள்:

உறும்தொழிற்கு- உலகர் முனைப்போடு பொருந்திப் பற்றோடு செய்யும் தொழில்களுக்கு, தக்க பயன்- ஏற்ற பயன், உலகம்- இன்ப துன்பமாகிய உலக நுகர்ச்சியாகும், தம் தம் வறும்தொழிற்கு- அணைந்தோர் அங்ஙனம் முனைந்து செய்யாது, திருவருள் செலுத்திய வழியிலே சென்று, பற்றில்லாமல் செய்யும் தொழில்களுக்கு, பயன்- ஏற்ற பயன், வாய்மை- மெய்ப்பொருளாகிய சிவமேயாகும்.

**விளக்கம்:**

**உறுந்தொழில், வறுந்தொழில் - பொருள்:**

தொழிலை உறுந்தொழில் எனவும், வறுந்தொழில் எனவும் இரண்டாக வகுக்கின்றார் ஆசிரியர். உறுந்தொழில் என்பது பற்றோடு பொருந்திச் செய்யும் செயல். வறுந்தொழில் என்பது பற்று இல்லாது செய்யும் தொழில். வறுமை என்பது இன்மை எனப் பொருள்படும். பொதுவாகப் பொருளின்மையே வறுமை எனப்படும். இங்கே பற்றின்மையே வறுமை எனப் பட்டது. எனவே பற்றின்மையோடு செய்வது வறுந்தொழிலாயிற்று. உலகோர் செய்வதெல்லாம் உறுந்தொழில். ஞானிகள் செய்வதெல்லாம் வறுந்தொழில்.

**வறுந்தொழிலுக்கு எடுத்துக்காட்டு:**

வறுந்தொழில் என்பதனை விளக்கும் நிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிடுவோம். வலைத் தொழில் புரியும் பரத குலத்தில் வந்தவர் அதிபத்தர் என்ற அடியார். அவர் மெய்யுணர்வு

பெற்றுச் சிவபத்தியில் மேலோங்கி நின்றார். மீன் பிடித்தலின் ஊடாகவே அவர் சிவத் தொண்டுக்கும் வழிவகை கண்டு அதனை நாடோறும் செய்து வந்தார். ஒவ்வொரு நாளும் தம் ஏவலர்கள் கடலிற் போட்டு இழுக்கும் வலையில் அகப்படும் மீன்களில் முதன்மையானதொன்றை "இது நட்டம் ஆடிய நம்பருக்கு" என்று கூறி விடாத அன்புடன் அதனை மீளவும் கடலில் விட்டு விடும் நியமம் பூண்டிருந்தார்.

திருவருட் செயலால் ஒரு காலகட்டத்தில் பல நாட்கள் தொடர்ந்து ஒரே ஒரு மீன் மட்டும் அவர் வலையிற் படுவதாயிற்று. அதனையும் சிவனுக்கென்றே கடலில் மீளவும் விட்டு வந்தார். இதனால் அவரது வருமானம் குறைந்தது. உணவுக்கும் வழியில்லாத நிலை வந்துற்றது. அவரும் அவரது சுற்றத்தாரும் பசியால் வாடினர். இங்ஙனம் தளர்ந்து வாடும் நிலை எய்தியபோதும் அவர் தமது தொண்டு நிலையில் சிறிதும் தளரவில்லை.

ஒருநாள் பொன் மீன் ஒன்று அவர் வலையில் அகப்படுவதாயிற்று. அவ்வற்புத மீன் அவரிடத்தில் எத்தகைய பற்றுதலையும் ஏற்படுத்தவில்லை. அதனைக் கொண்டு தமது வாழ்வை வளப்படுத்திக் கொள்ளலாம் என்ற ஆசை சிறிதும் எழவில்லை. இந்த அரிய மீன் சிவனுக்கே உரியது எனக் கொண்டு "சென்று சேர்க சிவன் கழற்கே" என்று கூறி அதனை அலை கடலில் விட்டார்.

இவ்விடத்தில் உலகத்தாரின் நிலையை எண்ணிப் பாருங்கள். பெரும்பாலான மக்கள் மதிப்பது பொருள் ஒன்றைத் தான். பொருள் இருந்தால் பல காலத்திற்குக் கவலையின்றி வாழலாம் என்ற எண்ணத்தினால் பொருளை மேலும் மேலும் சேர்க்கிறார்கள். நன்றாக வாழ்கிறவர்கள் என்று பொருள் படைத்தவர்களைச் சொல்கிறார்கள். பொருள் இல்லாதவர்களை வாழத் தெரியாதவர்கள் என்கிறார்கள். பொருள் இருந்தால் போதும். எல்லாவகையான போகங்களையும் பெறலாம். பதவியும் மதிப்பும் பாராட்டும் அவர்களைத் தேடி வரும்.

இக்காலத்தில் மட்டும்தான் இப்படி என்று எண்ண வேண்டாம். இந்நிலை எல்லாக் காலத்திலும் உண்டு. "அகில லோகமும் பொருள் முதற்றாம்" என்று சேக்கிழாரும் சொல்லுகிறார்.

பற்றுகிற பற்றுக்கள் பலவற்றுள்ளும் தலைப்பற்றாகப் பொருட்பற்றையே பற்றும் இவ்வுலகில் அதனைத் தூக்கியெறிந்தவர் அதிபத்தர் என்பதை மேற்கூறிய வரலாறு புலப்படுத்தும். உலகமெலாம் விலைபோகக் கூடிய பொன் மீன் கிடைக்கவும் சிறிதும் பற்றுதல் இல்லாமல் அதனைப் போக விடுத்த அவர் செயல் வறுந்தொழில் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் அமைகிறது.

வறுந்தொழில் செய்ய மாட்டாது உறுந்தொழிலே செய்வது உலகர் நிலை. அவர்க்கு உலகமே பயனாகும். அஃதாவது அவர் உலகில் மீளமீளப் பிறந்து இன்ப துன்பங்களை மாறி மாறி நுகர்வர் என்பது கருத்து.

அணைந்தோர் ஆகிய அடியவர்கள் புறத்தே உலகர் போலவே வாழ்ந்தாராயினும் பிற தொழில்களைச் செய்து ஒழுகினாராயினும், அவர்க்குச் சிவமே நுகர்ச்சிப் பொருளாகும் என்பது கூறப்பட்டது.

**குறிப்பு:**

இச் செய்யுளில் "வாய்மை" என்றது மெய்ப்பொருளாகிய சிவத்தைக் குறிக்கும்.

*ஒருமுறை பேச முன்னர் இருமுறை யோசி.*

98. வினை நீங்கும் முறைமை

ஏன்றவினை உடலோடு ஏகும்; இடையேறும் வினை
தோன்றில் அருளே சுடும்.

பொருள்:

இப்பிறப்பில் நுகர்தற்கு என்று முகந்து கொண்டு வந்த பிராரத்த வினைகள் சீவன் முத்தர்க்கு இவ்வுடம்பு இருக்கும் வரையில் இருந்து, அவரால் பற்றின்றி நுகரப்பட்டு இவ்வுடம்பு நீங்குங் காலத்தில் முடிந்தொழியும். அவர் பிராரத்த வினையை நுகரும்போது புதுவினையாகிய ஆகாமியம் தோன்றுமாயின் அதனைத் திருவருளே எரித்துவிடும்.

சொற்பொருள்:

ஏன்ற- (இப்பிறப்பில் நுகர்தற் குரியனவாக) முகந்து கொண்டு வந்த, வினை- பிராரத்த வினைகள், உடலோடு ஏகும்- சீவன் முத்தர்க்கு இவ்வுடம்பு நீங்கும் காலத்து நுகரப்பட்டுக் கழியும், இடை- அவர் அப் பிராரத்த வினையை நுகரும்போது இடையில், ஏறும் வினை- புதிதாய் உண்டாகக் கூடிய ஆகாமிய வினை, தோன்றில்- தோன்றுமாயின் (அது வளர்ந்து சஞ்சிதமாய் முற்றாதவாறு) அருளே சுடும்- திருவருளே அதனை விரைய அழிக்கும்.

விளக்கம்:

**வினை தோன்றி வளரும் முறை:**

இப்பிறப்பில் நாம் நல்லனவும், தீயனவும் ஆகிய செயல்களைச் செய்கின்றோம். அச்செயல்களைச் சில பயன்களை விரும்பிச் செய்கின்றோம் நன்மைகளை வருவித்தற்காகச் சில செயல்களைச் செய்கின்றோம். தீமைகளைப் போக்கிக் கொள்வதற்காகச் சில செயல்களைச் செய்கின்றோம். இப்படிச் செய்யும் செயல்கள் ஆகாமியம் எனப்படும்.

அவை உடனே அழிந்துவிடுவதாக நாம் நினைக்கிறோம். அப்படியன்று. அவை நிகழும்பொழுது கண்ணுக்குப் புலப்படுகின்ற நிலையில் உள்ளன. பின், புலப்படாத நிலையை அடைந்து நிற்கின்றன. எனவே அவை அடியோடு இல்லாமல் அழிந்து போய்விட வில்லை. புலப்படுகின்ற தூல நிலையிலிருந்து நீங்கிப் புலப்படாத சூக்கும நிலையில் உள்ளன என்பதே உண்மையாகும். புலப்படாத அந்நிலையில் அவை சஞ்சிதம் எனப் பெயர் பெறுகின்றன. பலப் பல பிறப்புக்களில் செய்யப்பட்டுக் கிடக்கும் வினைகளின் தொகுப்பே சஞ்சிதம் ஆகும்.

சஞ்சிதம் முழுதும் ஒரே பிறப்பில் பயனாய் வருதல் இல்லை. அத்தொகுப்பிலிருந்து ஒரு சிறு பகுதியை முகந்துகொண்டு ஒரு பிறப்புத் தோன்றும். அவ்வாறு பழவினையினின்றும் முகந்து கொண்ட வினைகள் பிராரத்தம் என்ற பெயரைப் பெறும். அவை இன்ப துன்பமாகிய பயனை விளைவிக்கும்.

இவ்வாறு வினைகள் ஆகாமியமாய்த் தோன்றி, சஞ்சிதமாய்க் கிடந்து, பிராரத்தமாய் வந்து பயன் கொடுக்கும்.

*ஒரு வினாடிப் பொறுமை பல காலத்துக்குச் சுகத்தைக் கொடுக்கும்.*

பிராரத்தம் இப்பிறப்பில் நன்மையாகவோ, தீமையாகவோ வந்து பொருந்தும் பொழுது, நாம் முன்பு செய்த செயலே இவ்வாறு பிராரத்தமாய் விளைகிறது என்று யாரும் எண்ணுவதில்லை. அதனை இறைவன் ஊட்டுகிறான் என்றும் எண்ணுவதில்லை. அந்த நேரத்தில் அதற்குக் காரணமாய் நிற்பவர் யாரோ அவர் மேல் விருப்போ வெறுப்போ கொள்ளுதல் மாந்தர் இயல்பு. அவ்விருப்பு வெறுப்புக்கள் சொல்லாய் வெளிப்படும்; செயலாய் நிகழும். அவையே ஆகாமிய வினையாய்ப் பின் சஞ்சிதமாகும். இவ்வாறு வினைகள் ஏறிக்கொண்டே போகும்.

பிராரத்தத்தை விருப்பு வெறுப்போடு அனுபவிக்கின்ற நிலையில் ஆகாமியம் தோன்றும் என அறிந்தோம். இங்கே ஓர் ஐயம் எழலாம். ஞானிகளாகிய சீவன்முத்தர்க்கு உடம்பு உள்ள வரையில் பிராரத்த வினை இருக்கும். அ∴து இருக்கின்ற வரையில் அதனது தாக்கமும் இருக்கும். அங்ஙனம் பிராரத்த வினை தாக்கும்பொழுது அதனை அனுபவிக்கின்ற நிலையில் ஆகாமியம் தோன்றவே செய்யும். அவ்வாறாயின் ஞானிகள் வினைத் தொடர்பிலிருந்து எங்ஙனம் நீங்க முடியும் என்பதே அவ் ஐயம். அவர்கள் தமக்கு வரும் பிராரத்தத்தை எப்படி அனுபவிப்பார்கள் என்பதைத் தெரிந்துகொண்டால் இதற்கு விடை கிடைத்துவிடும்.

**பிராரத்த வினையின் தாக்கம்:**

இங்கே ஒன்றைத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். பிராரத்தம் நேரே உயிரைத் தாக்குவதில்லை. அ∴து உடலில் நோய் முதலியவற்றைத் தோற்றுவித்து உடல் மூலமாகவே உயிரைத் தாக்கும். ஒருவர் ஒழுக்கமாக வாழ்க்கை நடத்துகிறார். ஒழுங்கான உணவுப் பழக்கம் வைத்திருக்கிறார். எந்தத் தீய பழக்கமும் அவரிடம் இல்லை. ஆயினும் அவருடலில் எப்படியோ நோய் வந்து பற்றுகிறது; அவரை வாட்டி வருத்துகிறது. முன்னை வினையாகிய பிராரத்தம் இப்பொழுது இவ்வாறு வந்து தாக்குகிறது என்று சொல்வதைத் தவிர வேறு என்ன காரணம் சொல்ல முடியும்?

பட்டினத்தார் அவ்வாறுதான் நினைத்தார். அவர் அறிய எந்தத் தவறும் செய்யவில்லை. ஆயினும் அவர்மேல் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டது. அரச தண்டனையை ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்தத் துன்பத்தை அனுபவிப்பதற்குரிய எந்தச் செயலையும் இந்தப் பிறவியில் அவர் செய்ததாக தெரியவில்லை. ஆகவே முந்திய பிறவியிற் செய்த வினையே இதற்குக் காரணமாக இருக்கவேண்டும் என்று தெளிந்தார். "இறைவனே, என் செயலென ஒன்றும் இல்லை. எல்லாம் உன் செயல் என்று உணர்ந்து கொண்டேன். இந்த உடம்பு எடுத்த பிற்பாடு நான் செய்த தீவினை ஒன்றும் இல்லையே. நான் முன் பிறவியிற் செய்த தீவினையே இப்படி வந்து மூண்டது போலும்" என்று கூறினார்.

**உயிர் ஊழாய்க் கழிதல்:**

முன்னை வினையாகிய பிராரத்தம் இவ்வாறு உடலுக்கு ஊறு விளைவிக்கும் பொழுது "உடம்பே நாம்" என்று மயங்கியிருப்பவர்களே உடலுக்கு வந்த துன்பத்தை உயிராகிய தமக்கு வந்ததாகக் கருதித்துவண்டு போவார்கள். பிராரத்தம் உடல் வழியாக இப்படி உயிரைத் தாக்குகிறது. இங்ஙனம், வினைகள் உயிரைத் தாக்கித் தம் பயனைக் கொடுத்து நீங்குதலை "உயிர் ஊழாய்க் கழிதல்" என்பார்கள்.

*தவறுகள் தெரியும்போது மனச்சாட்சி விடுவதில்லை.*

**உடல் ஊழாய்க் கழிதல்:**

சீவன் முத்தராகிய ஞானிகள் "உடல் நாமல்ல" எனத் தெளிந்து, உடலில் பற்றின்றியிருப்பர். அதனால் பிராரத்தம் அவரது உடலை நலிகின்றபோது அவர் கவலை அற்றிருப்பர். மேலும் அவர் பிராரத்தம் விளையும்போது நன்மையைக் கண்டு விரும்புதலும் இல்லை. துன்பத்தைக் கண்டு வெறுத்தலுமில்லை. அப்படிப்பட்ட அவரைப் பிராரத்தம் எப்படித் தாக்கும்? இங்ஙனம் பிராரத்தம் உயிரைத் தாக்கமாட்டாது அவரது உடல் அளவில் பயனைக் கொடுத்து நீங்குதலை "உடல் ஊழியாய்க் கழிதல்" என்பார்கள்.

**மூவகை வினையும் ஒழிதல்:**

இவ்வாறு ஞானிகள் பிராரத்தவினை தோன்றினால் அதனை அவனது அருளாகவே கருதி அனுபவிப்பதல்லது இன்பத்தில் மகிழ்ச்சியோ, துன்பத்தில் வாட்டமோ கொள்வதில்லை. இங்ஙனம் பற்றின்றி அனுபவிக்கவே, அ∴து உடல் ஊழாய்க் கழியும். அ∴து அவர்களது உணர்வைத் தாக்காது உடல் அளவாய் ஒழிதலால், ஆகாமியத்தை உண்டாக்காது. எப்போதாயினும் சோர்வு காரணமாக விருப்பு வெறுப்புத் தோன்றி அது காரணமாக ஆகாமியம் தலையெடுக்குமானால், அருளே அதனைச் சுட்டழித்து விடும்.

மூவகை வினையுள், சஞ்சிதமாகிய கிடைவினை முழுதும், முன்னே ஞானகுரு நிருவாண தீக்கை செய்து ஞானத்தை அளித்த காலத்தில் அவரது அருட்பார்வையால் எரிக்கப்பட்டு ஒழிந்தது. சஞ்சிதம் போக, பிராரத்தமும் ஆகாமியமும் உள்ளன. அவ்விரண்டின் நிலை என்ன என்பதை இச்செய்யுளில் கூறியுள்ளார் ஆசிரியர்.

ஏன்றவினை என்றது பிராரத்த வினையே. இடையேறு வினை என்றது ஆகாமியத்தை. பிராரத்தம் அனுபவத்தால் தீரும். அதனை விருப்பு வெறுப்பின்றி அனுபவிப்பதனால் ஆகாமியம் தோன்ற வழியில்லை. ஒருக்கால் தோன்றுமாயின் அருளே அதனைச் சுட்டழிக்கும் என்பது இச்செய்யுளில் கூறப்பட்டது.

வினையினால் உண்டாவதே பிறப்பு. சீவன் முத்தர்க்கு மூவகை வினையும் மேற்கூறியவாறு தீர்தலின், அவர்கள் உடம்பு நீங்கிய பின் அடைவது வீடுபேறேயன்றிப் பிறவியன்று என்பது இதனால் விளங்கும். (தொடரும்...

**நாயிற் கடையோன்!**

பாரும் ஊரும் பல கலை
ஞானமும் உனதருளே!
ஏதும் அறியா எளியோன்
நாயிற் கடையோனே!
தீராத் துயரில் வெந்து நொந்து
பாதம் பணிந்தேனே!
ஞானம் பெற்றேன் அனைத்தையும்
துறந்தேன் சந்நிதியானே!

-இராம ஜெயபாலன்-

*தூய்மையான உள்ளத்தில் வஞ்சக எண்ணங்களுக்கு சிறிதும் இடம் கிடையாது.*

# ஒழுக்கம் விழுப்பம் தரும்

– திரு முருகவே பரமநாதன் அவர்கள் –

பழக்கம், வழக்கம், ஒழுக்கம் மனிதத்தின் மாண்பை, மதிப்பை, விழுமியங்களை வெளிப்படுத்துவன. பழக்கவாசனை சார்ந்ததன் வண்ணமாய் அமையலாம். பழக்கம் வழக்கமாகி ஒழுக்கமாகவும் அமையும். இவை நல்லனவாயும் அமையலாம். அல்லனவாயும் இயையலாம். வேண்டாப் பழக்கங்கள், தீய பழக்கங்கள் நம்மைக் கெடுக்கும். எனவே நல்லனவற்றையே நாம் நடைமுறைப் படுத்தல் வேண்டும். சட்டமும் கட்டளையும் ஒழுங்கும் ஒழுக்கமும் மக்கட் சமுதாயத்தை வழிப்படுத்தி மேம்பாடடையச் செய்வன. சமுதாய மேன்மைகள் இதனால் இன்னும் மேம்பாடடையும். எனவே ஒழுகலாறுகள், ஒழுங்குகள், ஒழுக்கங்கள் மனித இனத்தின் சட்ட திட்டங்கள் நல்லவராவதும், தீயவராவதும் சூழலால் வருவன. வயல்வெளிகளிலே, காடுகளிலே பறவைகளும் மிருகங்களும் நடந்து நடந்து செல்லும் பாதைகளின் சுவடுகளை நாம் காண்கிறோம். அப்பாதை வழி மீண்டும் மீண்டும் நடக்கும் பழக்கமாகி வழக்கம் ஆகும்போது ஒரு வழி உண்டாகின்றது. பழக்கம் வழக்கமாகும்போது அது பாதையாகி நடைபாதையாகி நிரந்தர தடமாகிறது. மனிதன் நடந்த நடைபாதை மீண்டும் மீண்டும் நடப்பதாற் சிற்றொழுங்கையாகி, தெருவாகி, பெருந்தெருவாகி பகிரங்க வீதியாகி விடும். இவ்வண்ணமே மனிதம் கடைப்பிடிக்கும் வாழ்வியலின் ஒழுங்குகள் ஒழுக்கங்களாகி மனிதப் பண்பை வளர்க்கின்றன. இப்படி நாம் நம்மை வழிநடத்துவதால் நல்ல குணசித்திரங்கள், அறப்பண்புகள் நம்மை வாழ வைக்கின்றன. நல்வாழ்வளிக்கின்றன. எனவே செம்மையான ஒழுக்கம் மனிதனின் தனிமுத்திரைகள், பண்பாட்டுக்கோலங்கள் கலாசாரச் செவ்விகள், நாகரிக அமைவுகள் போன்ற பல நேரியங்கள் ஒழுக்க அத்திவாரத்தில் தங்கி நிற்கும் மனித இயல்களிற் சிலவாம். எனவே பூரண மானுட இயலுக்கு ஒழுக்கம் இன்றியமையாததாம். ஆக வளமார்ந்த வாழ்வுக்கு உளமார்ந்த ஒழுக்கம் வேண்டும். எப்படியும் வாழலாமென்ற பொறுப்பற்ற நிலைபோய், இப்படித்தான் வாழ வேண்டும் என்ற பொறுப்புணர்வு ஒழுக்கத்தோடு நெருங்கிய தொடர்புடையது. இவ் ஒழுக்கமே ஆக்கபூர்வமான காரியங்களைச் செய்ய வடிகாலாகும். இஃது பொதுவும் சிறப்பும் என்று விதந்தோதப்பட்டாலும் சமூகம், சமயம், நிலம், பாரம்பரியம், தேச வழமை போன்றவற்றாற் சிறிது பேதப் பட்டாலும் புனிதமான மனிதத்தைக் கட்டி எழுப்புவன ஒழுக்கங்களே. மனிதம் மாசுறாமல் சுற்றுப்புறச் சூழலினால் அழுக்கேறாமல் புனிதமாக நல்லொழுக்கம் நன்னடை முக்கியமாம். ஈன்றுபுறந்தருதல் என்தலைக்கடனே. சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே. நன்னடை நல்குதல் வேந்தற்குக் கடனே என ஒரு தாய் சொல்கிறாள். அவள் காட்டும் நன்னடை மனித குலத்துக்கே பொதுச் சொத்து. வீதியொழுங்கு எப்படி விபத்தில் இருந்து மக்களைப் பாதுகாக்குமோ, நல் ஒழுக்கமும் நம்மை மகிழ்ச்சியாய் வாழ வழிகாட்டும். எனவே நாம் நல்லொழுக்கம் உள்ளவர்களாய் மிளிரவேண்டும். நாம்

*சத்தியம் என்பது மனவலிமை, சாந்தம் என்பது மன அடக்கம்.*

மட்டுமன்றி நம் சந்ததியும் மனிதத்தின் நல்ல பூக்களாய் வளர நாம் வழிகாட்டிகளாய் அமைய வேண்டும். நல்லவர்கள் என்ற விருது நமக்கு வரவேண்டும். கெட்டவர்கள் என்ற அவப்பெயர் வாங்கக் கூடாது. அவப் பெயர் ஒரு விநாடியில் வரலாம். நற்பெயர் காலாகாலமாய்க் கட்டி வளர்க்கப்பட வேண் டும். இந்த நிலை கல்வியாலே, சமூகக் கட்டுப்பாட்டாலே நல்லோர் புழக்கத்தாலே, சமயத்தைக் கடைப்பிடிப்பதாலே உயர்ந்த நூல்களைப் படிப்பதாலே நல்லாசிரியர் களாலே நல்லுறவுகளாலே நல்ல நண்பர் களாலே, ஞானியர் வழிநடத்தலாலே, தானே உணர்ந்து நடப்பதாலே, கூட்டுறவாலே, பெற் றோர்களாலே அமையும். எனவே நாம் வாழக் கற்றுக்கொண்டாற் போதாது. வாழ்க்கையை யும் கற்றுக்கொள்ள வேண்டும். வாழு வாழ விடு என்ற கோட்பாடுகளை அனுசரிக்கவும் வேண்டும். நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை என்பது தமிழரசி வாக்கு. பாட சாலை மாணவர்க்குக் குறிப்பிட்ட ஒழுகலாறு கள் சட்டப் புத்தகமாக வழங்கப்படுகிறது. சாரணர் ஒழுகலாறுகள், பல்கலைக்கழக ஒழுகலாறுகள், பாராளுமன்ற ஒழுகலாறுகள் சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. நீதி மன்ற நடைமுறைகள் மீறப்படின் தண்டிக்கப் படும். தண்டிக்கப்படல் ஒருவன் மீண்டும் குற்றவியலில் ஈடுபடாமல் இருக்கப் பயன் படும். தன் பிள்ளை தவறிழைத்தாற் தாய் தந்தையர் தண்டனை வழங்கி இனிமேல் ஒழுங்காய் இருவென புத்தி சொல்கிறார்கள். சமகால நடைமுறைகள் ஒழுக்க இயலை மீறுவதாற் பல அநர்த்தங்கள், அபகீர்த்திகள் ஏற்படுகின்றன. மனித மீறல் நிறைந்த இன் றைய காலகட்டம் ஒழுக்கக்கேட்டையே நியாயப்படுத்தும் அளவுக்கு மாற்றம் கண்டு உள்ளது. எனவே குற்றவியல் மலிய மக்கள் அநீதிக்கே தம்மை வழிப்படுத்தி அதுதான் நீதியென்று வாதாடுகிறார்கள். தராசுபோல் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். மனச் சாட்சியைக் கொல்லக்கூடாது. நீதிக்கு பாபத் துக்குப் பயப்படவேண்டும். கடமை கட்டுப்பாடு கண்ணியம் பேண நல்லொழுக்கங்களை அமுல் படுத்த வேண்டும். அநீதிக்குத் தண்டனை வழங்க வேண்டும். அநீதியைக் கண்டிக்க முடியாத இக்கட்டில் இன்றைய மானுடம் நிலை தளர்கிறது. எனினும் நாம் ஒழுக்க ஈனர்களாய் இயங்கக் கூடாதென்பதை இனி வள்ளுவர் வாக்கிற் காண்போம்.

திருக்குறளிலே ஒழுக்கமுடைமை என்றோர் அதிகாரம் வருகிறது. அதிலே அமைந்த முதற்பா இது.

**ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப்படும்.**

-குறள் 131.

விழுப்பம்- உயர்வு, மேன்மை, சிறப்பு, ஓம்புதல்- பாதுகாத்தல். இந்த உயிரிலே நமக்குப் பிடிப்பும், அபிமானமும்கூட உயிருக்கு ஆபத்து வராமல் காக்கிறோம். சுப்பர்சோனிக் விமானம் குண்டுவீசும்போது உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டு தப்பிக்கொள்ள அதன் பிடியில் இருந்து ஓடி மறைகிறோம். எனவே உயிர் எமக்குப் பெரிது. அதைப் பாது காக்கத் துடிக்கிறோம். இன்று மனித உயிருக் குப் பெறுமானமே இல்லாமற் போய்விட்டது. எனினும் எம்முயிர் எமக்குப் பெரிது அதனிலும் பெரிது ஒழுக்கம் என்பது இந்த நூற்பாவின் கருத்து. அப்பர் என்னிலும் இனியார் எனக் காருமில்லை என்று பேசி, என்னிலும் இனி யார் இன்னம்பர் ஈசனே என்று பாடுகிறார். உடம்பும் உயிரும் சேர்ந்தால் வாழ்க்கை உயிர் போனால் உடம்பு வெறும் சவம். எனவே ஒழுக்கம் போனால் உயரிய வாழ்வு சவமாகும். எனவே என்ன பாடுபட்டும் ஒழுக் கங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பதை அடுத்த குறள் இடித்துரைக்கிறது.

*சேமித்து வைப்பதே தலைசிறந்த வருமானம்.*

பரிந்தோம் பிக்காக்க ஒழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினும் அ∴தே துணை.

-குறள் 132.

ஒழுக்கத்தினை எவ்வாற்றானும் அழிவுபடாமற் பேணி, கஷ்டப்பட்டும் காக்கவேண்டும். ஏனெனிற் தர்மங்கள் எல்லாவற்றையும் ஒப்பீடு செய்து பார்க்கும்போது- இம்மைக்கும் மறுமைக்கும் துணையாய் இருப்பது இவ்வொழுக்கம் ஒன்றேதான். இந்த நல்லொழுக்கத்தால் மேன்பாடு கிடைக்கும். ஒழுக்க ஈனராய் வாழ்ந்தால் எக்காலமும் வராத பழியே உன்னை வந்தடையும் என்கிறார் வள்ளுவர்.

ஒழுக்கத்தி னெய் துவர்மேன்மை இழுக்கத்தின்
எய்துவ ரெய்தாப் பழி.

-குறள் 137.

இவ்வொழுக்கத்தைக்கூட நல்லொழுக்கம், தீயொழுக்கம் என வகுத்துள்ளனர். பொய், களவு, வஞ்சகம், சூது, பொறாமை, காமம், கொலை போன்ற பல கொடிய ஒழுக்கங்களைச் செய்வதனால் துன்பமே உண்டாகும். நல்லொழுக்கம் என்றும் நன்மையே தரும்.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

-குறள் 138.

(இடும்பை- துன்பம்) ஆகவே தலையிலே இருந்து உதிர்ந்த மயிர்போன்றவர்களே தம்தம் நிலையில் இருந்து விலகி இருப்பவர்களென்ற வள்ளுவர் கருத்தை மனதிற் பதித்து ஒழுக்கசீலர்களாய் வாழ்வோமாக.

தலையின் இழிந்த மயிரினையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.

-மேலது 964.

கற்றுணர்ந்தடங்கு
கற்றாய்ந்து ஒழுகு -ஔவையார்.

## நன்மை செய்வதில் முதல் நிற்பான் முருகன்

நன்மைகள் செய்வதில் முதல் நிற்பான் - கந்தன்
நடிப்பால் பலரையும் ஆட்டி வைப்பான்
பன்னிரு தோள் கொண்ட ஆறுமுகன்
படைப்பையும் சிலநாட்கள் செய்து வந்தான்
மன்னவர் சபையில் அவனமர்ந்து
புரியாத தமிழுக்கு உரை புகன்றான் - தினம்
அன்னம் அளித்திடும் அவன் கோயில்
சந்நிதி சுவாமி மோகனதாஸ் மடமாகும்.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*சிக்கனமும் சேமிப்பும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இரு கருவிகள்.*

# வழித்துணை 24

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 நல்லதை நல்லதென்று சொல்லுதற்கு நாவெடுக்க
எல்லையிலோர் உயர்வுதாழ்வு காரணமாய் இருக்குமெனில்
கற்சிலையில் எப்படியாம் கடவுளையும் ஏற்றிடுவார்
வல்லவர்கள் நல்லவர்கள் வாய்திறந்தே சொல்வீர்.

02 தம்மவர்கள் சொல்வதெல்லாம் வேதமென்று ஏற்பவர்கள்
பிறர்சொல்லும் நல்லதையும் பேதமாயே கொள்வர்
தொல்லைகள் சூழ்ந்து அவர் துயர்க்கடலில் வீழ்ந்தபின்பே
நல்லைமணி ஓசையையும் போதமாகக் கொள்வர்.

03 நீதிக்கு அப்பால்நீர் எடுத்தடி வைக்காமையும்
நேர்மையை எந்நாளும் நெஞ்சத்தில் கடைப்பிடிப்பதும்
சாதிக்காய் சமயத்தில் சோதிகளை ஏற்றாமையும்
ஆதிசிவன் அருள்பெறற்கு வழித்துணையாம் என்றறிவீர்.

04 தன்னுணர்வை தனித்துவமாய் பிறருணர்வை பைத்தியமாய்
எண்ணுகின்ற எண்ணங்கள் எண்ணத்தில் இருக்குமட்டும்
மனித நேயமும் பொய் மனிதாபி மானமும் பொய்
புனிதமின்னும் புரியாத புதிரென்பதே மெய்யாகும்.

05 மண்ணுக்குள் தேடியும் காணாத மாமணியை
விண்ணுக்குள் தேடியும் விளங்காத விழுப்பொருளை
பொன்னுக்குள் பொருளுக்குள் புகழுக்குள் தேடாமல்
உன்னுக்குள் தேடிப்பார் உள்ளொளியாய் விளங்கிவிடும்.

06 தேங்காய் என்பது படைத்தல் பொருளன்று
முடியினுள் முக்கண்ணை மூடிநிற்கும் அசுரனாம்
பொடிபட அடித்தந்த கொடியோனை அழித்தபின்
எடுத்திடும் கருமமே ஏற்றத்தில் முடியுமாம்.

*எல்லோரும் தம்மைவிட்டு வேறு யாரையோ சீர்திருத்த முயல்கின்றனர்.*

07 பிறர்வீட்டு அமங்கலரை அமங்கலராய் ஏற்பவர்கள்
தம்வீட்டில் அவரிருந்தால் தள்ளியோ வைத்திடுவர்
தம்வீட்டார் பிறர்வீட்டார் என்றெண்ணிப் பாராமல்
நொந்தாரை நோகாமல் காப்போரே சுமங்கலராம்.

08 பூசை என்பது ஒருஓசை வெளிப்பாடன்று
பூக்காட்டும் சைகையே பூசை எனப்படும்
பூப்பிறந்து பிறர்க்குதவி நின்னடியை சேருதல்போல்
நாம்பிறந்து புவிக்குதவி நினையடைவோம் என்பதாகும்.

09 ஐம்பூதம் தனையெண்ண ஆண்டவனின் தோற்றமெழும்
ஐந்தொழிலைத் தானுணர அவனசைவு தான்தெரியும்
ஐம்புலனை அடக்கிடவே அம்பிகையோ டெம்பிரானார்
ஐந்துள்ளும் ஒன்றாகி உன்னுருவில் தான்வருவார்.

10 குற்றங்கள் புரிபவர்கள் சுற்றத்தைத் திருத்துதற்கு
முற்றத்தில் வந்திருந்து முயற்சித்தால் அதுநல்ல
பற்றிய நெருப்பணைக்க நிலத்தடி நெய்யெடுத்து
சுற்றுமுற்றும் சிந்திவிடல் போலாகும் அறிந்திடுவீர்.

## புறமுதுகு

நமக்கும் மற்றவர்களுக்கும் இடையே நடைபெறும் விவாதத்தில் கேலியாக விமர்சனம் செய்பவர்களைக் கண்டு கோபப்படுவதைவிட, அவர்கள் வழியிலேயே சென்று அவர்கள் மனம் புண்படாதபடி மிகவும் நாசூக்காக பதில் சொல்ல வேண்டும். அதேசமயம் அவர்களை நம்முடைய அறிவுகொண்டு, திறமையான வார்த்தைகள் கொண்டு நம் வாதத் திறமையால் தரவேண்டிய பதிலை தருகின்றபோது குதர்க்கம் பேசுபவர்கள் திருத்தப்படுவார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்பு பல புலவர்கள் இருந்து வந்தார்கள். அதில் ஒட்டக்கூத்தர், புகழேந்தி என்னும் இரு பெரும் புலவர்களும் இருந்தார்கள். இருவரும் வார்த்தை சித்தர்கள். ஒட்டக்கூத்தர் சோழநாட்டைச் சேர்ந்தவர். புகழேந்தி பாண்டிநாட்டைச் சேர்ந்தவர். ஒரு சமயம் ஒட்டக்கூத்தருக்கும் புகழேந்திக்கும் இடையே ஒரு காரசாரமான விவாதம் நடைபெற்றது. அவர்களுக்குள் நடைபெற்ற விவாதத்தில் ஒட்டக்கூத்தர் பாண்டிய நாட்டைச் சேர்ந்த புகழேந்தியை மட்டம்தட்ட விரும்பினார். அதன் காரணமாக "எங்கள் சோழ நாட்டு மன்னர்கள் முதுகுக்குக் கவசம் அணியமாட்டார்கள். காரணம் போரில் புறமுதுகு காட்டும் பழக்கம் அவர்களுக்கு இல்லை" என்றார் ஒட்டக்கூத்தர்.

புகழேந்தி அவர்கள் சிரித்துக்கொண்டே, "உங்கள் சோழ மன்னர்கள் முதுகுக்குக் கவசம் அணியாததற்கு பாண்டிய மன்னர்கள்மீதுள்ள நம்பிக்கைதான் காரணம். பாண்டிய மன்னர்கள் புறமுதுகு காட்டி ஓடும் கோழைகள்மீது அம்பு வீசுவதில்லை" என்றாராம். புகழேந்திப் புலவரின் சாதுர்யமான பதிலைக்கேட்டு ஒட்டக்கூத்தர் புன்னகை பூத்தார்.

ஆம், நண்பர்களே எந்தவொரு விவாதத்திலும் மற்றவர்களின் மனதைப் புண்படுத்தாத, நல்ல குணங்கள் உங்களையும் அறியாமல் உங்களிடம் குடியிருக்கும்போது மற்றவர்கள் உங்களை அதிகம் விரும்புவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

*நம்பிக்கையைக் கொண்டு மனிதனின் வீரத்தை நிர்ணயித்து விடலாம்.*

# உருத்திராட்சம்

– **திரு ப. பத்மநிருபன்** அவர்கள் –

ருத்திராட்சம் என்பது வடமொழியில் "ருத்ரனின் கண்கள்" என்பதாகப் பொருள் கூறப்படுகிறது. ருத்திரன் என்பது சிவனைக் குறிக்கிறது. "Ganitrus" என்ற மரத்தின் பழத்தில் இருந்து பெறப்படும் கொட்டைதான் இந்த உருத்திராட்சம். இந்த மரங்கள் உலகின் சில பகுதிகளில் மட்டுமே காணப்படுகிறது.

நேபாள நாட்டில் விளையும் உருத்திராட்ச மணிகளே தரத்தில் உயர்ந்தனவாகக் கருதப்படுகிறது. இயற்கையில் உருத்திராட்ச மணி செம்மையும், கருமையும் கலந்தேறிய பழுப்பு நிறத்தில் இருக்கும். கடையில் விற்பனைக்குக் கிடைக்கும் மணிகள் பெரும்பாலும் மெருகேற்றப்பட்டு, சாயமேற்றப்பட்டிருக்கும்.

ருத்திராட்ஷத்தின் மகிமை! ருத்திராட்ஷம் எவ்வாறு தோன்றியது. சிவபெருமான் கண்களிலிருந்து தோன்றியது ருத்திராட்ஷம். அதை அணிபவரை அவர் கண்போலக் காப்பாற்றுவார். எனவே அனைவரும் கண்டிப்பாக ஐந்து முக, ஒருமுக ருத்திராட்ஷமாவது அணிந்திருத்தல் வேண்டும்.

ருத்ராட்ஷத்தை யார் வேண்டுமானாலும் அணியலாம். எல்லா நேரத்திலும் அணிந்திருக்கலாம். நீர் பருகும்போதும், உணவு உண்ணும்போதும், தூங்கும்போதும் எல்லாக் காலத்திலும் ருத்ராட்ஷம் அணிந்திருக்க வேண்டும் என்று சிவபெருமான் கூறியுள்ளதாக சிவபுராணம் தெரிவிக்கிறது. சிறுவர் சிறுமியர் ருத்திராட்ஷம் அணிவதால் அவர்களின் படிப்புத் திறமை பளிச்சிடும். ருத்ராட்ஷத்தை பெண்கள் அணிந்தால் தீர்க்க சுமங்கலியாக மஞ்சள் குங்குமத்தோடு வாழ்வார்கள். இதனால் அவர்களுடைய கணவருக்கும் தொழிலில் வெற்றியும் இல்லத்தில் லட்சுமி கடாட்சமும் நிறைந்திருக்கும்.

ருத்ராட்ஷம் அணிந்தால்த்தான் மனமும், உடலும் தூய்மை அடையும். எனவே உங்களை நீங்களே தாழ்த்திக்கொள்ளாமல் நம்பிக்கையோடு ருத்ராட்ஷம் அணிந்து கொள்ளுங்கள். எப்படி மருந்துக்குப் பத்தியம் அவசியமோ அதுபோல ருத்ராட்ஷம் அணிபவர்களும் மது அருந்துதல், புகை பிடித்தல், புலால் உண்ணுதல் போன்றவற்றைப் படிப்படியாக விட்டுவிட முயற்சிக்க வேண்டும். (முக்கியமாக மாடு, பன்றி, மாமிசம் சாப்பிடுவதை தவிர்ப்பது நல்லது.)

பெண்களின் பெருந்தெய்வமாக விளங்குபவள் ஆதிபராசக்தி. அவள் ருத்ராட்ஷம் அணிந்திருப்பதை, "கொந்தளகம் சடை பிடித்து விரித்து பொன்தோள் குழை கழுத்தில் கண்டிகையின் குப்பை பூட்டி" என்று விவரிக்கிறது. (அருணாசலபுராணம் பாடல் எண் 330) பழி, பாவம் முதலியவற்றை முழுவதுமாகத் தீர்த்துக் கட்டுகிற திருநீறையும், ருத்ராட்ஷத்தையும் தனது திருமேனி முழுவதிலும் அகிலாண்டேஸ்வரி அணிந்து கொண்டாள். பராசக்திக்கு ஏது பழியும், பாவமும்? நமக்கு வழிகாட்டுவதற்காகத் தானே அம்பிகையே ருத்ராட்ஷம் அணிந்து கொள்கிறாள். எனவே பெண்கள் தாராளமாக

*நம்பிக்கை வைக்காமல் உலகில் மேலான செயல் ஏதும் சாதிக்கப்படவில்லை.*

அம்பிகை காட்டும் வழியைப் பின்பற்றி ருத்ராட்ஷம் அணிய வேண்டும். மேலும், சிவ மஹா புராணத்திலும் பெண்கள் ருத்ராட்ஷம் அணியவேண்டும் என்று சிவபெருமானே வலியுறுத்தியுள்ளார்.

பெண்கள் தங்களுடைய தாலிக் கொடியில் அவரவர் மரபையொட்டி சைவ, வைணவச் சின்னங்களைக் கோர்த்துதான் அணிந்திருக்கின்றனர். அதை எல்லா நாட்களிலும்தானே அணிகிறார்கள், சில பெண்கள், யந்திரங்கள் வரையப்பட்ட தாயத்து போன்றவற்றையும் எப்போதும் அணிந்திருப்பதுண்டே?

இவற்றைப்போல் ருத்ராட்ஷத்தையும் எல்லா நாட்களிலும் கழற்றாமல் அணிய வேண்டும். ருத்ராட்ஷம், வாழும் இந்த உடம்பிற்காக அல்ல உயிரின் ஆத்மாவிற்காகவே சிவபெருமானால் அருளப்பட்டது. இன்று பிறந்த குழந்தை முதல் பெரியவர்கள் வரை ஆண் பெண் இருபாலரும் கண்டிப்பாக ருத்ராட்ஷம் அணிய வேண்டும். ஏனெனில் நம்மைப் படைத்ததே பாவங்களைப் போக்கி சிவபெருமானின் திருவடியை அடைவதற்காகவே. நம் வாழ்க்கையில் வரும் கஷ்டம், வேதனை, துன்பம், வலி இவைகளிலிருந்து விடுபடுவதற்காகவே மறுபிறவி இல்லாமல் போவது மஹா பேரானந்தமே. ருத்ராட்ஷம் அணிவதை சிலபேர் நீ அணியக்கூடாது சுத்தமானவர்கள்தான் அணியவேண்டும் என்று சொல்வார்கள். அதைப் பொருட்படுத்தக்கூடாது. இறைவனுக்கு ஒருவர்மீது கருணை இருந்தால் மட்டுமே ருத்ராட்ஷம் கழுத்தில் அணியும் பாக்கியம் கிடைக்கும். ருத்ராட்ஷம் முழுக்க சிவபெருமானுடையது. ருத்ராட்ஷத்தை அணிந்து கொண்டவர்கள் சிவ குடும்பத்தில் ஒருவராவர். சிவபெருமான் தன் குடும்பத்தில் இருப்பவர்களுக்கு கஷ்டத்தையும், துன்பத்தையும் கொடுக்கமாட்டார். அதனால் யார் என்ன சொன்னாலும் கண்டிப்பாக ருத்ராட்ஷத்தை அணியவேண்டும். ருத்ராட்சத்தை அணிந்த பின் எந்தச் சூழ்நிலையிலும் கழற்றவே கூடாது. நீங்கள் இப்பொழுது எப்படி வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறீர்களோ அதேபோல் வாழ்ந்தால் போதும். இதில் எவ்வித மாற்றத்தையும் செய்யத் தேவையில்லை.

நெற்றியில் திருநீறு அணிந்து ஓம் நமசிவாய சொல்லி வந்தாலே போதுமானது.

நீத்தார் கடன், பெண்கள் தீட்டு, கணவன்- மனைவி இல்லற தாம்பத்யம் இம் மூன்று விஷயங்களுமே இயற்கையானதே. இதில் எந்த நிகழ்ச்சியும் செயற்கையானது கிடையாதே. நீத்தார் கடன் போன்றவற்றைச் செய்யும்போது அதைச் செய்விப்பவரும், செய்பவரும் ருத்ராட்ஷம் அணிந்திருப்பது அவசியம். இதனால் பித்ருக்களின் ஆன்மாக்கள் மகிழும் என்று சிவபெருமானே உபதேசித்திருக்கிறார். இனியும். ஏன் சந்தேகம்? ஆகையால் இம்மூன்று நிகழ்ச்சிகளின்போது கண்டிப்பாக ருத்ராட்ஷம் அணியலாம். அதனால் பாவமோ, தோஷமோ கிடையாது.

ருத்ராட்ஷத்தில் குறுக்கே அழுத்தமான கோடுகளைக் காணலாம். இதற்குத்தான் முகம் என்று பெயர். ஐந்து கோடுகள் இருந்தால் ஐந்து முகம். ஆறு கோடுகள் இருந்தால் ஆறு முகம் என்று இப்படியே கணக்கிட வேண்டியதுதான்.

எத்தனை முகம் என்று கண்டுபிடிக்க எவ்வித முன் அனுபவமும் தேவையில்லை. கண்ணால் சாதாரணமாகப் பார்த்தாலே தெரியும். எல்லா இடங்களிலும் எளிதில் கிடைக்கும் ஐந்துமுக ருத்ராட்ஷம் அணிவதே போதுமானது. பகவானின் திருமுகம் ஐந்து. நமச்சிவாய ஐந்தெழுத்து. பஞ்சபூதங்கள் ஐந்து (நிலம், நீர், நெருப்பு, காற்று மற்றும்

*தன்மீது நம்பிக்கை வைப்பவன் எப்போதும் வெற்றி பெறுவான், மகிழ்ச்சியும் அடைவான்.*

ஆகாயம்) நமது கை கால் விரல்கள் ஐந்து. புலன்கள் ஐந்து. ஆகையால் மிக அதிகமாக ஐந்துமுக ருத்ராட்ஷத்தையே இறைவன் படைக்கின்றார்.

ஆகையால் ஐந்துமுக ருத்ராட்ஷங் கள் அணிவதே மிகச் சிறப்பு. இதை ஆண், பெண் மற்றும் குழந்தைகள் என சகலமான வர்களும் அணியலாம். ஐந்து முக ருத்ராட் ஷத்திலேயே மற்ற எல்லா ருத்ராட்ஷங்களி னால் கிடைக்கின்ற பலன்களும் அடங்கி விடும்.

ஒன்றிலிருந்து பதினான்கு முகங்கள் உடைய ருத்திராட்ஷங்களும் கிடைக்கின் றன. ஒரு முகம் கொண்ட ருத்ராட்ஷம் இதை அடைவது மிகக் கஷ்டமாகும். இது பகவான் சங்கரனின் திருப்பிறப்பாகக் கரு தப்படுகிறது. இதை ஒருமுறை தொட்டாலும் உங்களது பாவங்களை எல்லாம் நீங்கள் இழப்பீர்கள். இதை அணிந்தால் சிவ தத் துவம் எங்கும் பரவியுள்ளதை ஒருவர் உணரமுடியும். ஒருவர் அவரது விருப்பங்கள் பூர்த்தி அடைந்து மோட்சத்திற்கான வழி யைக் காணுவர்.

இரண்டு முகம் கொண்ட மணிகள் மிகவும் அபூர்வமானவை. இதுவும் அதிகம் கிடைக்காது. அதனால் விலை கூடுதலாக இருக்கும். இது சிவனும் சக்தியும் கூடிய அர்த்தநாரீஸ்வரர் ஸ்வரூபமாகும். இதன் கிரகம் சந்திரன். இதனை அணிவதால் விலங்குகளைக் கொன்ற கொலை பாவம் போகும், கொடும் பாவமான பசுவைக் கொன்ற கோஹத்தி தோஷம்கூட விலகிவிடும். இதை அணிபவர்கள் செல்வம், சந்தோசம், மன அமைதி, மனதை ஒருமுகப்படுத்துதல், குண்டலினியை (பாம்பு சக்தி) எழுப்புதல் ஆகியவற்றைப் பெறுவார்கள்.

மூன்று முகம் கொண்ட மணிகளும் அரிதானது. சாதாரணமாகக் கிடைப்பதில்லை. இதுவும் விலை கூடுதலானதே. இது "சோம சூரிய அக்கினி" எனும் சிவனின் முக்கண் வடிவானவை. சூரியன், சந்திரன், அக்கினி தேவன் மூவருமே இதற்கு அதிபதிகள். இதன் கிரகம் அங்காரகன் எனும் செவ்வாய். இதனை அணிவதால் பெண்களைக் கொன்ற பஹீ ஹத்தி தோஷம்கூட விலகும். பல வகை பாவங்கள் எரிந்து சாம்பலாகும். மேலும் இதனை அணிந்தவன் ஆன்மீகத்தில் மிக உயர்ந்த நிலைகளை எளிதாக அடை வான். சிவன் மகிழ்வார். அக்கினி தேவன் அருள் தருவார்.

நான்கு முகம் கொண்ட உருத்திராட் சம் பிரம்மாவைக் குறிப்பதாகச் சொல்லப்படு கிறது. இதை அணிந்தால் பக்தி, செல்வம், மகிழ்ச்சி, மோஷம் ஆகியவற்றைப் பெற லாம். இருள் அழிக்கப்பட்டு அறிவுக்கூர்மை என்னும் வெளிச்சம் பிரகாசிக்கிறது. பேரின் பத்தை அடையலாம். இதன் கிரகம் புதன். இதனை அனைத்துத் துறைகளிலும் உள்ள படைப்பாளிகள் அணியலாம். கல்வி, கலைத் திறன், நுண்கலைகள் வளர்ச்சிபெறும்.

ஐந்து முகம் கொண்ட மணிகள் சாதாரணமாகக் கிடைப்பவை. விலை குறை வானவை. இது காலாக்கினிருத்திர ஸ்வரூபம் உடையது. அகோரம் தத்புருஷம், வாம தேவம், சத்யோஜாதம், ஈசானம் என்னும் சிவனின் ஐந்து முகங்கள் இதற்கு அதி தேவதைகள். இதன் கிரகம் குரு. இதனை அணிவதால் மாமிசம் முதலான உண்ணத் தகாத உணவுகளை உண்ட பாவம் தீரும். பலவகை பாவங்கள் நசிந்து, சிவசாருபம் கிடைக்கும். உண்ணும் உணவில் உள்ள விஷக் குற்றங்கள் விலகும்.

ஆறுமுகம் கொண்ட மணிகள் ஆறு முகங்கள் கொண்ட ஷண்முக வடிவமானவை. இதன் கிரகம் சுக்கிரன். இவ்வகை மணிகளை அணிந்து கொண்டால் தமிழ்க் கடவுளான

*உன்னுடைய எண்ணம் போலவே உன் வாழ்க்கையும் அமையும்.*

முருகன் அருள் பெருகும். பிராமணர்களைக் கொன்ற பழி பாவங்கள் நீங்கி அனைத்திலும் வெற்றி கிட்டும். புகழ் பெருகும், புத்தி தெளிவும் மெய்ஞானமும் பரிசுத்தமும் வாய்க்கும்.

ஏழு முகங்கள் கொண்ட மணிகளும் மிக அரிதானவை. பிரம்மதேவன் கட்டளையினால், கீழே உலகங்களை அதலம், விதலம், சுதலம், தராதலம், ராசதலம், மஹாதலம், பாதாளம் எனும் சப்தலோகங்களில் உள்ள நாகர்களின் தலைவனாக இருந்து ஆயிரம் தலைகளோடு கூடிய பூமியை தாங்கிய ஆதிஷேசன் அம்சமானவை. இவ்வகை மணிகளை அணிவதால் பசுக்கொலை செய்த கோஹத்தி பாவமும் போகும்.

பிறர் பொன் பொருளைத் திருடிய பாவங்கள் விலகும். சப்த மாதாக்களினதும், சப்த கன்னிகளின் பேரருள் கிட்டும். நாக தோஷங்கள் நிவர்த்தியாகும். கல்வி நுண் கலைகள் மேம்படும் யோக சக்திகள் கைவரும் சில சப்தமாதர்களும் சப்த கன்னிகளும்கூட இதற்கு பிரதி தேவதை என்பார்கள்.

எட்டு முகம் கொண்ட தருண கணபதி, பக்த கணபதி மணிகளும் அரிதானவை. எளிதில் கிடைக்காது. இவ்வகை மணிகள் பால கணபதி, தருண கணபதி, பக்தி கணபதி, வரத கணபதி, சிந்தாமணி கணபதி, மயூரேச கணபதி, சத்தி கணபதி, மஹா கணபதி என்று அஷ்ட கணபதி ஸ்வரூபமானவை. இதன் கிரகம் ராகு. இதனை அணிந்து கொண்டால் அஷ்ட வசுக்களின் ஆசிகள் கிட்டும். குருவைக் கொன்று குரு பத்தினியைத் தீண்டிய கொடும் பாவங்களும் விலகி புண்ணியம் ஏற்படும். பொன் திருடிய குற்றங்கள் நீங்கும். அஷ்டமா சித்திகளும் வாய்க்கும். அஷ்ட லஷ்மிகளின் அருள் கிட்டும். பல வகையில் வரும் காரியத் தடைகள் அகலும். கங்கைதேவி மகிழ்ந்து அருள் புரிவாள். ஒன்பது முகம் கொண்ட மணிகள் கூட அவ்வளவாகக் கிடைப்பது இல்லை. கைலை மலையின் எண் திசைகளிலும் காவல் புரியும் தேவதைகளான அசிதாங்க பைரவர், குரு பைரவர், சண்ட பைரவர், குரோத பைரவர், உன்மத்த பைரவர், கபால பைரவர், சம்ஹர பைரவர் என்ற அஷ்ட பைரவர்களின் உற்பத்திக்கு மூலகாரணன் ஆன மஹா பைரவர் ஸ்வரூபமானவைகளே இந்த ஒன்பது முகம் கொண்ட ருத்திராட்ச மணிகள். இதன் கிரகம் கேது. இதனை அணிவதால் பில்லி சூனியம் விலகும். பலவகை கொலை பாவங்கள், பாம்புகளால் வரும் துன்பங்கள் நீங்கும். நவக்கிரக பீடைகள் விலகி நவசக்திகளின் பேரருள் கிட்டும். சித்தி முக்தி ஏற்படும். (இடது கை மணிக்கட்டில் அணிக.)

பத்து முகம் கொண்ட மணிகள் அரிதானவை. இம் மணிகள் மத்ஸய, கூர்ம, நரசிம்ம, வாமன, பரசுராம, ராம, பலராம, கிருஷ்ண, கல்கி அவதாரங்களின் நாயகனான விஷ்ணு ஸ்வரூபமானவை. இவற்றை அணிவதால் பூத, பிரேத, பிசாச, பிரம்மராச்சதர்களால் ஏற்படும் ஆபத்துக்கள் விலகும். ஏவல், பில்லி, சூனியங்கள் வலுவிழந்து போகும். பலவகையான பீடைகளிலிருந்து காப்பாற்றப்படுவீர்கள். மிருகங்களால் வரும் ஆபத்துக்கள் விலகும்.

பதினொரு முகம் கொண்ட மணிகளும் அபூர்வமானவை. எளிதில் கிடைக்காதவை. இவ்வகை மணிகள், மஹாதேவன், அரன், ருத்திரன், சங்கரன், நீலலோஹிதன், ஈசானன், கபாலி, சௌமியன் போன்ற ஏகாதசருத்திரர்களின் அம்சமானவை. இவற்றை அணிந்து கொண்டால் பலவகை உயிரினங்கள் பறவைகள் என பிராணிகளைக் கொன்ற பாவம் நீங்கும். வேதாகமங்களில் கூறப்பட்டுள்ள அஸ்வமேத யாகம் முதலான

*பயிற்சி செய்யாவிடில் உயர்ந்த சாஸ்திரங்கள்கூட விஷம்.*

அனைத்துவிதமான யாகங்களையும், விரதங் கள், பூசைகளையும் செய்த பலன் கிடைக் கும். சிவஞானம் சித்திக்கும்.

நீராடும்போது ருத்ராட்ஷம் அணிந் திருந்தால் கங்கையில் குளித்த புண்ணியம் கிடைக்கும் என்கின்றன புராணங்கள். கங் கையில் மூழ்கினால் பாவம் போகும் என்பது நம் அனைவருக்கும் தெரியும்.

பாவங்களினால்த்தான் நமக்குக் கஷ்டம் உண்டாகிறது. ருத்ராட்ஷம் அணி வதால் கொடிய பாவங்கள் தீரும்.

இதனால் நம் வாழ்வில் ஏற்படும் துன்பங்களும் படிப்படியாகக் குறைந்து விடும். மேலும் ருத்ராட்ஷம் அணிபவருக்கு லஷ்மி கடாட்ஷமும், செய்யும் தொழில் மேன்மையும், சகலவிதமான ஐஸ்வர்யங் களும் ஏற்பட்டு பகவானின் பேரின்பமும், ஆனந்தமும் கிடைக்கும் என்று சிவ மஹா புராணம் அறுதியிட்டுக் கூறுவதையும் கருத் திற் கொள்க. இது மட்டுமல்லாமல் ருத்ராட் ஷம் அணிவதால் இதய நோய், ரத்த அழுத் தம், சர்க்கரை நோய், புற்றுநோய் போன்ற வற்றின் தீவிரம் குறைவதாக வெளிநாட்ட வர்களின் ஆய்வுகள் கூறுகின்றன.

எனவே தூங்கும்போதும்கூட ருத்ராட் ஷத்தைக் கழற்றி வைக்க வேண்டிய அவ சியம் கிடையாது. திருமணம் ஆகாதவர்கள், குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள், வேலை வாய்ப்பு இல்லாதவர்களும் கண்டிப்பாக ருத்ராட்ஷம் அணிந்து தினந்தோறும் 108 முறை எழுத்தாலோ மனதாலோ பஞ்சாட் சரத்தை சொல்லிவந்தால் 4 மாதத்தில் மேற் கூறிய பிரார்த்தனைகள் நிறைவேறும்.

ருத்ராட்ஷம் அணிவதால் சர்வ நிச்சய மாக அவன் அருளாலே அவன்தாள் வணங்கி அவர் கருணை செய்தால்த்தான் அவருடைய நாமத்தைக்கூட நாம் சொல்ல முடியும். அப்படியிருக்க அவர் ருத்ராட்ஷத்தையே நமக்கு அளித்துள்ளாரே! அதனால் திருநீறு தரித்தல், ருத்ராட்ஷம் அணிதல், பஞ்சாட்சர மந்திரமான "ஓம் நமசிவாய" உச்சரித்தல், இம்மூன்றும் ஒருசேரச் செய்துவந்தால் முத்தி என்னும் மஹா பேரானந்தத்தை அடைவீர். இம்மூன்றும் இந்து தர்மங்கள் தர்மத்தை விடாதவர்களை இறைவன் கைவிடமாட்டார்.

மேலும் நவக்கிரஹங்கள் நன்மையே செய்யும். (ஏழரைச் சனி, அஷ்டமச்சனி, ராகு- கேது) தோஷத்தின் தாக்கங்கள் குறையும். ருத்ராட்ஷம் அணிந்திருக்கும் வேளையில் உயிர் பிரிந்தால் சிவபெருமான் திருவடியை அடைந்து நற்கதி ஏற்படும்.

ஆகையால் ஒவ்வொருவரும் கண்டிப் பாக ருத்ராட்ஷம் அணியவேண்டும். ஒருவர் ஏழு ஜென்மங்கள் தொடர்ந்து புண்ணியம் செய்திருந்தால் மட்டுமே அவர்களுக்கு ருத் ராட்ஷம் அணியும் மஹா பாக்கியம் கிடைக் கும். "நாயிற் கிடையாய்க் கிடந்த அடியேற் குத் தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" என்றவாறு பதவி கிடைக்கும்.

உலகில் மற்ற பகுதிகளில் உள்ள வர்கள் அவர்களின் மத சின்னங்களை அணிய வெட்கப்படுவதில்லை. நாம் நமது மதச் சின் னங்களாகிய விபூதி, ருத்ராட்ஷம் மற்றும் நமசி வாய என்ற ஜபம் ஆகியவற்றை ஏன் விட வேண்டும்? ருத்ராட்ஷம் அணிந்து நமசிவாய என்று எல்லாக் காலத்திலும் சொல்லிக் கொண் டிருப்பவர்களை சிவபெருமான் நிச்சயம் காப் பாற்றுவார். அவரவர், தங்கள் வாழ்க்கை யிலேயே இதை அனுபவ பூர்வமாக உணர லாம். ருத்ராட்ஷம் அணிபவர்கள் கண்டிப்பாக எந்தச் சூழ்நிலையிலும், ருத்ராட்ஷத்தைக் கழற்றவே கூடாது. அவர் கருணை செய் தால்த்தான் ருத்ராட்சம் அணிந்து அவருடைய நாமத்தைக்கூட நாம் சொல்ல முடியும்.

ஓம் நமசிவாய ஓம்

"யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை"

*திரும்பத் திரும்பச் செய்யும் எந்தப் பணியிலும் விரைவில் நிபுணராக முடியும்.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| பொ. மங்களேஸ்வரி | நயினாதீவு | 500. 00 |
| திருமதி நேசரட்ணம் | லண்டன் | 10000. 00 |
| திருமதி வி. பரமேஸ்வரி | குப்பிளான் | 5000. 00 |
| நி. சரவணபவன் | நல்லூர் | 2000. 00 |
| திருமதி சா. குமரகுரு | அச்சுவேலி | 1000. 00 |
| உ. ராம்பிரசாத் | கொழும்பு | 2000. 00 |
| க. நடேசன் (தெணியான்) | கரணவாய் வடக்கு | 2000. 00 |
| சி. கமல்ராஜ் | கல்முனை | 2000. 00 |
| திரு தேவகாந்தன் குடும்பம் | அமெரிக்கா | 10000. 00 |
| கு. ரகு | நல்லூர் | 1500. 00 |
| க. விவேகானந்தம் | உடுப்பிட்டி | 5000. 00 |
| க. சுகந்தன் | இடைக்காடு | 5000. 00 |
| ச. வாகீசன் | இணுவில் | 1000. 00 |
| S. கணேசலிங்கம் | புத்தூர் | 1000. 00 |
| க. கௌரி | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| ஐ. கனகலக்சுமி | ஏழாலை | 10000. 00 |
| து. ரஞ்சிதமலர் (சபா ரேடேர்ஸ்) | அச்சுவேலி | 1மூடை அரிசி |
| சி. சுப்பிரமணியம் குடும்பம் | கனடா | 5000. 00 |
| சி. கந்தசாமி குடும்பம் | கொழும்பு | 500. 00 |
| அ. சாய்மிரா, அ. தாமிரா | சிறுப்பிட்டி | 1000. 00 |
| பொ. ஜெயச்சந்திரன் | அச்சுவேலி | 4000. 00 |
| P. தர்ஷியன் | நீர்வேலி | 5000. 00 |
| ச. மார்க்கண்டு | ஊரெழு | 1000. 00 |
| S. பூபாலசிங்கம் | கரவெட்டி | 1000. 00 |
| சு. யோகராஜா குடும்பம் | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| S. சிவசீலன் | மன்னார் | 10000. 00 |
| ச. கிருஷ்ணமூர்த்தி | பருத்தித்துறை | 2மூடை அரிசி |
| சிவா ரேடேர்ஸ் | திருநெல்வேலி | 1மூடை அரிசி |
| மாகோ களஞ்சியம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| வைரமாளிகை | யாழ்ப்பாணம் | தேங்காய், 5மூடை அரிசி |
| இந்திரா கபே | நெல்லியடி | 10000. 00 |
| மகாராணி பு வையகம் | யாழ்பபாணம் | 18மூடை அரிசி |
| ச. லலீசன் | அச்சுவேலி | 1மூடை பருப்பு, 4மூடை அரிசி |

*நன்றியுள்ள மனிதனுக்குக் கேட்டதைவிட அதிகம் கொடு.*

| | | |
|---|---|---|
| சி. ராஜசுந்தரம் | மயிலிட்டி | 10000. 00 |
| ஈ. மயூரன் | மல்லாகம் | 1000. 00 |
| க. ஆனந்தகுமார் | மல்லாகம் | 1000. 00 |
| இ. லோகராணி | மல்லாகம் | 2000. 00 |
| ச. ஆறுமுகம் | ஒட்டுசுட்டான் | 5000. 00 |
| க. கஜனன் | இணுவில் | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 4புட்டி பருப்பு |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| ச. சிவக்கொழுந்து நினைவாக (திவ்விய ஜீவன சங்கம்) | சாவகச்சேரி | 5000. 00 |
| தெ. பிறேமினி | நெல்லியடி | 2000. 00 |
| Dr ம. தீனதயாளன் | சுன்னாகம் | 1000. 00 |
| பா. யாதவன் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| திருமதி தம்பிராசா | திருநெல்வேலி | 1மூடை அரிசி |
| மணியம் இன்பெக்ஸ் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| சி. கஜேந்திரநாத் | யாழ்ப்பாணம் | 30000. 00 |
| கி. நாகராஜா | பத்தமேனி | 1மூடை அரிசி |
| செ. அருமைநாயகம் | இளவாலை | 1000. 00 |
| திரு பற்குணராசா | இளவாலை | 2000. 00 |
| க. விவேகானந்தன் | வவுனியா | 5000. 00 |
| ச. சங்கீத் | மானிப்பாய் | 2000. 00 |
| அருணாசலம் சாவித்திரியம்மா | பருத்தித்துறை | 8000. 00 |
| சி. உருத்திரலிங்கம் | கோப்பாய் | 10000. 00 |
| க. சுரேஸ் | கொழும்பு | 1000. 00 |
| த. விமலா | தெகிவளை | 1000. 00 |
| N. கதிர்காமநாதன் | கொழும்பு | 10000. 00 |
| அ. சிவலிங்கநாதன் | திருநெல்வேலி | 5000. 00 |
| கி. காயத்திரி | கொக்குவில் | 1000. 00 |
| கதிர்வேல் அரசன் | இணுவில் | 5000. 00 |
| நா. குணசிங்கம் | கோண்டாவில் | 10000. 00 |
| பத்மநாதன் குணசுந்தரி | ஆதிகோவிலடி | 5000. 00 |
| செங்கோடன் ஆர்தனா | கனடா | 15000. 00 |
| வா. பிரதீபா | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| திரு லோகநாதன் குடும்பம் | புங்குடுதீவு | 2000. 00 |
| V. சுதாகர் | கொக்குவில் | 2000. 00 |
| யோகேஸ்வரி குடும்பம் | கொழும்பு | 2000. 00 |
| S. சஞ்சீவன் | கொழும்பு | 1500. 00 |
| த. ஸ்ரீதரன் நினைவாக | நீர்வேலி | 1000. 00 |

(தொடரும்...

*நேர்மை குணமிருந்தால் நல்ல எண்ணங்களைச் செயற்படுத்த முடியும்.*

# பீமனின் பக்தி

– செல்வி ச. வர்ணி அவர்கள் –

பக்திகள் பலவிதம். கண்ணப்பன் கண்ணைக் கொடுத்தும்; சிறுத்தொண்டர் பிள்ளையை வாளால் அரிந்து உணவு சமைத்துக் கொடுத்ததும், குகன் தேனும் மீனும் கொடுத்ததும் பக்தியின் வெளிப்பாடுதான். இறைவனிடம் பயன்கருதி எதைக் கேட்டாலும் அது வியாபாரம்தான். ஏதோ ஒன்றுக்கொன்று கொடுப்பதுபோல பணத்தைத் தா பக்தி செய்கிறேன் என்பது வியாபாரம். இவ்வாறின்றி பயன் கருதாது ஈஸ்வரனிடத்தில் போய் சேருவதையே நினைத்து தன்னை அறியாமல் ஓடுகிற சித்தவிருத்தி இருக்கிறதே, அதற்குத்தான் பக்தி என்று பெயர்.

5ஆம் வேதம் எனப் போற்றப்படும் மகாபாரதம்தனில் பக்தி பற்றி ஓர் பார்வை. பஞ்ச பாண்டவர்கள் ஐவர். இவர்கள் ஐவரில் அர்ஜுனன் மிக அதிகமாக கிருஷ்ணனிடம் பக்தி கொண்டவன். அதில் கர்வமும் கொண்டவன். இதை நன்கறிந்த கிருஷ்ணன் அவனுக்குப் பாடம் புகட்ட விரும்பி, அர்ஜுனனை தன்னுடன் அழைத்துச் செல்கிறார்.

கிருஷ்ணன் நடை பயில கூடவே அர்ஜுனனும் செல்கிறான். கிருஷ்ணன் நடக்கும் பாதை முழுதும் மலர்கள் குவியல் குவியலாக விழுந்தவண்ணமே இருக்கின்றன. அவருடைய பாதக்கமலங்கள் தரையில் படாமல் மலர்களையே தீண்டியவண்ணம் நடக்கிறார். அவர் செல்லுமிடம் எங்கிலும் புஷ்பக் குவியல்கள். அர்ஜுனன் இதனைக் கண்டு யார் இவ்வாறான மேன்மையான செயலைப் புரிவது என்று கேட்க, என்னுடைய மிகப்பெரிய பக்தனின் பக்தியின் வெளிப்பாடே இது என்றார் பரந்தாமன்.

அர்ஜுனனுக்கு, தன்னைவிட ஒரு பெரிய பக்தன் உள்ளானா என கோபம் எழ, யார் அவன்? என்னைவிட தம்மை அவ்வளவு மேன்மையுற ஆராதிப்பவன் யார் என்றான். இதற்கு கிருஷ்ணன், புன்னகைத்துக்கொண்டு "இது பீமன் செய்யும் பூஜையில் இருந்து வருகிறது" என்றார். அர்ஜுனன் நம்பாமல் "பொய் பேசாதே கிருஷ்ணா, பீமன் முரடன், பக்தி இல்லாதவன். அவன் பூஜை செய்து நான் பார்த்ததில்லை. ஆகையால் உண்மை சொல்" என்றான். அதற்குக் கிருஷ்ணர் சிரித்தபடி "அர்ஜுனா பூஜை என்பது மணிக்கணக்காக, நாட்கணக்காக உடலை வருத்தி செய்யப்படுவதில்லை. உணவு உட்கொள்ளாமலும் நின்று கொண்டும் கஷ்டப்பட்டுச் செய்யும் எந்தத் தவமும் என்னை வருத்துகின்றன. ஏனென்றால் நான் எல்லார் உள்ளிலும் இருக்கிறேன். பீமன் மிக அதிகமாக என்னிடம் பக்தி கொண்டவன். அவன் எந்த வேலை செய்தாலும், எதை நினைத்தாலும், எதை உண்டாலும், தூங்கினாலும், விழித்திருந்தாலும், நடந்தாலும், இருந்தாலும் என்னை நினைத்து "கிருஷ்ணா உனக்காகச் செய்கிறேன்" என்று மனதில் நினைத்துச் செய்கிறான். அவன் காணும் மலர்களை எல்லாம் கிருஷ்ணனின் பாதச் சரணங்களை அடையட்டும் என்கிறான். அவன் நினைத்த, பார்த்த மலர்களே என் கமலத்தை நோகாமல் பார்த்துக் கொள்கின்றன" என்றார். அகம்பாவம், வீண்கர்வம் கொண்ட அர்ஜுனன் மனம் நெகிழ்ந்தான். நிதர்சனத்திலே இறைவன் விரும்பும் பக்தி; அடியேனின் மெய்யினை வருத்தி கிடைக்கும் அன்பை அல்ல. உள்ளத்தினால் தூய சிந்தனையுடன் வேண்டும் அன்பையே விரும்புகிறான். எனவே உருத்திராட்சப் பூனையாக வாழாமல் பரிசுத்தமான அன்பால் இறையை அன்பு செய்வோம்.

"பக்தி வலையில் படுவோன் காண்க"

# ஔவையாரின் பாடற் சிறப்பு

(தொடர்ச்சி...

– **திரு மூ. சிவலிங்கம்** அவர்கள் –

## வரப்புயர

ஒரு சுபவேளையில் சோழ மன்னனொருவனின் திருமணம் வெகு சீரும் சிறப்பும் பொலிய நடைபெறுகின்றது. உறவினர் நாட்டு மக்கள் யாவரும் திருமண விழாவை வெகு ஆடம்பரமாகச் செய்து மகிழ்ந்தனர். சோழ அரச பேரவைப் புலவர்களுக்கும் மேலாக எல்லா நாட்டுப் புலவர்கள் வித்துவான்கள் வரிசையில் இருந்து வாழ்த்திப் பாடல்களைக் காணிக்கையாக்கினர். இச்சபைக்கு வந்த ஔவை மூதாட்டி ஒரு ஓரமாக அமர்ந்திருந்து புலவர்களை அவதானிக்கிறார்.

புலவர்கள் கவிதைகளாகவும் வசன காவியமாகவும் வானளாவப் புகழ்ந்து பாடிக் கொண்டிருந்தனர். சற்று நேரத்தில் எழுந்த ஔவையார் மன்னனை வணங்கியதும் "வரப்புயர" என வாழ்த்திவிட்டு அமர்ந்துள்ளார். புலவர்கள் யாவரும் ஔவையின் வாழ்த்தின் பொருள் தெரியாமல் திகைத்தனர். அனைவரதும் சந்தேகத்தைத் தீர்க்க எண்ணிய ஔவையார் மீண்டும் எழுந்து

"வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோல் உயரும்
கோல் உயரக் கோன் உயர்வான்"

என விளக்கமாகக் கூறி மீண்டும் மன்னனை வாழ்த்தினார் சகல புலவர்களும் ஔவையாரின் வாழ்த்துதலின் கருத்தை நன்கு கவனித்துத் தெளிவடைந்தனர். மன்னனும் ஔவையின் வாழ்த்துதலைப் பாராட்டினான்.

அக்காலத்தில் புலவர்களில் நுண்ணறிவும் திறமையும் ஔவையாரின் மதிநுட்பமான குறுகிய வசனங்களால் நீடிய பொலிவான கருத்துக்களையே தந்தன. இதனால்த்தான் இன்றுவரை ஔவையின் புகழும் பெருமையும் தமிழ் உள்ளவரை சிறப்பிக்கும்.

## பேயைப் பேய் அடிக்கப் போகிறதோ?

ஔவையார் ஒருநாள் தூரத்தேயுள்ள ஊருக்குப் போய் வந்தார். தமது வதிவிடத்திற்குச் செல்லுமுன் இருந்த ஊரெல்லைக்கு வந்ததும் பொழுதும் மறைந்தது. இதனால் அவ்வூரிலே இரவு தங்கி மறுநாட் செல்ல இருந்ததால் இரவு தங்கிச் செல்ல ஏதாவது சாவடி உண்டோ என அங்குள்ளோரை வினவினார். ஒரு சிலர் இப்பட்டினத்தின் மேலண்டையில் ஒரு திருவாசற் சாவடியுண்டு. அச்சாவடியில் வேண்டிய மட்டும் தங்கலாம். அவ்விடத்தில் பெரிய ஒரு பேய் இருக்கிறது. யாரேனும் இரவு தங்கினால் பேய் அடித்துக் கொன்றுவிடும். அதனால் பயந்து எவரும் இரவில் தங்குவதில்லை என்றனர். அதைக் கேட்டதும் ஔவையார் "பேயைப் பேய் அடிக்கப் போகிறதோ" என்று கூறிவிட்டு அவ்விடஞ் சென்று படுத்துறங்கி விட்டார்.

*நாம் ரசித்துப் படிக்காத புத்தகங்களால் நமக்கு நல்ல பலன் கிடைப்பதில்லை.*

அச்சமயம் வெளியே சென்றிருந்த பெண்ணாவேசம் (பேய்) வந்து முதற்சாமத்தில் ஔவையார் படுத்திருப்பதைக் கண்டு பயங்கரமாக "எற்றெற்று" என்று கூறியவாறு ஆவேசத் துடன் ஔவையாரை அணுகியது. இதன் சத்தத்தைக் கேட்டெழுந்த ஔவை அதனை நோக்கி

"வெண்பா விருகாலிற் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையால் எழுதானைப் - பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளென்
றெற்றோமற் றெற்றோமற் றெற்று"

எனப் பாடினார். அப்பாடலைக் கேட்ட கல்வியறிவுடைய அப்பேய் தனது பூர்வ கதையை உணர்த்துவதால் இவர் ஒரு தெய்வப்பிறவி எனப் பயந்து அவ்விடம் விட்டகன்று இரண்டாம் சாமத்தில் வந்து "எற்றெற்று" என்று ஆவேசத்துடன் கூவிக்கொண்டு அருகே வந்தது. மீண்டும் ஔவையார் எழுந்து

"கருங்குளவி சூரைத்தா றீச்சங்கனிபோல்
விருந்தினற் கொன் றீயாதான் வாழ்க்கை - அரும்பகலே
இச்சித் திருந்த பொருள் தாயத்தார் கொள்வரென்
றெற்றோமற் றெற்றேமற் றெற்று"

என்று வேறொரு வெண்பாவைப் பாடினார். அதைக் கேட்டதும் அப்பேய் பயந்து ஓடிப்போய் மூன்றாம் சாமமும் ஆவேசத்துடன் "எற்றெற்று" எனக் கூறிக்கொண்டு வந்தது. அச்சமயம் ஔவையார்

"வானமுளதால் மழையுளதால் மண்ணுலகில்
தானமுளதால் தலையுளதால் - ஆனபொழு
தெய்த்தோ மிளைத்தோ மென்றே மாந்திருப்போரை
எற்றோமற் றெற்றோ மற்றெற்று"

என்ற வெண்பாவைப் பாடினார். அப்பேய் ஓடிப்போய் மீண்டும் நான்காம் சாமத்திலும் பயங்கரச் சத்தத்துடன் "எற்றெற்று" எனக் கூவியவாறு வந்தது. ஔவையார் எழுந்து,

"எண்ணாயிரத்தாண்டு நீரிற் கிடந்தாலும்
உண்ணீர் பற்றாக் கிடையே போல் - பெண்ணாவர்
பொற்றொடி மாதர் புணர்முலைமேற் சாராரை
எற்றோமற் றெற்றோமற் றெற்று"

என்னும் வெண்பாவைக் கேட்டதும் அப்பெண்ணாவேசம் ஒடுங்க பணிந்தவாறு ஔவையாரின் அருகே வந்து அவரை வணங்கியது. ஔவையார் அதன் மீதிரங்கி பேயுருவில் இருந்த அரசகுமாரியை நோக்கி உன் வரலாறு என்ன எனக் கேட்டார். அப்பேய் தான் இவ்வூர் அரசனின் குமாரத்தி என்றும் தனது தோழியருடன் உப்பரிகையில் விளையாடிக் கொண்டிருந்த சமயம் அவ்வழியே சென்ற அழகிய அரசகுமாரனைக் கண்டதும் மோகங் கொண்டேன். அதனால் அவனை அடைய எண்ணி அவ்வூர் சாவடியில் வந்து சந்திக்குமாறு எனது காதோலையில் நகத்தினால் எழுதி மேல் மாடியிலிருந்து அவன்முன் போட்டேன். அவன் கல்வியறிவில்லாதவன். அதனை வாசித்தறிய முடியாது அச்சாவடியிலிருந்த குஷ்டரோகியிடம் வாசிக்கக் கொடுத்தான். அவன் இளவரசனைப் பயமுறுத்தி இவ்வூரை

*புத்தகங்கள் இல்லாத அறை ஆன்மா இல்லாத உடல்.*

விட்டோடிப் போக வைத்தான். குஷ்டரோகி குறிப்பிட்ட சாவடியில் வந்திருந்தான். நான் அவனைத் தழுவ முற்பட்டபோது அவனின் நோயின் அசிங்கத்தைக் கண்டு செய்த தவறுக்காக உடனே தற்கொலை செய்ததாகத் தெரிவித்தாள். இதனைக் கேட்ட ஔவையார் அவளை நோக்கி உனக்கு வேண்டிய வரம் யாதெனக் கேட்டார்.

அப்பெண் தான் மீண்டும் மானிடராய்ப் பிறந்து இதே ஆணழகனை அடைய வேண்டும். அதன்பின் இறைவனடியைச் சேரவும் வரம் தந்தருள வேண்டுமென்றாள். அச்சமயம் அரச குமாரியை விரும்பிய இளவரசன் தமது எண்ணம் ஈடேறாமல் தற்கொலை செய்ததை அறிந்து தானும் இச்சாவடியில் தற்கொலை செய்து ஆவேசமாகக் கிடந்ததையும் அச்சமயம் நடைபெற்ற சம்பவங்களை அறிந்து ஔவையாரை அணுகியதாகவும் கூறி வணங்கியது. அவ்வேளை பெண்ணாவேசத்தை நோக்கி உறையூரில் அரசனின் ஆலாத்திப் பெண்களில் முதன்மையான மரகத வடிவு என்பவரின் மகளாகப் பிறப்பாய். பின்னர் நீ விரும்பியவனை அடைந்து இன்பசுகமடைவாயாக என்றருளினார். ஆணாவேசத்தை நோக்கி நீ அவ்வூரில் விரகுதலையனாகப் பிறந்து அவ்வூர் இராசகுமாரியை அடையக் கடவை என்றருளினார்.

## திருக்கோவலூரில் இடையனான பாரியின் பிள்ளைகளின் உபசரிப்பு

ஔவையார் தமது வழமையான சுற்றுப் பயணத்தில் திருக்கோவலூரில் குடிசையில் வாழ்ந்த தமது அன்பரும் இடையருமான பாரி என்பவனின் வீட்டை நாடிச் சென்றார். அப்பொழுது இடைவழியில் பெருமழை கொட்டியது. அயலில் ஒதுங்க இடமில்லாது நன்றாக நனைந்தபடி அவ்வீட்டை அடைந்தார். ஔவையார் முதுமையுடன் மழையில் நனைந்த ஈரத்தால் நடுங்கிக்கொண்டு தம்குடியை நாடி வருவதைக் கண்ட பாரியின் இரு கன்னிப் பெண்கள் வருந்தினர். தமது நீல நிறச் சிற்றாடையை மாற்றுடையாக அணியத் தந்தனர். நெருப்பு மூட்டி ஔவையைக் குளிர்காய வைத்தனர். அவர்களின் பசிக்காக முருங்கையிலைக் கீரையை நெய்விட்டுச் சமைத்துக் கேழ்வரகுக் களியும் கிண்டி யாவற்றையும் அன்புடன் தந்து உண்ண வைத்து உபசரித்தனர்.

பெற்றோர்களின் பண்பில் வளர்ந்த இரு பெண்கள் வாழ்வதற்கே வசதி குன்றினாலும் பெற்றோரின் விருந்தோம்பும் நெறியில் சிறந்து விளங்கினர். தமது குடிசையை நாடிய மூதாட்டியை நன்கு உபசரிக்க வேண்டி பண்பினால் தம்மால் இயன்றபடி உபசரித்தனர். தமது சிற்றாடையை மாற்றுடையாகத் தந்து குளிர்காய வைத்து உண்ண உணவு தேடித் தந்ததை ஔவையார் தமது இதயபூர்வமாக உணர்ந்தார். ஔவையார் தமிழ் மரபைத் துலக்குபவர். தம்மை யாரென அறியாமலே உபசரித்த பெண்கள் தமது வறுமையிலும் அன்பினால் பண்புடன் உபசரித்ததை எண்ணிப் பெருமிதமடைந்தார். தமக்குச் செய்த உதவிக்காக முதலில் நன்றி சொல்வதன்பேரில் உபசரித்ததைச் சுட்டிக்காட்டி வெண்பாக்கள் பாடினார். முதலில் உண்ட உணவை மெச்சி

"வெய்தாய் நறுவிதாய் வேண்டளவும் தின்பதாய்
நெய்தான ளாவி நிறம்பசந்த - பொய்யா
அடகென்று சொல்லி யமுதத்தை யிட்டார்
கடகஞ் செறிந்தகை யால்"

*புத்தகங்கள் இளமையில் வழிகாட்டிகள், முதுமையில் இனிய பொழுதுபோக்குகள்.*

இடைப் பெண்களான அங்கவை சங்கவை மாற்றுடைக்காகத் தந்த நீலநிறச் சிற்றாடையை வியந்தது.

"பாரி பறித்த பறியும் பழயனூர்க்
காரி கொடுத்த களைக் கொட்டும் - சேரமான்
வாரா யென வழைத்த வாய்மையும் இம்மூன்றும்
நீலச் சிற்றாடைக்கு நேர்"

இப்பாடலைப் பாடியதும் இடையனுக்கு இறையருளும் ஔவையாரின் புலமையின் அற்புதம் திருவருளாகிப் பெருநிதி வளம் பெருகியது. ஔவையார் தமது பூரண விருப்பத்துடன் அங்கவை, சங்கவை ஆகிய இருவருக்கும் திருமணம் செய்து வைக்க ஏற்பாடுகளைச் செய்தார். வேண்டிய யாவற்றையும் செய்தவுடன் விநாயகப் பெருமானை வேண்டி,

"ஒரு கொம் பிரு செவி மும்முகத்து நால்வாய்க்
கரியுரிவைக்கங் காளன் காளாய் - பரிவுடனே
கண்ணால வோலை கடிதெழுத வாராயேல்
தண்ணாண்மை தீர்ப்பண் சபித்து"

என்னும் பாடலைப் பாடி விநாயகரை வருவித்து அவர் கைப்படத் தாம் சொல்லியபடி அதன் அடியில் வருமாறு ஓலை எழுதுவித்து சேர, சோழ, பாண்டியன் முதலான சகல அரசர்களுக்கும் அனுப்பினார்.

### சேரனுக்கு எழுதிய சீட்டின் பாடல்

"சேரலர் கோன் சேரன் செழும்பூந் திருக்கோவல்
ஊரளவுந்தான் வருக வுட்காதே - பாரி மகள்
அங்கவையைக் கொள்ளவரசர் மனமிசைந்தார்
சங்கவையையுங் கூடத்தான்"

### சோழனுக்கு எழுதிய சீட்டின் பாடல்

"புகார் மன்னன் பொன்னிப் புனனாடன் சோழன்
..... தென்று தானங்கிருந்து - நகாதே
கடிதின் வருக கடிக் கோவலூர்க்கு
விடியப் பதினெட்டா நாள்"

### பாண்டியனுக்கு எழுதிய சீட்டின் பாடல்

"வையத் துறைவன் மதுராபுரித் தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே - தையலர்க்கு
வேண்டுவன கொண்டு விடிய வீரோன்பானாள்
ஈண்டு வருக விரைந்து"

ஔவையார் தமது கவியாற்றலினால் எழுதிய மணவோலையைக் கண்டதும் வியப்படைந்தனர். அவரின் வேண்டுதலை மீறமுடியாது யாவரும் உரிய தினத்தில் தமது

*சொர்க்கத்தில் அடிமையாய் இருப்பதைவிட நரகத்தில் அரசனாய் இரு.*

நாற்படை கொண்ட சேனைகள் சூழ ஒரு மனதுடன் ஔவை குறிப்பிட்ட திருமணத்திற்காகச் சமூகமளித்தனர். யாவரும் வரும்போது ஔவையார் அவர்களுக்குச் சந்தனம், மலர்கள், தாம்பூலம் தந்து இன்முகம் காட்டி இன்னுரை பேசி அனைவரையும் வரவேற்றார். யாவரும் வந்ததும் அன்பர்களே! நீவிர் அனைவரும் இக்கிழவியின் அழைப்பை ஏற்று வந்து அருமையுடன் பெருமைப்படுத்தினீர்கள். அதேபோல இந்த ஏழைக் கிழவி அன்புடன் தரும் அற்ப உணவை ஏற்று மனநிறைவாக உண்டு மகிழுமாறு வேண்டுகிறேன் என்று பணிவுடன் கேட்டார்.

மூதாட்டியின் அன்பில் ஊறிய ஒரு சிலர் பரிகாசமாக நீவிர் உணவளிப்பது உண்மை யாயின் இப்பொழுது நுங்கு தருவித்தால் ஏற்போம் என்றனர். உண்மையில் நுங்கு காய்க்காத காலமாகும். ஆனாலும் தம்மை நாடி வந்தவர்களின் மனநிறைவுக்காக அவர்களுக்கு உதவ முன்வந்தார். அவ்விடத்தில் ஏற்கனவே விறகுக்காக வெட்டிய பனந் துண்டங்களை நோக்கி பின்வருமாறு பாடினார். பாடல் இதுவாகும்.

"திங்கட் குடையுடைச் சேரனுஞ் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்து நின்றார் மணப்பந்தலிலே;
சங்கொக்க வெண்குருத் தீன்று பச்சோலை சலசலத்து
நுங்குக் கண்முற்றி யடிக்கண் கறுத்து நுனி சிவந்து
பங்குக்கு மூன்று பழம் தர வேண்டும் பனம் துண்டமே"

என்னும் கலித்துறை பாடினார்.

ஔவையாரின் தெய்வீகப் பாடலின் மகிமையால் கீழே விழுந்திருந்த காய்ந்த பனந் துண்டம் எழுந்து குருத்துவிட்டு வளர்ந்து நெடுமரமாகி சலசலத்த ஓலைகளுடன் காணப்பட்டது. அப்பனையிலிருந்து நுங்குக் குலைகள் நிறைந்து தொங்கின. அதைக் கண்டதும் திருமணத்திற்காக அங்கு வந்திருந்த அனைவரும் அதிசயித்தனர். மூவேந்தர்களும் வெட்கித் தலைகுனிந்தவாறு பெரு மகிழ்வடைந்தனர்.

தன் பாடலின் மகிமையால் ஔவையார் அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்க வைத்ததுபோல அடுத்த பாடலில் பெண்ணை நதியைநோக்கி பாலொடு நெய்யாகப் பெருகி வரும்படி பாடிய பாடலை அறிவோம்.

"முத்தெறியும் பெண்ணை முதுநீரது தவிர்த்து
தத்திய நெய்பால் தலைப்பெய்து - குத்திச்
செருமலைத் தெய்வீகன் திருக்கோவலூர்க்கு
வளமளவுங் கொண்டோடி வா"

எனப் பாடினார். தொடர்ந்து வருணபகவானைப் பொன்மாரி பெய்யுமாறு பாடிய பாடலை அறிவோம்.

"கருணையா லிந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே மாமலையன் கோவல் - திருமணத்தில்
முன்மாரி பெய்யு முதுவா ரியை மாற்றிப்
பொன்மாரியகப் பொழி"

*நெஞ்சத்திலிருந்து வரும் சொல் வியப்புகளை விளைவிக்கிறது.*

**திருக்கோவிலூரைச் சிறப்பித்துப் பாடிய பாடல்**

"பொன்மாரி பெய்யுமுர் பூம்பருத்தி யாடையாம்
அந்நாள் வயலரிசி யாகுமுர் - எந்நாளும்
தேங்கு புகழே படைத்த சேதிமா நாடதனில்
ஓங்கும் திருக்கோவலூர்"

திருமணத்தின்போது வழமையாக இடையர் குலப் பெண்களுக்கு ஆடு சீதனமாகக் கொடுப்பர். அதற்கமைவாக இத்திருமணத்தில் கலந்துகொண்ட சேர மன்னனை நோக்கிய ஔவையார் இடையர்குலப் பெண்களான அங்கவை, சங்கவைக்கு அவர்களின் வழமையான மரபுப்படி சீதனமாக ஆடு கொடுக்கும்படி கேட்டார். தமிழறிஞர், நற்றமிழ் வளர்க்கும் மூதாட்டியான ஔவையின் ஆற்றலினால் யாவரும் அவர்மீது பெருமதிப்பளித்தனர். இடையர் குலப் பெண்களான அங்கவை சங்கவையின் திருமண அழைப்பை ஏற்றபோது சீதனமாக ஆடு வழங்கும் மரபை அறிந்தான் சேரன். அதன் நோக்கில் தமது அரச உயர்நிலையைக் காண்பிப்பதன்பேரில் திருமணத்திற்கென வரும்போது பொன்னாற் செய்யப்பட்ட ஆட்டையும் கொண்டு வந்தவன், ஔவையார் கேட்டவுடன் அங்கவை சங்கவையிடம் பொன்னாட்டை வழங்கினான். ஔவையார் இதனைப் புகழ்ந்து பாடிய பாடல் இதுவாகும்.

"சிரப்பான் மணிமவுலி சேரமான் தன்னைச்
சுரப்பாடி யான் கேட்கப் பொன்னா டொன்றீந்தான்
இரப்பவ ரென்பெறினும் கொள்வர்; கொடுப்பவர்
தாமறிவர் தங்கொடையின் சீர்"

சேரனின் கொடையைப் புகழ்ந்த பின் ஔவையார் சோழனையும் பாண்டியனையும் நோக்கி நீங்கள் இருவீரும் இச்சிறுமிகளான அங்கவை சங்கவையை ஏற்றுச் சுகவாழ்வு வாழ்வீர்களாக என ஆசீர்வதித்துப் பாடிய பாடலை அறிவோம்.

"ஆயன் பதியிலரன் பதிவந் துற்றளகம்
மாயனூதுங் கருவி யானாலும் - தூயமணிக்
குன்று போல் வீறு குவி முலையார் தம்முடனீர்
இன்று போலென்றும் இரும்"

ஏற்கனவே மூவேந்தரும் ஔவையார்மீது பெருமதிப்புக் கொண்டிருந்தனர். தம்மிலும் அறிவு கூடிய மூதாட்டியென்பதாலும் தமது அரசியலில் பற்பல ஆலோசனைகளையும் ஆசீர்வாதத்தையும் தந்து வாழ்த்தும் பெருமையை நிலைநாட்ட மறுவார்த்தையின்றி மூவரும் செயற்பட்டு நிறைவாழ்வு வாழ்ந்தனர். தெய்வப் புலவர்களின் வாழ்த்தும் ஆசீர்வாதமும் என்றும் நிறைவாக வாழ வழிவகுக்கும் என்பதை இதனால் அறியலாம். இவை யாவும் எப்பவோ முடிந்த காரியமாகும்.

(தொடரும்...

**பிரார்த்தனைமூலம் ஆத்மா பரமாத்மாவுடன் தொடர்பு கொள்கிறது. பிரார்த்தனை உண்மையில் இறைவனுடன் பேசுவதாயினும் அதைவிட இறைவனின் குரலைக் கேட்பதே ஆகும்.**

**இறைவன் முன்னிலையில் இயங்குங்கள். உங்கள் அன்றாடக் கடமைகளைச் செய்திடுங்கள். அவனது பார்வையில் இருக்கிறது நம் வாழ்க்கை என்று நம்புங்கள்.**

*உயர்வான எண்ணங்களை அடைய கடுமையாக உழைக்க வேண்டும்.*

# நான் பார்த்து வியந்த சந்நிதியான் ஆச்சிரம அன்னதானப் பணி

– செல்வி தயாளினி குமாரசாமி அவர்கள் –

கடல் வளம் சூழ்ந்த தொண்டை மானாற்றின் நாயகனாக வீற்றிருக்கும் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து சரி கிழக்காக 200மீற்றர் தூரத்தில் சந்நிதியான் ஆச்சிரமம் அமைந்துள்ளது. அரச மரத்தின் நிழலில், ஒரே நேரத்தில் ஐநூறு அடியவர் களை உள்ளே அடக்கக்கூடிய வகையில் பெரிய சமையலறை, பூஜை அறை, வரவேற்பு அறை, அச்சுக்கூடம் கொண்டு அழகிய தோற்ற அமைப்புடன் சந்நிதியான் ஆச்சிரமம் அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் "ஆனந்தா ஆச்சிரமம்" எனும் பெயருடன் மயில்வாகனம் சுவாமிகளால் தோற்றுவிக்கப் பட்டதாயினும், தற்போது "சந்நிதியான் ஆச் சிரமம்" எனும் பெயருடன் மோகனதாஸ் சுவாமிகளால் வழிநடத்தப்படுகிறது.

சந்நிதியான் ஆச்சிரமப் பணிகளைப் பள்ளிப் பருவத்தில் இருந்து இன்றுவரை பார்த்த காரணத்தினால் அனுபவத்துடன் பேச நேரிடுகின்றது. இது ஆச்சிரமம் என்று கூறப்பட்டாலும் அன்னப்பசியோடு, சமயப் பணி, சமூகப்பணி, அறப்பணி என்பவற்றை ஆற்றும் இடமாக இருப்பது யாம் அறிந்ததே. இங்கு யான் பசியோடு அறிவுப் பிணியையும் பல நேரங்களில் தீர்த்திருக்கின்றேன்.

தானங்களில் சிறந்த தானம் அன்ன தானம் என்று சொல்லப்படுகின்றது. நாம் வைத்திருக்கும் உணவு சிறிதளவாக இருப் பினும் மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து உண்ணுதல் வேண்டும். இதனைத்தான் "பகிர்ந்து உண்டு பல்லுயிர் ஓம்புதல்" என்ற வாசகம் தெளிவுபடுத்துகின்றது. ஒருவருக் குப் பசி ஏற்பட்டுவிட்டால் பத்துவகையான செல்வங்களும் பறந்துவிடும் என்று ஔவை யார், "மானம் குலம் கல்வி...." எனும் பாடல் மூலம் வெளிப்படுத்துகின்றார். பசியைவிடக் கொடியது எதுவுமல்ல. அதிலும் இளமை யின் பசிக்கொடுமை மிகவும் கொடியது. அவ்வகையில் சந்நிதியானிடம் வரும் அடிய வர்களின் பசிப்பிணியைத் தீர்க்கும் நோக்கில் தினந்தோறும் அன்னதானம் சந்நிதியான் ஆச் சிரமத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. செல் வச்சந்நிதி ஆலயத்தில் மதியம் பூசை நண் பகல் பன்னிரண்டு மணிக்கு முருக மணி ஓசையோடு ஆரம்பிக்கும் அதே நேரத்தில் ஆச்சிரமத்தின் பூசை அறையிலும் பூசை நடைபெறும். இங்கு மோகன் சுவாமிகள் பூசையைப் பக்திசிரத்தையோடு நிறைவேற்று வார். பின் தீபம் காட்டப்பட்டு, தேவாரம் ஓதப்பட்டு மோகன் சுவாமிகளால் திருநீறு வழங்கப்படும். இதன்போது வரிசையாகவும், ஒழுங்குமுறையாகவும் அடியவர்கள் நின்று திருநீற்றினைப் பெறுவர். இதன் பிற்பாடே அன்னதானம் வழங்கப்படும். இந்த விதி முறை என்றும் இங்கு மாறுவதே இல்லை. இப்படி நடைபெறுவதுதான் சந்நிதியான் ஆச் சிரமத்திற்குரிய தனித்துவம் ஆகும்.

வெள்ளிக்கிழமைகளில் அன்னதானம் நடைபெறும்போது நமசிவாயப் பதிகம் முருக பாடல்கள் மோகன் சுவாமிகளால் ஓதப்படும். அதனை அடியவர்கள் பக்தியுடன் ஓதுவார் கள். அறுபத்துமூன்று நாயன்மார்களுடன் முருகனும் ஒருவராக நினைவுபடுத்தி அவர் களைப்போன்று பாவனைப்படுத்தி அறுபத்து நான்கு பேருக்கு உணவு கொடுக்கும் முறை சிறப்பானதாகும். ஆண்களையும் பெண்களையும் தனித்தனி வரிசைகளில் உட்கார வைத்துப் பக்குவமாக உணவு பரிமாறும் விதத்தினை

*எண்ணங்கள் அனைத்தும் உயர்வாக இருக்கவேண்டும்.*

யான் பல தடவைகள் பார்த்து வியந்தது உண்டு. உணவு பரிமாறும் தன்மை விசேடமானது. ஒவ்வொரு நாளும் அறுசுவை உணவோடு வடை, பாயாசம் கொடுக்கப்படும். உணவோடு தண்ணீரும் அனைவருக்கும் வழங்கப்படும். இது வேறு எந்த மடங்களிலும் இல்லாத உயரிய செயல் ஆகும். வயோதிபர்கள், அங்கவீனர்களைக் கதிரை, மேசையில் உட்கார வைத்து அவர்களுக்கு அன்புடன் அன்னம் பரிமாறுவதும் குறிப்பிடத்தக்கதாகும். இத்தன்மை சந்நிதியான் ஆச்சிரமத்திற்கேயுரிய சிறப்பான தன்மை ஆகும்.

சந்நிதியான் ஆச்சிரமத்தில் விசேட நிகழ்வுகள் நிகழும்போது சிற்றுண்டிப் பொருட்களோடு மதிய உணவு கொடுப்பது அவதானிக்கத்தக்கதாகும். செல்வச்சந்நிதியானிடம் வரும் அடியவர்கள் எவராக இருந்தாலும், எந்தப் பாகுபாடும் பாராது அனைவரும் முருகனின் அடியார்கள் எனும் விதத்தில் அன்னதானம் வழங்கப்படும். எத்தனை அடியார்கள் வந்தாலும் இல்லையென்னாது அத்தனை அடியவர்களுடைய பசிப்பிணியைப் போக்கும் வகையில் சந்நிதியான் ஆச்சிரமம் பல ஆண்டுகளாகச் செயற்பட்டு வருகின்றது. இப்படியான அன்னப்பணி சந்நிதியான் சூழலில் நடைபெறுவதனால்தான் சந்நிதிக்கந்தன் "அன்னதானக் கந்தன்" என அழைக்கப்படுகின்றான். சந்நிதியான் ஆச்சிரமச் சமையற் பணிகள் ஆச்சிரமத்தின் சமையற் கூடத்திலேயே நடைபெறும். அங்கு வேலை செய்பவர்கள் மோகன் சுவாமிகளின் வழிகாட்டலிலேயே பணிபுரிவார்கள். வேலை என்ற எண்ணமின்றி சேவை எனும் எண்ணமே சந்நிதியான் ஆச்சிரமத்திலே காணப்படுகிறது. ஆச்சிரமத்தில் மதிய உணவோடு காலை, மாலை உணவும் சந்நிதி சூழலில் தங்கியிருக்கும் ஆதரவற்றோர்களுக்கு தினமும் வழங்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். வீட்டில் ஒருநாள் சமைப்பதற்கே எவ்வளவு சிரமப்படுகின்றோம். எவ்வளவு பிரச்சினைகள் உண்டாகின்றது. ஆனால் எந்த எதிர்பார்ப்பும் இன்றி வரும் அடியார்கள் அனைவரும் பசியாறிச் செல்லவேண்டும் எனும் உயரிய நோக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்டு சந்நிதியான் ஆச்சிரமத்தினர் கூட்டாக இயங்கி வருகின்றனர் எனின் இது எவ்வளவு பெரிய காரியமாகின்றது. யான் சிறு பருவத்தில் இருந்து இன்றுவரை சந்நிதியான் ஆச்சிரமத்துடன் கொண்ட நெருக்கத்தினூடாக இந்த விடயங்களைப் பகிர்ந்திருக்கின்றேன். இங்கு சமயப்பணி, சமூகப்பணி, அறப்பணி நடந்திடினும் அன்னப்பணியைப் பார்த்தே வியந்திருக்கின்றேன். ஆச்சிரமத்தின் பணி இன்றுபோல் என்றும் தளைத்தோங்க சந்நிதியான் அருள் வழங்குவானாக. நாம் அனைவரும் ஆச்சிரமப் பணிகளூடாகப் பயணிப்போமாக!.

**ஓலம் இட்டு அழைத்திட்டால்**
**ஓடி வருவான் சந்நிதியான்**

வேலன் சந்நிதி வீற்றிருந்து
வேண்டும் வரங்கள் அளிக்கின்றான்
காலம் எல்லாம் அவனருளே
காத்து நிற்கும் அடியவரை
ஞாலம் எங்கும் அவன்புகழே
நாளும் பொழுதும் கேட்டிடுமே
ஓலம் இட்டு அழைத்திட்டால்
ஓடி வருவான் சந்நிதியான்

- வ. யோகானந்தசிவம் -

*கோபம் வரும்போது அதனை அடக்கி ஆள்வதே வீரமாகும்.*

# இறைவனும் இறைவியும்

– **திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு** அவர்கள் –

இறைவனும் இறைவியும் ஒருபோது சொக்கட்டான் விளையாடிக்கொண்டிருந்தனர். விளையாட்டிலே ஈசனை வென்ற காரணத்தால் பெருமிதம் கொண்டாள் தேவி. இது சுவாமிக்குப் பிடிக்காததால் இறைவியைப் பூவுலகத்திலே பசுவாகப் பிறந்து திரியுமாறு இறைவன் சாபமிட்டார்.

இச்சாபத்தால் இறைவியிலும் பார்க்க வேதனை அடைந்தவர் மகாவிஷ்ணுதான். தன் அருமைச் சகோதரிக்கு இப்படியொரு நிலை வந்துவிட்டதே என்ற வேதனை அவருக்கு.

எப்படியாவது தன் சகோதரியை ஈஸ்வரனோடு சேர்த்துவிட வேண்டும் என்று பிரார்த்தனையும் பூஜையும் பண்ணிக்கொண்டிருந்தார் விஷ்ணு பகவான்.

பகவானின் பிரார்த்தனையாலும் பூஜையாலும் மனம் குளிர்ந்த இறைவன் மகாவிஷ்ணுவிடம் "நீ அம்பாளான பசுவை காவேரியில் நீராடவை. அப்போது அவளது பழைய உருவம் வரும். அப்புறம் யானே வந்து எப்போது அவளைத் திருமணம் செய்வது என்று சொல்வேன்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இறைவன் சொன்ன பிரகாரமே கோசகரான விஷ்ணு அம்பாளான பசுவை காவேரியில் நீராட வைத்து அடுத்த ஊர் சென்றடைந்தார். அந்த ஊர்தான் இப்போது திருவாவடுதுறை என்றழைக்கப்படுகின்றது. ஆ அடு துறை என்று வந்தது. ஆ என்றால் பசு. பசு சென்றடைந்த இடம் என்ற காரணத்தால் ஆ அடுதுறை என அழைக்கப்படுகின்றது.

இங்கேதான் திருமூலர் இடையனை இழந்த பசுக்களுக்காக இரங்கி, இறந்த இடையனின் உடலில் புகுந்து பின் திருமந்திரமும் பாடியதால் திருவும் சேர்ந்து திருவாவடுதுறை எனப் பெயர் வழங்கலாயிற்று.

ஈஸ்வரன் கொடுத்த வாக்கின்படி அம்பாளுக்குப் பசுவின் ரூபம் நீங்கி சுயரூபமும் வந்தாகிவிட்டது. ஈஸ்வரனும் சொன்னபடி ஆங்கு பிரத்தியட்சமானார்.

ஆனால் அவர் இன்னமும் சில கூத்து நடாத்தத் திருவுளம் கொண்டார். இச்சம்பவம் நடந்த இடத்துக்கு அருகே குற்றாலம் என்று ஓர் அருவி இருந்தது.

இது அருவி விழும் குற்றாலமல்ல. இது தஞ்சாவூருக்கு அருகே மாயவரத்துக்குப் பக்கத்தே உள்ளது. இங்கு அம்பாளைத் தன் பெண்ணாகப் பெற்று வளர்க்க வேண்டும் என்று ஒரு ரிஷி தவம் செய்துகொண்டிருந்தார்.

அம்பாள் பூலோகத்துக்கு வந்தது தான் வந்தாள் ரிஷியினுடைய இஷ்டத்தையும் பூர்த்தி செய்ய இந்தச் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தி விடுவோமே என இறைவன் திருவுளங் கொண்டார். அதனால் ஈஸ்வரன் அம்பாளிடம் "நீ போய் திருத்துருத்தி

*உண்மையான வீரம் பிறரைக் கீழே வீழ்த்துவதல்ல.*

என்றழைக்கப்படும் குற்றாலத்திலே அந்த ரிஷிக்குப் பெண்ணாகப் பிறந்து கொஞ்சக் காலம் இரு அப்புறம் யான் வந்து உன்னைத் திருமணம் செய்துகொள்கிறேன்'' என்றார்.

அம்பாளும் அப்படியே செய்தார். பின்னர் சுவாமி அங்கு பிரசன்னமானார். அங்கு வேதேச்வரர் என்ற பெயருடன் சுவாமி இன்றும் விளங்குகிறார்.

ரிஷி ஒருபுறம், தன் சகோதரியின் கல்யாணத்துக்காக மகாவிஷ்ணு மறுபுறம், அங்கு காத்திருந்தனர். இதனால் அந்த ஊருக்கு "எதிர்கொள்பாடி" என்ற பெயரும் ஏற்பட்டது.

இந்த ஊருக்கு அருகே அன்னையின் திருமணத்துக்கு முன்னால் ஹோமம் செய்து வேள்வி ஒன்றும் ஆக்கிய காரணத்தால் அந்த ஊர் வேள்விக்குடி என்றும் பெயர்பெறலாயிற்று. அடுத்து அம்பாள் மணப் பெண்ணாகப் பார்த்து பாலிகை தெளித்த இடம் ஆதலால் முளைப்பாலி என நாமமும் இவ்வூருக்கு வரலாயிற்று. திருமணநாள் வந்தது. இறைவன் இறைவி திருமணத்திற்காக மூன்று கிராமங்களை ஒன்று சேர்த்துப் பெரிய பந்தர் ஒன்று போடப்பட்டது. அதற்கு மத்யமாக இருந்த ஊருக்கு திருமணச்சேரி எனவும் நாமம் வழங்கலாயிற்று.

இங்கேதான் தன் மனம் குளிர மஹா விஷ்ணு தன் சகோதரியை ஈஸ்வரனுக்குத் திருக்கல்யாணம் செய்து வைக்கார்.

இந்த வகையில் தேரெழுந்தூர், திருக்குளம்பியம், திருவாவடுதுறை, குற்றாலம், எதிர்கொள்பாடி, வேள்விக்குடி, குறுமுளைப்பாலி, திருமணஞ்சேரி என்று ஊர்களின் தலப்பெருமைகளை யாம் அறிந்தோம். அது மாத்திரமல்லாது இவ்வரலாறுகள் மூலம் சூதாட்டம் என்னும் விளையாட்டு பாவமானது, பதிக்குப் பத்தினி கட்டுப்பட்டு அடக்கமாக வாழ வேண்டும், சகோதரவாஞ்சை என்பது ஒரு பெரும் தர்மமாகும், என்னும் பல நற்சிந்தனைகளையும் யாம் அறிகின்றோம்.

எனவே எமது சமய தலங்களின் வரலாற்றையும் அவை வெளிப்படுத்தும் பேருண்மைகளையும் யாம் அறிந்து பயன்பெற வேண்டும். தமிழ்நாட்டுக்குத் தல யாத்திரை செய்பவர்கள் இத்தலங்களைத் தரிசிக்கவும் தவற வேண்டாம். முயல்வோமாக.


**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னபணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**

செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**

செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

# சமய வாழ்வு (தொடர் -21)

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

இந்து ஞானிகள் உடலை ஓம்புவது, உயிரை ஓம்புவது என்று சொன்னார்கள். உடம்பார் அழியின் உயிரார் அழிவர், என்றும் சொன்னார்கள். சித்தர்கள் கண்ட மருத்துவ முறை சித்த வைத்தியம் என்று அழைக்கப்படுகின்றது. சித்த வைத்தியம் உடல் பாதுகாப்புக்கே முதலிடம் கொடுக்கிறது. உடல் ஆரோக்கியமாக இருந்தால் மனம் ஆரோக்கியமாக இருக்கும் என்கிறார்கள் சித்தர்கள்.

சித்தர்களின் பாடல்களில் உடலின் சிறப்பு விளக்கமாக எடுத்துக்கூறப்பட்டிருப்பதைக் காணலாம். தெய்வ பக்தியில்கூட மருத்துவ முறைகளை இணைத்தார்கள்.

பழனியிலுள்ள முருகன் சிலையை உருவாக்கியவர் போகர் என்கிற சித்தர். இந்தச் சிலை நவபாஷானத்தால் உருவாக்கப்பட்டது. இந்தச் சிலைக்கு அபிஷேகம் செய்யும் பஞ்சாமிர்தத்தை உட்கொண்டால் உடல் நோய்கள் குணமாகும். உடல் ஆரோக்கியமாக இருக்கும். தெய்வச் சிலைகளிலேயே கூட மருத்துவ குணங்களை புகுத்தியவர்கள் இந்துக்கள்.

பழனி முருகனின் தெய்வச் சிலை அபிஷேகங்களால் வடிவம் மாற்றமடைந்து (தேய்ந்து) வருவதாக அறியப்பட்டுள்ளது. இந்த முருகன் சிலைக்கு ஏற்படும் பாதிப்பை தடுப்பதற்காக சிலையை மெழுகு உறையினால் மூடியுள்ளார்கள்.

இந்துக்கள் உடல் தூய்மையை சிறப்பாகக் கருதினார்கள். அதிகாலையில் எழுந்து குளிர்ந்த நீரில் நீராடி, சூரிய வணக்கம் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். உடலைத் தூய்மைப்படுத்தி, சூரியக்கற்றையை உடலில் பாயவிடும்போது, கண்கள் ஒளிபெறுகின்றன; உடல் ஆரோக்கியமடைகிறது. அதிகாலையில் சூரியனின் செவ்வண்ணக் கதிர்கள் உடலுக்கு வலுச்சேர்க்கும் ஆற்றல் படைத்தவை. (விற்றமின் D தொகுக்கப்படுகிறது.)

வீட்டுக்கு முன்னால் துளசிச் செடியை வளர்க்கச் சொன்னார்கள். துளசிச் செடி வளிமண்டலத்திலிருந்து ஒட்சிசனை, ஓசோனாக மாற்றும் ஆற்றல் கொண்டது. ஓசோன் உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளக் கூடியது. இயற்கையாக வளிமண்டலத்திற்கு மேலாக ஓசோன்படை காணப்படுகிறது. இதனால் சூரிய நிறமாலையின் உள்ள நச்சுக் கதிர்கள் தடுக்கப்பட்டு, அவை பூமிக்கு வராமல் பாதுகாக்கப்படுகிறது.

அரச மரத்தையும் வேப்ப மரத்தையும் புனிதமானதாகக் கருதினார்கள். இவற்றில் இருந்து கிடைக்கும் காற்று நுரையீரலைச் சுத்தப்படுத்தி, ஓமோன்களைச் செயற்பட வைக்கிறது. இப்படி இந்துக்களின் பழக்கவழக்கங்கள் அனைத்திலும் உடல் ஆரோக்கியம் முதன்மையானதாக இருப்பதைப் பார்க்க முடியும்

உடலை இவ்வளவு உயர்வானதாக இந்துக்கள் கருதக் காரணம் என்ன?

வாழ்க்கையின் சுகம் அனைத்தையும் உடல்மூலமாகத்தான் நாம் அனுபவிக்கிறோம். இந்த உடலின் மூலமாகத்தான் இறைவனை உணர்வது சாத்தியமாகிறது. உடலை இயக்குவது உயிர் என்றாலும் வாழ்க்கை என்பது உடல் இல்லாத உயிராக இருக்கமுடியாது. எனவேதான் இந்துக்கள்

*தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே ஒதுங்கிக்கொள்கிறது.*

உடலைப்பேணிக் காப்பதிலும் நோய்கள் வராமல் உடலைப் பாதுகாத்துக்கொள்வதிலும் மிகுந்த கவனம் செலுத்துகிறார்கள். (செலுத்தினார்கள்)

ஒரு இந்து இன்னொரு இந்துவைப் பார்த்தால் கேட்கின்ற முதல் கேள்வி "நலம் தானா? என்பதாகத்தான் இருக்கும். உடல் நலமாக இருந்தால் வாழ்க்கை சீராக இருக்கும் என்பது இந்துக்களின் நம்பிக்கை.

அப்பர் பெருமான் அருமையான பாடல் ஒன்றைப் பாடியிருக்கின்றார்.

**குனித்த புருவமுங் கொவ்வைச் செவ் வாயிற் குமிண் சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்**
**இனித்த முடைய எடுத்த பொற் பாதமும் காணப் பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே!**

இறைவனைக் காண்பது மனிதப் பிறவியின் நோக்கம். அதேநேரத்தில் இந்துக்கள் அழகை ரசித்ததைப்போல வேறு எவரும் ரசித்திருப்பார்களா என்பது சந்தேகமே. இந்தப் பாடலில் அப்பர் பெருமான் நடராஜரின் ஆனந்தத் தாண்டவ கோலத்தில் தன்னை மறந்து, ஒரு அற்புதமான விடயத்தைச் சொல்லுகிறார். நடராஜப் பெருமானின் திருக்கோலத்தை காண்பதற்காகவாவது மனிதப் பிறவி தேவைதான் எனக் கூறுகிறார்.

இந்துக்கள் உருவாக்கிய ஆலயங்கள், வடித்த சிற்பங்கள், உருவாக்கிய பாடல்கள் அனைத்துமே கலை அழகு நிரம்பியவை.

இறைவனை அழகின் வடிவமாகக் கண்டவர்கள் இந்துக்கள். இயற்கைக் காட்சிகளை வைத்தே இறைவனின் வடிவத்தை உருவாக்கினார்கள்.

முருகனுக்கு செவ்வேள் என்கிற பெயர் உண்டு. முருகன் சிவப்பு நிறமாகக் காட்சி அளிக்கக்கூடியவன். கிழக்கே காலைக் கதிரவன் உதிக்கின்ற காட்சியைப் பார்த்தால், சிவப்பின் அழகு புரியும். சூரியன் சிவந்த கோளமாகக் கடலின்மீது உதயமாகின்ற கண்கொள்ளாக் காட்சி இது. இந்தச் சூரியனை செவ்வேளாக தமிழர்கள் பார்த்தார்கள். கடல்மீது சூரியன் உதிக்கும்போது நீலக் கடல் பரப்பில் அவன் சவாரி செய்து வருவதைப் போன்ற காட்சி அவர்கள் கண்முன் தோன்றிய முருகன் என்கிற செவ்வேள் மயில் வாகனத்தின்மீது வருவதாகக் கற்பனை செய்தார்கள். காலைச் சூரியன் வருவதை அதிகாலையிலே மாந்தர்க்கு அறிவிப்பது சேவல். சேவல் கூவிய பிறகுதான் பொழுது விடிகிறது. ஆகவே அந்தச் சேவலை முருகன் வருகையை அறிவிக்கும் கொடி ஆக்கினார்கள். அதனால் சேவல் கொடியோன் என்கிற பெயரும் அவனுக்கு வந்தது. (நக்கீர பெருமான் பாடிய திருமுருகாற்றுப்படையில் முருகன் பற்றிய வருணனையின் அடிப்படையில் முருகனின் அழகை ரசிப்பதற்கு இளைஞர்கள் முற்படவேண்டும் எனும் நோக்கத்தில் முருகனின் அழகைக் குறிப்பிட்டுள்ளேன்.)

இந்து மதத்தில் பெரிய குறையாகச் சொல்லப்படுவது வருணாசிரம தர்மமாகும். அதாவது பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என நான்கு வருணங்களாகப் பிரிக்கப்பட்டார்கள். இந்தப் பாகுபாட்டினால் உயர்வு தாழ்வு உருவாயிற்று என்றும், சாதிகள் தோன்றின என்றும் ஒரு குற்றச்சாட்டு உண்டு. இந்தக் குற்றச்சாட்டை ஆராய வேண்டிய தேவை உண்டு. மாற்றுமதத்தினர் இவ்விடயத்தை பெரிதாக்கி ஊதுகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதில் காண்பதாயின் இந்துமத வளர்ச்சியை வரலாற்று ரீதியாகப் பார்க்க வேண்டும், பார்ப்போம்.

(தொடரும்...

*அழகான உருவத்தைவிட அழகான நடத்தையே மிக நல்லது.*

# எண்ணத்தில் உயர்ந்து நில்லுங்கள்

– **திரு முருகுப்பிள்ளை செல்லத்தம்பி** அவர்கள் –

மனிதன் மனிதனாக வாழ்வு பெற்று ஓங்க மகத்தான ஆற்றல்கள் வேண்டும். அந்த மகத்தான ஆற்றலை அடையப்பெறு வதற்கு மாண்புமிகு எண்ணங்கள் அவன் மனதில் உருவாக வேண்டும். வாழ்வின் இயல்பு களை அதன் சுவடுகளை வென்றெடுப்பதற்கு வாய்மையுறு எண்ணங்களே அவனுக்குக் கிடைக்கும் ஏணிப்படிகள் ஆகும்.

தான் ஒரு மனிதன் என்ற தன்மான உணர்வை அவன் வளர்த்தெடுக்க வேண் டும். தன்னை முழுமையாக நம்பியாக வேண் டும். அதன் பிறகே ஆண்டவனைத் தேட முடியும். தன்னை அவன் நம்புவதற்கு தன்னை முதன்மைப்படுத்துவதற்கு அவனிடம் என்ன தான் திறமை குடி கொண்டிருக்கின்றது.

ஐந்துக்குப் பின்னால் ஆறாவது அறி வாக அடையாளம் கொண்டு அந்தரங்கமாய் விளங்கும் அற்புதத் தொகுதி ஒன்று "மனி தம்" என்ற அர்த்தம் பொறித்துப் பதிக்கப் பட்ட முத்திரைபோல் அகிலம் தன்னை ஆட்சி செய்யும் பகுத்தறிவு என்னும் சக்தியே "ஆறு". இந்த பகுத்தறிவின் பயன்பாட்டைப் பாங்குடனே கடைப்பிடித்து பண்புடன் வாழ் பவனே முழு மனிதன் ஆகிறான். பிறவிப் பயனை அடைகின்றான். ஏற்றமிகு சமு தாயத்தில் எழுச்சிதனைப் பெறுகின்றான். மனிதனுக்கு தயவு தாட்சண்யம் கொண்ட பணிவு மனப்பான்மை வேண்டும். தீமை களைக் களைந்து நன்மை புரிய வேண்டும். எப்பொழுதும் இன்முகம் காட்டி இன்சொல் பேச வேண்டும். பழகும் விதத்தில் பொலியும் பசுமை உள்ளம் வேண்டும். பொறுமை எனப் போற்றும் புண்ணியப் பேறுகொண்ட உணர்வு வேண்டும். எல்லா உயிர்களையும் நேசிக்க வேண்டும். ஆசை, கோபம் என்ப வற்றை அறவே ஒழித்தல் வேண்டும். மனதை ஒருமுகப்படுத்தும் பக்குவ நிலை வேண்டும். இதனால் தெளிவான சிந்தனையும் செயற் திறனும் உருவாகும். எதனையும் சாதிக்கும் சாதுரியம் கைகூடும். "உயிர்களிடத்தில் அன்பு வேண்டும். தெய்வம் உண்மையென்று தானறிதல் வேண்டும். வைரமுடைய நெஞ்சு வேண்டும். இது வாழும் முறையடி பாப்பா" என்ற மகாகவி பாரதியாரின் பாடலை மன தில் இருத்திச் செயற்பட வேண்டும்.

பெரியோரைக் கனம் பண்ணும் பேராற் றல் வேண்டும். பெரும் பணிவுடன் அவர் களைக் கனம்பண்ணுதல் வேண்டும். உண் மையையே பேச வேண்டும். நல்லதையே செய்ய வேண்டும். "உள்ளதைச் சொல்லி நன்மையைச் செய்தால் உலகம் உன்னிடம் மயங்கும் நிலை உயரும்போது பணிவு கொண்டால் உயிர்கள் உன்னை வணங்கும்" என்பது தத்துவப் பாடலின் முக்கிய வரியாகும்.

உங்கள்மீது ஒருவர் வசை பாடி னால் என்ன செய்வீர்கள்? முன்பு கூறிய பொறுமை என்ற பேறு நிலைக்க அதற்குக் கொஞ்ச வேலை கொடுங்கள். புன்முறுவல் செய்யுங்கள் பேச்சைத் தவிர்த்துச் சிலை யாக இருந்து விடுங்கள். அதுதான் தெய் வத்தின் சந்நிதியாகும். உங்களை வசை மொழிந்தவரே உங்களை வாயார வாழ்த்தும் நிலைகூட உருவாகலாம். எனவே எண்ணத் தில் உயர்ந்து நில்லுங்கள். ஏற்றம் பெறும் வாழ்வை சுமந்து நிற்பீர்கள்.

*அகங்காரம் வரும்போது அதன்பின்னே அவமானமும் வந்துசேரும்.*

# அமாவாசையில் அருள் சுரக்கும் அம்மா ப்ரத்யங்கிரா தேவியை ஆன்ம விடுதலைக்காய் மன்றாடுவோம்

– **திரு கே.எஸ். சிவஞானராஜா** அவர்கள் –

"அம்மே ப்ரத்யங்கிரா தேவி ப்ரத்யங்கிரா
சத்யம் ப்ரத்யங்கிரா ஸர்வம் ப்ரத்யங்கிரா"

சிவபெருமானது ஈசான்யம், தத்புருஷம், வாமதேவம், சத்யோஜாதம், அகோரம் ஆகிய ஐவகை முகங்களிலிருந்து ருத்திரன், சரபேஸ்வரர், வீரபத்திரர், முருகன், காளி, ப்ரத்யங்கிரா, பைரவி ஆகிய ஸப்த தெய்வ முகூர்த்தங்களும் நம் வாழ்வில் குறுக்கீடு செய்யும் அத்தனை தீய சக்திகளையும் தவிடுபொடியாக்கி வல்லமை தரவல்லதாகும். இருந்தபொழுதிலும் "ப்ரத்யங்கிரா" தேவியானவள் எவராலோ மறைக்கவும் மறக்கவும் செய்யப்பட்ட முகூர்த்த தேவியம்சமாகப் பத்திரமாக்கப்பட்டு, மௌனம் செய்யப்பட்டிருந்தாள். இதன் விளைவாக நாட்டிலே குழப்பங்கள், பயங்கரவாதங்கள், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கடத்தல், போதை, பயமுறுத்தல், பாரபட்சம், செய்வினை, சூனியம் மாந்திரீகம் ஆகியன நாடெங்கிலும் தலைப்பட்டன. அரசாலும் சட்டங்களினாலும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அக்கிரமங்கள் தலைவிரித்தாடுவதை நாம் இப்போது பார்க்கின்றோம். அனுபவிக்கின்றோம்.

இத்தகு அகோர நிலையினைக் கட்டுப்படுத்தும் நோக்கோடு, வட்டுக்கோட்டையில் அமைந்த தெல்லிப்பளை வீதியிலே, சங்கரத்தைச் சந்திக்கண்மையில், மாவடிச் சந்திக்குப் போக முதலாக, ப்ரத்யங்கிரா சக்தி பீடமமைந்துள்ளது.

ஸ்ரீ மஹா கால பைரவர் உடனுறை பத்தினி ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிராதேவி தேவஸ்தானம் இலங்கையில் வேறெங்கணுமே அமைந்ததில்லை. ஒரேயொரு ஆலயம் இதுவாகும்.

சிவனானவர் சூரனை, தட்சனை, நரசிம்மனை அழிக்கவல்ல அகோர சக்திக்கப்பால், நம் அன்னை மஹா சக்தி ப்ரத்யங்கிரா தேவிக்கு 1000 தலை, 2000 கைகள், ஆயுதங்கள், சிவந்து பரந்த கண்கள், தலையில் சந்திரக்கலை, கறுத்த பேருருவம், பெருங் கழுத்தில் நீண்ட கபால மாலை, கிண்கிணி மாலை, கழுகின் இறக்கையிலான மாலை, இரு நீலப்பட்டாடை, தெற்றுப் பற்கள் அமைந்த குகைபோன்ற வாய், நீண்ட நாக்கு, அஷ்ட நாகங்கள், குடையாக எமனையும் அஞ்ச வைக்கும் தோற்றமே "ப்ரத்யங்கிரா" தேவியாகும். வல்வினைகளையும் கொடிய சாபங்களையும் துஷ்ட கண்ணீறு பார்வைகளையும், வாட்டி வதைக்கும் எந்த நோய்களையும் அறவே நீக்கவல்ல ஒரு தெய்வத்தை நேரிலே ஒரு தடவை தரிசிக்க வாருங்கள். மாவடியில் ஒரு சேவடி. அது ஒரு புண்ணியமான ஷேத்திரம் திருவருட் பாத்திரம்!

சாக்தஸ்ரீ ப்ரத்யங்கிரா சுவாமிகளின் அருளாசிபெற்ற பழனி பால இரவிச்சந்திரன் அவர்களது வழிகாட்டுதலோடும் திருவாக்கோடும்,

*வாழ்க்கையின் மகிழ்ச்சி பிறரை மகிழ்விப்பதில்த்தான் இருக்கிறது.*

மூதாதையோர்களின் புண்ணிய உபகார முது சொம்களோடும் சந்திரன் வாலாயக் கீர்த்தி யோடும் இப்பீடமானது அமாவாசைதோறும் அருளையும் வரங்களையும் அள்ளித்தருகிறது.

தேவிக்குச் செக்கச் சிவந்த பழங் கள் என்றால் அலாதிப் பிரியம். அதனால் பிரதி அமாவாசைதோறும் நடைபெறும் யாகங்களில் காய்ந்த சிவந்த மிளகாய் ஏராளம் சொரியலாகவும் மாலையாகவும் ஆகுதியிலிடப்படும். இதன்மூலம் அதர்மங் கள், துன்பங்கள், கலகம், பிளவுகள், அகால மரணங்கள், ஸர்ப்ப தோஷம், காரியத் தடை கள், புத்திரபாக்கியமின்மை, தீராத வியாதி கள், பயமுறுத்தல்கள் ஆகிய யாவற்றிற்கும் விடுதலை கிடைத்தே தீரும். விமோசனம் கிடைக்கும். நிவாரணம் உண்டு. மேலும் சனிதோஷம், நவக்கிரக தோஷம், பித்ரு தோஷம் நீங்கவும் நீடித்த ஆயுள் பெறவும் கால பைரவ பெருமானுக்கு மிளகு தீபம் ஏற்றி வழிபடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது.

ஸ்ரீ கருப்பர் சாமி மிகப் பிரமாண்ட மாக பெரிய குதிரையிலும், உயரமாகச் சிலையிலும் எம்மவரைக் கலங்காது பாது காப்பதற்கும் வடிக்கப்பட்டுள்ளது. மற்றும் கருடாழ்வார் வாகனத்தில் வராகி அம்மா அருள் பாலிக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக அறக்கட்டளைமூலம் அறம் பெருகுகிறது. ஒரு முறை வருகை தந்தால் அதிக வரம் பெற லாம்! வேறென்னதான் வேண்டும்!

## கட்டுரையாளர் கவனத்திற்கு...

2015 முதல் 2018 வரை உள்ள காலப்பகுதியில் "ஞானச்சுடர்" ஆன்மீக மாதாந்த சஞ்சிகையில் கட்டுரைகள் - கவிதைகள் எழுதியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு விரைவில் நடைபெறவுள்ளது. எனவே, ஞானச்சுடர் மலருக்கான ஆக்கங்களை (2015 - 2018) வழங்கிய அனைவரும் தங்கள் தற்போதைய சரியான முகவரிகளுடன் - தொலைபேசி இலக்கங்களையும் குறிப்பிட்டு விரைவில் கடிதம் மூலமோ அல்லது தொலைபேசி மூலமோ அறியத்தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.

**-சைவ கலை பண்பாட்டுப் பேரவை-**

# இறை அருள் பெற்ற சமயமே சைவசமயம்

– **திரு பு. கதிரித்தம்பி** அவர்கள் –

விஞ்ஞானிகள் சைவ சமயத்தின் வரலாற்று உண்மைகளை நன்கு ஆராய்ந்து, சைவ சமயமே இறையருள் பெற்ற சமயம் என்பதை ஏற்றுள்ளனர். ஐந்தாம் நூற்றாண்டு அளவில் சைவசமயம் இந்தியாவில் சமணர்களுடன் வாதிட்டு,

01) நெருப்பில் ஏடு இட்டு எரியாமை இருந்தது.

02) ஏடு நீரில் எதிர் ஏறிச் சென்றது.

03) ஏழுநாள் நீர் உணவின்றி அப்பர் அடைக்கப்பட்டு ஏழாம்நாள் திறந்து சமணர் பார்த்தபொழுது இறவாது, பூரிப்புடையவராய்த் திகழ்ந்து சைவத்தின் பெருமையை அறிய வைத்தமை.

04) திருமறைக் காட்டில் பூதங்களால் அடைக்கப்பட்ட கதவு அப்பரால் திறக்கப்பட்டு, பின் சம்பந்தரால் மூடப்பாடியமை.

இவற்றை நன்கு ஆராய்ந்த விஞ் ஞானிகள் சைவசமயம் இறையருள் பெற்ற சமயம் என்பதை ஒப்புக் கொண்டுள்ளனர்.

இலங்கையிலும் அக்காலத்தில் புத்த பிக்குகள் புத்த சமயத்தை சிதம்பரத்தில் நிலைநாட்டுவோமென்று அரசனையும், மகள் ஊமைப் பெண்ணையும் அழைத்துக் கொண்டு, தில்லை சென்று மாணிக்கவாச கருடன் வாதிட வந்த பிக்குகள் பேசமுடியாது இருந்தமையால், அரசன் மகள் ஊமை வினாக்களுக்கு விடை அளித்தாள். உடன் அரசன் சைவ சமயத்தவனாக தானும், தன் மகளையும் மாற்றிக்கொண்டான். பிக்குகளை யும், அவர்கள் கூறிய சபதத்திற்கிணங்க கழுமரம் ஏற்றினானென்பது வரலாறு கூறும் உண்மை. வன்னி ஒட்டுசுட்டான் ஆலய கல் மாடு அறுகம்புல் தின்று, சாணியும் போட்ட அதிசயத்தைக் கண்ணுற்ற போர்த்துக்கீசப் பிரதானி, சைவக் கோயில்களை இடிப்பது மாத்திரமன்றி ஒட்டுசுட்டான் ஆலயத்தையும் புனருத்தாரணம் செய்ய பெருநிதி வழங்கினான் என்பது வரலாற்று உண்மை. யாழ்ப்பாணத் தில் செல்லப்பா சுவாமி, யோகர் சுவாமி, கடையிற் சுவாமிகள் தோன்றி சித்துகள் பல செய்து சைவ சமயத்தை உலகுக்கு அறிய வைத்தனர். இன்னும் ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலர் தோன்றி சைவ சமயத்தின் உண்மையை உணரவைக்க கிறீஸ்தவ சம யக் குருமாரின் பொய் பிரசாரங்களுக்கு தக்க பதிலடி கொடுத்து, மக்கள் சமயம் மாறுவதைத் தடுத்து நிறுத்தினார். சைவ சமயத்தின் உண்மையைப் பேச்சினாலும் எதிர் கண்டனப் பிரசுரங்களாலும் தக்க பதில் கொடுத்து சைவமும் தமிழும் மணங் கமழ வைத்தார். கீரிமுகத்தையுடைய பெண் ணும் குதிரை முகத்தையுடைய பெண்ணும்

*தன்மானமே ஒழுக்கத்தின் அடிப்படை.*

கீரிமலைக் கேணியில் நீராடி கீரிமுகமும், குதிரை முகமும் நீங்கப்பெற்றார்கள் என்பதையும் மாவிட்டபுரம் ஆலயம் கட்டப் பட்டதென்பதையும் மக்கள் நன்கு அறிவர். இந்த வரலாற்று உண்மைகளை விஞ்ஞானி கள் ஆராய்ந்து இறையருள் பெற்ற சமயம் சைவசமயம் என்பதை ஏற்றுள்ளனர்.

சைவசமயம் தவிர்ந்த ஏனைய எல் லாச் சமயங்களும் தோன்றிய காலம் உண்டு. அதன் கருத்தாக்களும் உண்டு. ஆனால் சைவ சமயத்திற்கு தோன்றிய காலமோ, தோன்றக் காரணமானவர்களோ இல்லை. எப் போது தோன்றிய வரலாறோ இல்லை. அப்பர் சுவாமிகள் கைலாயத் திருத்தாண்டகத்தில் எமது சமயக் கடவுளை "மூவாய் பிறவாய், இறவாய் போற்றி, முன்னமே தோன்றி முளைத் தாய் போற்றி" என விளக்கியும் ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியென மாணிக்கவாசக சுவாமிகள் இறைவனைப் போற்றியுள்ளார். திருவண்ணாமலையின் உச்சி யில் இருந்து குதித்து, இறக்கத் துணிந்த அருணகிரிநாதரை முருகன் இருகைகளாலும் ஏந்தி "அருணகிரி நீ இறக்கவேண்டியதில்லை என் புகழைப் பாடி "முத்தைத்தரு" என அடியையும் எடுத்துக் கொடுத்தார். தான்விட்ட தவறுகளையும் தன்னை முருகன் ஆட்கொண் டதையும் உய்ய உணர்ந்து, கந்தரலங்காரம், கந்தர் அநுபூதி, திருப்புகழ் ஆகியவைகளைப் பாடியருளினார்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வங் களாக செல்வச்சந்நிதியான், கதிர்காமக் கந்தன் விளங்குகின்றனர். அடியார்கள் வெள்ளிக்கிழமைதோறும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆலயம் சென்று நீராடி, வீதிவலம் வந்து சந்நிதியான் விபூதியை உடம்பெங்கும் பூசி, நோய்களைக் குணப் படுத்திக் கொள்ளுகின்றனர். அன்னக்கந்தன் அமுதை உண்டு பசியைப் போக்குவதுடன், அவன் அருளையும் பெற்றுக்கொள்ளுகிறார் கள். அடியார்கள் உச்சியில் விபூதி பூசகர் போடுவது வினைகள் களையப்பட்டு நோய் அற்றவனாக வாழ அருள் பிறக்கின்றது. இதன் உண்மையை உணர்ந்து அடியவர்கள் பூசகர் பாதம் பணிந்து, விபூதியை உச்சியில் பெற்று பேரானந்தம் அடைகின்றனர். கதிர் காமத்தில் மாணிக்க கங்கையில் நீராடி ஈர உடையுடன் மலை ஏறி உச்சிக் கந்தனுக்கு அவல் படைத்து, அடியார்களுக்கு பகிர்ந்து அளித்து அளவிலா ஆனந்தம் அடைகின் றனர். கதிர்காமக் கந்தன் விபூதியைப் பைகளில் வாங்கிக்கொண்டு வீடு வருகின் றனர்.

யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழை துர்க்காதேவி அம்மன் ஆலயம் நாலுபக்க கோபுரங்கள் கொண்டவையாகவும், ஆறு காலப் பூசை நடைபெறும் தலமாகவும் விளங்குகின்றது. அன்னை தங்கம்மா அப் பாக்குட்டி அவர்களின் பெரு முயற்சியால் ஆலயமும், அநாதை இல்லமும் சிறப்புற்று விளங்குகின்றது. அன்னை இறைபதம் அடைந்தபின் ஆறு. திருமுருகன் தலைவர் அவர்களின் விடாமுயற்சியால் ஆலயம் வளர்வதுடன் ஆலய நிதிகளும் பொதுச் சேவைகளுக்கு அன்பளிப்புச் செய்கிறார்கள் என்பதை உணர்ந்து மக்கள் பணத்தை வாரி வழங்குகின்றனர். அநாதை இல்லங் களில் வாழும் பெண் பிள்ளைகளுக்கு விவாகம் செய்து வீடு வழங்குகிறார்கள். வெளிநாட்டில் வாழும் அடியவர்கள், பொன் னும் பொருளும் வழங்குகிறார்கள். இந்த உண்மைகளை மற்ற சமயத்தவரும் ஆராய்ந்து அறிந்து இறை அருள் பெற்ற சமயம் சைவசமயம் ஒன்றேயாகுமென ஏற்றுள்ளார்கள்.

*நமது மனதில் தூய்மை அதிகமாக இருந்தால் வலிமை அதிகமாக இருக்கும்.*

# திருமந்திரம் காட்டும் வாழ்க்கை நெறி

– **திரு கு. சிவபாலராஜா**அவர்கள் –

"இல்லறமே நல்லறம்" என்னும் கருத்து இங்கு கவனிக்கற்பாலது. வாழ்க்கை ஒரு நெறி. அது வறட்டுத்தனமான கோட்பாடு அல்ல. மனிதனில் வாழும் தீமையை ஒழித்தால் துன்பம் தொலையும். திருமூலநாயனார் அருளிய திருமந்திரப் பாடல்களில் எமது வாழ்க்கை நெறிபற்றிய பல சிறப்பான கருத்துக்கள் எமக்குப் பயன் செய்வதாய் அமைந்துள்ளமையால், அவைபற்றி இங்கு நோக்குதல் சிறப்பு. திருமூலர் ஒரு மறைஞானி. திருவள்ளுவர் ஒரு சான்றோன். இவ்விரு நாயன்மார்களும் இல்லறம் பற்றி தமது நோக்கிலே பாடியுள்ளனர். இல்வாழ்வானுக்குரிய ஒழுக்கம் பற்றிய திருமூலர் கருத்தாவது, "பிறர்மனை நயவாமை" என்னும் பகுதியில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

**ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே**
**காத்த மனையாளைக் காமுறும் காளையர்**
**காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்**
**ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே.**

-திருமந்திரம் 201.

இத் திருமந்திரத்தில் "அயலார் மனைவியை விரும்பாமை" பற்றிக் கூறப்பட்டுள்ளது. பிறர் மனைவியை நாடுவதும் நம் அறியாமைகளில் ஒன்றுதான். அறியாமை மிக்க மக்கள் பலர் வாழும் உலகில் தெரியாமல் செய்யும் தவறுகளே அதிகமாகியுள்ளது. திருமூலர் இம் மந்திரத்தில் இலகுவான உதாரணங்கள்மூலம் பிறர் மனை நயவாமை பற்றி தெளிவுறுத்தியுள்ளார். "ஆத்த மனையாள்" என்பது அறம் முதலிய நால்வகை நெறிகளையும் இல்லறத்தான் மேற்கொண்டு ஒழுகுவதற்கே இல்லாள்- மனைவி அகத்து அமைந்து வாழ்கிறாள். அவளோடு இல்லறம் நடாத்துவது ஆடவர் கடமை என்பது இங்கு துணியப்பட்டுள்ளது. "காளையர்"- என்பதும் ஆடவரையே குறிக்கும். அயல்வீட்டு மனைவி என்பதுவும் கூறப் பட்டுள்ளது. எனவே அயல்வீட்டுப் பழக்கடையில் கிடைக்கக்கூடிய உண்ணப் போதாத, அற்பமான ஒருவகை ஈச்சம்பழத்தை உண்ண விரும்பி அங்கே சென்று அதனால் இடருற்று துன்பம் அனுபவிப்பதை விட, தனது தோட்டத்தில் பழுத்துக் குலுங்கும் இனிய பலாப்பழத்தை சுவைத்து மகிழ்வதே சந்தோசம் தரும் செயல் எனக் கூறியுள்ளார். திருமூலர், இயற்கையாய்ப் பழுத்த பலாப்பழம் மிக்க சுவையுடையது. செயற்கையாய் பழுத்த பழம் சுவை குறைவாகவே உள்ளது என்பதைக் கூற வந்த நாயனார் காய்ச்ச (காய்த்த) பழம் எனக் கூறியுள்ளார். ஈச்சம் பழம் கிடைக்கக்கூடிய இயற்கையான இடம் பற்றைகளும் முட்களும் நிறைந்துள்ள காடுகள் ஆகும். எனவே பிறர்மனை நயப்பார் அறத்தை மட்டுமன்றி தாம் கருதிய இன்பமும் பெறாமை இங்கு நோக்கத்தக்கது.

***விதியின் முன் கெஞ்சாமல் எதிர்த்து வேலை செய்வதே மனித சுதந்திரம்.***

அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்.

-குறள் 146.

திருத்தி வளர்த்ததோர் தேமாங்கனியை
அருத்த மென் றெண்ணி அறையிற் புதைத்துப்
பொருத்த மிலாத புளிமாங் கொம் பேறிக்
கருத்தறியாதவர் காலற்றவாறே.

-திருமந்திரம் 202.

தேமாங்கனி என்பது இனிய மாம்பழமாகும். அத்தகைய இனிய சுவைமிக்க மாம்பழத்தை; இது சரியில்லாத மாம்பழம், குறையுடையது எனக் கருதி, அதை வீட்டினுள்ளே புதைத்து வைத்துவிட்டு, அயல்வீட்டார் வளர்த்து வைத்த புளிமாமரத்தின் கிளைமீதேறி அதன் நுனிக்கொம்புவரை சென்று, அதில் காணப்படும் புளி மாம்பழங்களைப் பறித்துண்ணுதல் கருதி, இறுதியில் நுனிக் கொம்பு முறிந்து, ஏறியவர் நிலத்தில் வீழ்ந்து அவர் கால் முறிந்த கதைபோல ஆகுமாம். இதன் பொருள், மாமரத்தை நடுகை செய்து, பசளையிட்டு, நீர் வார்த்து, ஒழுங்காக நிலம் பண்படுத்தி வளர்த்தது போலவே தன் மனைவியையும் இல்லறத்தான் பேணியிருப்பான். கணவன், மனைவி இணைந்த வாழ்வில் உண்டி முதலியன முறையாகப் பரிமாறப்பட்டு, உபசரிக்கப்பட்டு, ஒருவர்க்கொருவர் ஒற்றுமையாக வாழ்ந்த முறை பற்றியே, இங்கு மனைவி தேமாங்கனியாகச் சுட்டப்படுகின்றாள். மறுதலையாகவும் அயல் வீட்டார் மனைவியை புளிமாமரமாகவும், தேமாங்கனியைப் பிறர் கொள்ளாமை கருதி அறையில் புதைத்தார்கள். ஆனால். அதுவும் புதைத்தலால் கெட்டுப் போகும் என்பதும் உண்மையே. காலறுதல்- என்பதும் அயல்வீட்டு ஆடவனால் இவனது கால் ஒடிக்கப்படவும் கூடும்.

இவ்விரு மந்திரங்களாலும் எமது வாழ்க்கைக்குத் தேவையான ஆலோசனைகள் கூறப்பட்டுள்ளன. இளமை நிலையற்றது. இந்த இளமைக் காலமானது முப்பது வயதை அடையுமட்டுமே நிலைக்கும். பின் முதுமையடைவர் என்பதும் ஆன்றோர் கருத்தாகவுள்ளது. எனவே இளமை இருக்கும் மட்டுமே ஒருவர்க்கு வாழ்வு பரிணமிக்கும். பின்னர் மேற்குத் திசையில் வீழ்ந்து மறையும் சூரியன் போல இளமை கழிந்துவிடும்.

விரும்புவர் முன்னென்னை மெல்லியல் மாதர்
கரும்பு தகர்த்துக் கடைக் கொண்ட நீர்போல்
அரும்பொத்த மென்முலை ஆயிழையார்க்குக்
கரும் பொத்துக் காஞ்சிரங் காயும் ஒத்தேனே.

-திருமந்திரம் 179.

முதுமை வெறுக்கத்தக்கது என்றே பாடியுள்ளார். ஒரு மனிதனின் சுயசரிதக் கதைபோல அமைந்துள்ளது இப்பாடல். இன்று நான் எட்டிக் கனிபோல, காஞ்சிரை போல ஒரு புறத்தில் இளமையை இழந்து ஒதுக்கமாக வாழ்கிறேன் என்பதைப் பரிதாபத்துடன் கூறியுள்ளார். கருப்பஞ் சாற்றின் இனிமையை ஒருமுறை சுவைத்தவர் நன்கறிவர். அதுபோல் கரும்பாக இருந்த நான் இன்று இளம் பெண்கள் மத்தியில் காஞ்சிரைப் பழமாக, நஞ்சாகப் பிரயோசனமற்றுக் காணப்படுகின்றேனே. இது என்ன பரிதாபம்? நாணம் அடைகின்றேன்.

*ஆயிரம் அறிவுரைகளை அள்ளி வீசுவதைவிட ஓர் அரிய செயலைச் செய்தல் நலம்.*

துயரடைகின்றேன். இன்பச் செருக்கு இளமையோடு ஒழிந்துவிட்டது. முதுமைக் காலத்தில் புதல்வரால் அல்லது பெயரரால் வெறுக்கப்படுதல் நாம் கண்கூடாகக் காணும் நிகழ்வாகும். இளைஞர்கள் இளமைக் காலத்திலேயே தமக்குரிய சில உயிர்க்கு உறுதியான நிலைமைகளை உண்டாக்கிக்கொள்ள வேண்டும். அன்றேல் பின்னர் வருந்துதல் வேண்டும். அப்பர் சுவாமிகள் பின்வருமாறு அருளிச் செய்துள்ளார்.

**"தளையவிழ் கோதை நல்லார் தங்களோடின்பமெய்த**
**இளையதுமல்லேன் எந்தாய் என் செய்வான் தோன்றினேனே"**

இப்பாடல் வரிகளைக் கொண்டு அப்பர் சுவாமிகள் மகளிர் இன்பத்தை இழந்துவிட்டமை பற்றி கழிவிரக்கம் கொண்டார் என எண்ணுதல் தவறாகும். அவ்வாறு எண்ணுவோர் தமது வசதிகருதிக் கருத்துரைக்கும் மாந்தர் என்றே கொள்ளுதல் வேண்டும்.

**புடவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை**
**அடையப்பட்டார்களும் அன்பில ரானார்**
**கொடையில்லை, கோளில்லை, கொண்டாட்டமில்லை**
**நடையில்லை நாட்டில் இயங்குகின்றார் கட்கே.**

-திருமந்திரம் 209.

வறுமை (நல்குரவு) யின் கொடுமை பற்றித் திருமூலர் அருளிய கருத்து மேலுள்ள மந்திரத்தால் பெறப்பட்டது. தாம் அணிந்திருக்கும் ஆடையானது கிழிந்த நிலையில் பயன்பாடற்றுக் காணப்பட்டால், அவரது வாழ்க்கையும் வறுமையுற்று பயனில்லாது போய்விடும். அதுவரை அவரோடு சேர்ந்திருந்த உறவினர்களும் அவருடன் அன்பு இல்லாது அகன்று போய்விடுவர். அவருடனான கொடுக்கல் வாங்கல்களும் இல்லாமல் போய்விடும். அவருக்கு மகிழ்ச்சியில்லா வாழ்வுதான் இருக்கும். அவர் நடைப்பிணமாகவே திரிவார். அவரது இல்லத்தில் யாதொரு விழாக்களும் நடைபெறமாட்டாது. ஆகையால் நாட்டுடன் ஒட்டிய "ஏறுபோல் பீடு நடை" இல்லை. எனவே புடவை கிழிந்தது என்பது "வறுமை வந்தது" என்பதனை உணர்த்தியுள்ளது. "இல்லானை இல்லாளும் வேண்டாள், மற்றீண்டு எடுத்த தாய் வேண்டாள்"- என நல்வழியில் ஔவையார் கூறியுள்ளார். எவ்வளவு வறுமை வரினும் அதனால் உள்ளம் திரிபடையாத நிலை ஒருவர்க்கு வேண்டும். ஏனெனில் உள்ளம் திரிபடையா நிலை மிக அருமையானதொரு நிலையாகும்.

இனி, சிவனடியார் பெருமைபற்றித் திருமூலர் கூறியுள்ளார். கோவில் அன்னதானம் முதலிய நிகழ்வுகளை மகேசுர பூசை என்று திருமூலர் கூறியுள்ளார். இச்செயல் இறைவனுக்கு உணவு படைப்பதாகும். இதில் உணவு அருந்துவோர் சிவனடியார்கள். ஆயினும் அடியார் ஏற்பது இறைவன் ஏற்பதை ஒத்தது என்பதை அறியாதவர்களும் உள்ளனர். இது கருதியே திருமூலர் பின்வரும் திருமந்திரப் பாடல்மூலம் நமக்கு உணர்த்தியுள்ளார்.

**படமாடக் கோயில் பரமற்கு ஒன்று ஈவர்**
**நடமாடு அக்கோயில் நம்பர்க்கு ஒன்று ஈவீர்**
**நடமாடு அக்கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயின்**
**படமாடக் கோவிற் பரமற்கு அது ஆமே.**

-திருமந்திரம் 1836.

*அளவில்லாத வேதனைகளைத் தாங்கிக்கொண்டு சாதனை படைக்கிறவன்தான் மேதை.*

ஓவியம்போல அழகாக விளங்கும் மாட மாளிகையுள்ள கோயிலில் வீற்றிருக்கும் பரமனுக்குப் படையல் எதுவும் சென்று சேரவேண்டுமெனில் அவற்றினை அடியார்கள் அருந்த வேண்டும் என்று கூறியுள்ளார் திருமூலர். எனவே மாடக் கோயிலல்ல; நம்பர்களாகிய அடியார்கள் அதைவிட மேலான தெய்வங்கள் என்று கூறியுள்ளார். சிவனடியார்கள் நடமாடும் கோயில்கள் என்பதை மறவாதிருப்போமாக. இங்கு சிவனடியார்களின் பெருமைபற்றி அறிந்தோம்.

மனித உடலில் உள்ள ஐம்பொறிகளாகிய கண், மூக்கு, வாய், செவி, உடல் என்பன நமக்குச் சிறந்த பயனையே தருவனவாகும். ஆனால் அவை சிறந்த வழிநடாத்தும் குரு இன்மையால், அவை தம் இச்சையாய்ப் புலன் வழிச் சென்று தன் வழியில் அலைவதை அறிகின்றோம். அவைகட்கு ஒரு தகுதியான குரு வாய்க்கப் பெறுதல் வேண்டும். குருவும் வாய்த்து, புலன் இச்சைகளும் அடங்கினால் அவையே நமக்கு நல்லின்பம் தருவனவாக மாறிவிடும். புலன் இன்பம் என்பது புலன் இன்பம் மட்டுமே. அது ஆன்ம இன்பமாக இல்லை ஆனாலும் அதை ஆன்ம இன்பமாக மாற்றியமைக்கவும் முடியும்.

எனவே குருவின் துணையின்றி எதுவும் உரியவாறு நடைபெற மாட்டாது என்பதை திருமூலர் பின்வரும் திருமந்திரத்தின்மூலம் விளக்கியுள்ளார்.

**பார்ப்பா னகத்திலே பாற்பசு ஐந்துண்டு**
**மேய்ப்பாரு மின்றி வெறித்துத் திரிவன்**
**மேய்ப்பாரு முண்டாய் வெறியு மடங்கினாற்**
**பார்ப்பான் பசுவைந்தும் பாலாச் சொரியுமே.**

-திருமந்திரம் 2884.

"பார்ப்பான்" எனப்படுவது ஆன்மாவைக் குறிக்கும். சிவமே குருவாக வந்து ஆன்மாவைச் செலுத்துபவர்.

இறைவனுக்கு எங்கும் கண் உள்ளது. அதனால் அவன் எல்லோரையும் எப்போதும், எவற்றையும் நேரில் பார்ப்பது போன்று பார்த்துக் கொண்டிருக்கின்றான். "மேலே ஒருவன் இருக்கிறான்" என நாம் துன்புறும்போது நமக்குள் பேசிக்கொள்கிறோம். திருமூலர் தமது திருமந்திர நூலில் "கூடாவொழுக்கம்" எனும் பகுதியில் பின்வரும் திருமந்திரத்தை பாடி விளக்கியுள்ளார்.

**கண்காணி இல் என்று கள்ளம் பல செய்வர்**
**கண்காணி இல்லா இடம் இல்லை, காணுங்கால்**
**கண்காணி யாகக் கலந்து எங்கும் நின்றானைக்**
**கண்காணி கண்டார் களவு ஒழிந்தாரே.**

-திருமந்திரம் 2043.

"கூடாவொழுக்கம்" என்பது தவத்திற்குப் பொருந்தாத ஒழுக்கம் என திருவள்ளுவர் தனது கூடாவொழுக்கம் என்னும் அதிகாரத்தில் விளக்கியுள்ளார்.

**வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்.**

-குறள் 271.

*நிதானமாகத்தான் சிந்திக்க வேண்டும். ஆனால் விரைவாகச் செயற்பட வேண்டும்.*

இறைவனுக்கு ஒழித்து நாம் எதையும் செய்ய முடியாது. எல்லாம் அவனறிவான். வஞ்ச மனமுடையவனது தீய ஒழுக்கத்தைப் பிறர் அறியாராயினும் இறைவன் அறிவான். அதனால் அவனுள்ளேயுள்ள ஐந்து பூதங்களும் தனக்குள்ளே சிரிக்கும் (நகும்) என்பது வள்ளுவர் கருத்தாகும்.

திருமூலர் கருத்துப்படி, நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் மேற்பார்வை செய்பவன் இறைவன் என்பதை நாம் அறியவேண்டும். வஞ்சனை செய்யினும் அவன் அறிவான். நன்மை செய்யினும் அவனறிவான். இறைவன் எங்கும் நிறைந்தவர். ஒவ்வொரு பொருளும் தன் உடமை என்று அவற்றின் உள்நின்று இயக்குபவன் இறைவனே. மனிதர் தமது புறக்கண்களால் இறைவனைக் கண்டவர் வஞ்சனை செய்யார். கண்களால் காணும் உரிமை உடையவர் "கண்காணி" எனப்படலாம்.

நீதிநூல்களைப் படித்துணர்தல் என்பது அரசர்களுக்கு வேண்டப்படுவது. அரசர்கள் மக்களை ஆள்வோர். எனவே, கல்வி அறிவென்பது அவர்க்கு மிக அவசியமாயுள்ளது. திருமூலர் "இராச தோடம்" என்னும் பகுதியில் பின்வரும் திருமந்திரத்தைப் பாடி, படிப்பறிவில்லாத அரசர் எவ்வாறு அமைவர் என்பதை விளக்கியுள்ளார்.

**கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்**
**கல்லா அரசனிற் காலன் மிக நல்லன்**
**கல்லா அரசன் அறம் ஓரான் கொல் என்பான்**
**நல்லாரைக் காலன் நணுக நில்லானே.**

-திருமந்திரம் 238.

கற்கவேண்டிய பாடங்களான நீதி நூல்களை அரசன் கட்டாயம் கற்க வேண்டும். அவ்வாறு கற்கவில்லையாயின் அவ் அரசன் இயமனுடன் ஒப்பிட்டுக் கூறத்தக்கவராகின்றார். அவ்வாறு இருவரையும் ஒப்பிட்டுப் பார்க்கின், கல்வியறிவு இல்லாத அரசனைவிட இயமன் (யமன், எமன்) மிக நல்லவன். ஏனெனில் கல்வியறிவு இல்லாத அரசன் அறவழியில் சிந்தித்து ஆராயாது உடனேயே கொல் எனவும் கட்டளையிடுவான். ஆனால், அறவழியில் நிற்பவரை இயமன் அணுக மாட்டான். அரசாட்சி முறையில் இது முக்கியமானது. அரசர்க்கு நீதிநூற் கல்வி இன்றியமையாதது. கொல் என்பது கொலைத் தண்டம் விதிப்பது என்பதை அறிவோம்.

**கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

குறள் 391.

இவ்வுலகில் உள்ள இன்பங்கள் அனைத்தும் அழியக்கூடியவை. எல்லா இன்பங்களும் இறுதியில் துன்பத்தையே தரும். இவையெல்லாம் நம் அறிவிற்குத் தெரிந்தபோதிலும் நாம் இன்பத்தையே நாடுகிறோம். இதற்கு முடிவுதான் என்ன? கடவுளை நினைத்து வழிபட்டாலன்றி ஆசைகளில் இருந்து விடுபட முடியாது. எல்லா இன்பங்களையும் அனுபவித்துவிட்டு, இறுதியில் இறைவனை அடையலாம் என்றால் காலம்தான் கடந்து போகும். ஒரு மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் எதை நினைத்துக்கொண்டிருக்கிறானோ அதை இறக்கும் தருவாயிலும் நினைப்பான். இல்லறத்தில் உள்ளவன் குடும்பத்தைப்பற்றி நினைக்கின்றான்.

*எச்சரிக்கை ஒருபோதும் தவறுக்குத் துணையாக நிற்பதில்லை.*

# குருபக்தியின் மகத்துவம்

– திரு காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள் –

ஆயோததௌம்பர் என்ற முனிவருக்கு உபமன்யு என்ற சிஷ்யன் இருந்தான். முனிவரின் பசுக்களை மேய்ப்பதும் அவற்றைப் பராமரிப்பதும் அவனது வேலை. அதுமட்டுமல்ல தினமும் தனது குருவிற்காக உபமன்யு யாசகம் செய்து வருவான். சமைத்துக் கொடுப்பான். ஆனால் உபமன்யுவுக்குக் கொஞ்சமும் கொடுக்காமல் தானே எல்லாவற்றையும் உண்டுவிடுவார் முனிவர்.

"நீ எப்படி திடகாத்திரமாக இருக்கிறாய்?" என்று குரு ஆச்சரியமாகக் கேட்கவும், உபமன்யு "நான் மறுபடியும் யாசித்து வந்து சமைத்துச் சாப்பிடுகிறேன்" என்றான். யாசகம் அளிப்பவர்களை இப்படித் துன்புறுத்துவது நல்லதல்ல. அதனால் ஒரு தடவை போனால் போதும் என்று ஆணையிட்டார்.

அப்படியிருந்தும் உபமன்யு திடகாத்திரமாக இருப்பதைக் கண்டு வியந்து "இதெப்படி சாத்தியம்?" என்று கேட்கிறார் குரு. "பசுக்களிலிருந்து கறக்கும் பாலைக் குடித்து வாழ்கிறேன்" என்றான் உபமன்யு. "பசுக்கள் என்னுடையவை அந்தப் பாலை நீ குடிக்கக் கூடாது" என்றார் குரு கோபமாக. நாட்கள் சென்றன உபமன்யு இன்னும் திடகாத்திரமாக இருப்பதைக் கண்ட குரு "என்ன காரணம்?" என்று கேட்கவும் "பால் குடித்த கன்றுகளின் வாயில் வடியும் நுரையை உண்டு உயிர் வாழ்கிறேன்" என்று பதில் அளித்தான் உபமன்யு. "உனக்காகவே அவை கொஞ்சம் பாலை அவைகளின் வாயின் ஓரத்தில் தள்ளிவிடுகின்றன. அதனால் கன்றுகளின் பசி முழுமையாக அடங்கவில்லை. பாவம்! அவைகளைத் தொந்தரவு செய்யாதே" என்று உத்தரவு கொடுத்தார் குரு.

வேறு வழியின்றி உபமன்யு எருக்கம் இலைகளை உண்டு வாழ்ந்தான். காலப்போக்கில் அவனது கண்கள் குருடாகி பார்வை இழந்தான். ஒருநாள் மாடு மேய்க்கும்போது காட்டில் ஒரு கிணற்றுக்குள் விழுந்து விடுகின்றான்.

வெகுநேரம் வரையில் உபமன்யு வீடு திரும்பாததை அறிந்த குரு அவனைத் தேடிக்கொண்டு காட்டிற்குள் வந்தார். "மாடுகள் திரும்பி விட்டனவே! இவன் எங்கே?" என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டிருந்தார்.

கடைசியாகக் கிணற்றில் அவனைக் கண்டதும் அவனுக்குக் கண் தெரியாததினால் தவறி விழுந்துவிட்டான் என்பதையும் உபமன்யுவிடமிருந்து அறிந்து கொண்டார். அவன்மீது கருணைகொண்டு தேவர்களின் வைத்தியர்களான அஸ்வினி குமாரர்களை நோக்கி ஒரு ஸ்துதி சொல்லச் சொன்னார்.

அஸ்வினி குமாரர்கள் உபமன்யுமுன் தோன்றி அதிரசம் ஒன்றை அளித்து "இதைச் சாப்பிடு உனது கண் பார்வை திரும்பிவிடும். நீ மீண்டும் திடகாத்திரமாகி விடுவாய்" என்றார்கள். "எனது குருநாதருக்கு அர்ப்பணம் செய்தபின்பே நான் உண்ணவேண்டும்!" என்று உபமன்யு கூறியவுடன், "முன்பு ஒரு சமயம் உனது குருநாதரும் இப்படித்தான் எங்களை நோக்கித் தவமிருந்தார். நாங்களும் அவர்முன் தோன்றி அதிரசம் கொடுத்தோம். ஆனால் அவர் அவரது குருநாதருக்குக் கொடுக்காமலேயே உண்டுவிட்டார். அதனால் நீயும் அவ்வாறே செய்" என்று அஸ்வினி குமாரர்கள் உபமன்யுவின் குருபக்தியைச் சோதிக்கக் கூறினார்கள்.

ஆனால் உபமன்யு "தயவுசெய்து என்னை மன்னித்து விடுங்கள். பெரியவர்கள் செய்யும் குற்றங்களை நாம் கவனிக்கக் கூடாது. எனது குருவுக்குக் கொடுக்காமல் என்னால் சாப்பிட முடியாது!" என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டான்.

அஸ்வினி குமாரர்களும் உபமன்யுவின் குருபக்தியை மெச்சி அவனுக்கு ஆரோக்கியமும், கண்பார்வையும் கொடுத்தார்கள். முனிவரும் மனம் மகிழ்ந்து அவனுக்கு எல்லா வித்தைகளும், வேதங்களும் படிக்காமலேயே பாடமாக வேண்டும் என்று ஆசீர்வதித்தார்.

*சான்றோருக்கு அளிக்கும் கௌரவம் கடவுளுக்குச் செய்யும் மரியாதை.*

# ஆடி மாத வாராந்த நிகழ்வுகள்

05.07.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு:- "கந்தபுராணத்தில் கஸ்தம்"

வழங்குபவர் :- திரு சி. உமாசுதன் அவர்கள்

(யோகா போதனாசிரியர்)

---

12.07.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

19.07.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு:- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

26.07.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**ஞானச்சுடர் ஆடி மாத வெளியீடு**

259ஆவது மலர்

வெளியீட்டுரை :- செல்வி தயாளினி குமாரசாமி அவர்கள்

(பல்கலைக்கழகம் - பேராதனை)

மதிப்பீட்டுரை :- திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்கள்

(சைவப்புலவர், ஆசிரியர்)

பதிவு இல. QD/10/NEWS/2019

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

